திருக்கோயில்

(174)
OFFICE OF THE STATE EDITOR
74/Gn/73
21 APR 1973

என் கடன்
பணிசெய்து கிடப்பதே

மாலை 15] பரிதாபி — பங்குனி, சித்திரை — ஏப்ரல், 1973 [மணி 7

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசி

7. திருநெல்லிக்கா (வல்) திருநெல்லிவனநாதர் திருக்கோயில் திருப்பணிக் கால்கோள் விழாவில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பர் அவர்கள் (18—1—73).

பொருளடக்கம்

1. கச்சியப்பர் கவிநலம்
2. அறநிலைய சட்ட நிர்வாகம்
3. அழுகையும் ஆன்மீக வாழ்வும்
4. வாழும் நெறி
5. திருஈங்கோய் மலைக்காட்சிகள்
6. இராமனும் கோவிந்தனும்
7. அவையடக்கம்
8. நீர்வண்ணன்
9. சம்பந்தரும் பௌத்தமும்
10. மயிலையின் மாட்சி
11. சித்திரைப் பௌர்ணமியில் சிலப்பதிகாரக் கலைக்கூடம்
12. அறநிலையத் துறையின் ஆக்கப் பணிகள்
13. கடவுளின் கருணைத்திறன்
14. திருக்கழுக்குன்றத் தலபுராணம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை. சென்னை —34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.



மாலை 15] பரிதாபி — பங்குனி, சித்திரை — ஏப்ரல் 1973 [மணி 7

கச்சியப்பர் கவிநலம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

ஒரு பெரிய நகரம் அல்லது தலத்திற்குச் சென்றால், அங்கு அது குறித்து நமக்குப் பல வகையான எண்ணங்களும் நினைவுகளும் எழுதல் இயல்பு. சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருக்கோலக்கா என்னும் தலத்திற்குச் சென்றார். சென்றதும், இங்கு அன்றோ இறைவன் நமது திருஞானசம்பந்தப்பெருமானுக்குப் பொற்றாளம் அளித்தருளினார் என்று நினைவு கூர்ந்தார். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தனுக்கு உலகவர்முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்" என்று இறைவனைப் புகழ்ந்து பாடினார். திருவீழிமிழலைக்குச் சென்றபோது, இங்கு அன்றோ சிவபெருமான் திருநாவுக்கரசருக்கும் திருஞான சம்பந்தருக்கும் நித்தலும் படிக்காசு கொடுத்தருளினார் என்று நினைவு கூர்ந்தார். "இருந்து நீர் தமிழோடு இசைகேட்கும் இச்சையாற் காசு நித்தல் நல்கினீர் , அருந்தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே" என்று துதித்து வேண்டிக்கொண்டார். திருவாரூர்க்குச் சென்றபோது, அங்கே திருஞானசம்பந்தப்பெருமான் "எந்தை தான் எனை என்று கொளும் கொலோ?" எனப் பாடியதனை நினைவுகூர்ந்து, அதனைப் பின்பற்றித் தாமும், "எந்தை இருப்பதும் ஆரூர், அவர் எம்மையும் ஆள்வரோ! கேளீர்" என்று அருளிச் செய்தார்.

இவ்வாறே, திருநாவுக்கரசர் திருவாவடுதுறைக்குச் சென்றபோது, இங்கு அன்றோ திருக்கழுமலம் என்னும் தலத்தில் தோன்றியருளிய திருஞானசம்பந்தருக்குச் சிவபிரான் அம்பொன் ஆயிரம் கொடுத்தருளினார் என நினைந்து வியந்து, "காயரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல ஊரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே" என்று அருளிச் செய்தார். இங்ஙனமே திருஞானசம்பந்தப் பெருமானும், தாம் திருவாலங்காடு என்னும் தலத்திற்குச் சென்றபோது, தமக்கு முன்னே வாழ்ந்திருந்த காரைக்கால் அம்மையாரை நினைவு கூர்ந்து, "அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம்" என்று, அதனை மிதிக்க அஞ்சி, அப்பதியின்பால் ஒரு செழும்பதியில் அன்று இரவு பள்ளி சேர்ந்தார். இன்னோரனைய நிகழ்ச்சிகளால், நாம் ஒரு தலம் அல்லது நகரத்திற்குச் சென்றால், அங்கு வாழ்ந்திருந்த பெரியோர்களை நினைத்தும் மதித்தும் வணங்கிப் போற்றுதல் வேண்டும் என்பது பெறப்படும்.

---

* காஞ்சிபுரத்தில், திருவேகம்பநாதர் கோயிற் பங்குனியுத்தரப்பெருவிழாவில்,வெள்ளித்தேர்ச் சிறப்புத் திருநாளில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (14—3—73)

— ஆசிரியர்

SL Q2m24,N59TK
148708

காஞ்சிபுரம் :

இம்முறைமைக்கு ஏற்ப நாம் காஞ்சிபுரத்தை நினைக்கும்போது நமக்கு எத்தனையோ பல எண்ணங்களும், எண்ணற்ற பல பெரியோர்களின் நினைவுகளும், இயல்பாக எழாநிற்கும். அந்நினைவுகளும் எண்ணங்களும், அவரவர் தம் இயல்புக்கு ஏற்ப அமையும். ஒரேயொரு பொருளையே, பலரும் பலவகைக் கோணங்களில், அவரவரும் தத்தம் மனநிலைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்பக் கருதிக்கண்டு மகிழ்வர். (1). அம்முறைமைக்கு ஏற்பக், காஞ்சிபுரத்தை நினைப்பின், அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்து மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நமக்கெல்லாம் இயல்பாக ஏற்படும். இன்னும் சிறிது நீளநினைந்து உணர்ந்தால், உலகளந்த பெருமாள் கோயிலில் பட்டராக விளங்கித் திருக்குறளுக்கு ஒப்புயர்வற்ற அரும்பெறல் உரையை எழுதியளித்த பரிமேலழகர் பற்றியும், சொன்னவண்ணம் செய்த பெருமாள் (யதோக்தகாரி) கோயிலில் தங்கியிருந்து ஓராண்டு காலம் இராமாநுசர் அருளிய ஸ்ரீபாஷ்யம் என்னும் நூலின் விளக்கச் சொற்பொழிவை நிகழ்த்திய மணவாளமாமுனிகள் பற்றியும்; திருத்தண்கா அல்லது தீபப்பிரகாசர் சந்நிதி என்னும் விளக்கொளி கோயிலின் சூழலில் தோன்றி யருளிய வேதாந்த தேசிகர் பற்றியும்; குமரகோட்டம் என்னும் முருகன் கோயிலில் முப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் பேறுடையவராகத் திகழ்ந்திருந்த கச்சியப்ப சிவாசாரியர் பற்றியும்: மற்றும் எத்தனையோ பல பெரியோர்களைப் பற்றியும், தமிழ் பயின்ற ஆர்வலர் அனைவரும் நினைவு கூர்ந்து இன்புறுவர் என்று சொல்லுதலும் வேண்டுமோ? வேண்டா அன்றே? ஆதல் பற்றியே, திருக்கச்சியேகம்பர் கோயிலில் நடைபெறும் இப்பங்குனி உத்திரப்பெரு விழாவில், இவ்வாண்டு ''கச்சியப்பர் கவி நலம்'' என்பது பற்றிப் பேசுதல், மிக்க பொருத்தமும் சிறப்பும் உடைத்தாகும் என்று எண்ணி, இத்தலைப்பு மேற்கொள்ளப்பெற்றது. இதனை இங்கு ஒரு சிறிது இயன்றவரை ஆராய்ந்து காண்போம்.

கச்சியப்ப சிவாசாரியர் :

கச்சியப்பர் இற்றைக்குச் சுமார் 800 ஆண்டுகளுக்கு முற்பட்டுச், சேக்கிழாருக்குச் சிறிது பின்னரும், கம்பருக்குச் சிறிது முன்னரும் ஆகக் காஞ்சிபுரத்தில் வாழ்ந்திருந்தவர். குமரகோட்டம் என்னும் புகழ்மிக்க காஞ்சிபுரத்துக் கோயிலில் சிவாசாரியராக விளங்கியிருந்தவர். கந்தபுராணம் என்னும் செந்தமிழ்ப் பெருங் காப்பிய நூலைப் பாடியருளியவர். அவர்தம் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல. முருகப்பெருமான் எழுந்தருளியிருத்தல் சிறப்புடைத்தேயாயினும், குமரகோட்டத்திற்கு அதனினும் மிக்க பெருஞ் சிறப்பை விளைவித்திருப்பது, அக்கோயிலில் கந்தபுராணம் இயற்றியருளிய கச்சியப்ப சிவாசாரியர் வாழ்ந்திருந்தார் என்பதேயாகும். தமிழக மக்கள் அனைவருமே கச்சியப்பரை நினைந்து பெருமை கொள்ளலாம் எனினும், காஞ்சி மாநகர மக்கள் அனைவரும் அவரை நினைந்து தனிச் சிறப்பான பெருமிதங் கொண்டு மகிழலாம். கச்சியப்பரை நினைந்து போற்றி நலங்கொள்வது, காஞ்சிபுரத்து மக்களுக் கெல்லாம் தலையாய கடமையாகும்

'' அணிசெய் காவியம்
ஆயிரம் கற்கினும்
ஆழ்ந்தினிது இருக்கும்
கவியுளம் காண்கிலார் ''

எனப் பாரதியார் பாடுவதுபோல, நம்மிற் பலரும் கந்தபுராணத்தை அறிந்திருப்போம். ஆயினும், கச்சியப்பசிவாசாரியருடைய கவியுளத்தின் சிறப்பினைப் பெரும்பாலும் அறிய முயல்வதில்லை. அதனை ஒரு சிறிது அறிய முயலுவதே இங்கு நமது நோக்கம் ஆகும்.

---

(1) '' Seven men went through a field, one after another. One was a *farmer*, he saw only, the grass; the next was an *astronomer*, he saw the horizon and the stars; the *physician* noticed the standing water and suspected miasma; he was followed by a *soldier*, who glanced over the ground, found it easy to hold, and saw in a moment how the troops could be disposed then came the *geologist*, who noticed the boulders and the sandy loam; after him came the *real-estate broker*, who bethought him how the line of the house lots should run, where would be the driveway, and the stables. *The poet* admired the shadows cast by some trees, and still more the music of some thrushes and a meadow lark ''

—**Ralph Waldo Emerson.**

N 73.5.7

கச்சியப்பரும் நக்கீரரும்:

நமது தமிழ் நாட்டில் முருகனடியார்கள், பல கோடிக்கணக்கில், பண்டும் இன்றும் என்றும் இருந்து வருகின்றனர். அவர்களு ளெல்லாம் தலைசிறந்தவர் கச்சியப்பசிவாசாரி யார். பல்லாயிரக்கணக்கான பாடல்களால் முருகனின் வரலாற்றையும், மாட்சிமைகளையும் எடுத்து விளக்கிப் பாடி, நம்மையெல்லாம் முருகப்பெருமானிடத்தில் அன்பு கொள்ளுமாறு செய்து, ஆற்றுப்படுத்தி வருபவர் கச்சியப்பரே யாவர். திருப்புகழ்பாடிய அருணகிரிநாதப் பெருமானுக்கும், சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்து, அவராற் பெரிதும் புகழ்ந்து போற்றப்பெற்றுள்ள முருகன் அடியாரா கிய கச்சியப்பர், தமக்கும் முற்பட்டிருந்த சங்க காலப் புலவர் பெருந்தகையாகிய நக்கீரர் பெருமானைத் தலைசிறந்த முருகன் அடியவரா கவும், தமக்குரிய வழிகாட்டியாகவும் கொண்டி ருந்தார் என்பது, அவர்தம் நூலாற் புலனாகின் றது. கந்தபுராணம் பாடிய கச்சியப்பருக்கு, நக்கீரர் பாடியருளிய திருமுருகாற்றுப்படை, நித்திய பாராயண நூலாக விளங்கியிருந்த மைக்குச் சான்றுகள் பல தெளிவாகக் காணப் படுகின்றன. நக்கீரர்பால் அவர் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும், பின்வரும் கருத்தமைய அவர் பாடியுள்ள அவையடக்கச் செய்யுளால் வெளிப்படுகின்றன.

“ இவ்வுலகத்தைப் படைத்த பிரமதேவன் இங்கே சிவபெருமானைப் பூசித்து வழிபட்டான். அதனாலேயே இந்நகரத்திற்குக் காஞ்சிபுரம் (கா + அஞ்சி. கா — பிரமன் ; அஞ்சி — அஞ்சித்தது, வழிபட்டது) எனக் காரணப் பெயரமைந்தது என்பது தலபுராணம். திருமால் இங்கே கச்சபம் என்னும் ஆமை வடிவில் சிவபிரானைப் பூசித்தார். அதுவே கச்சபேசம் என்னும் கோயிலாக அமைந்துள்ளது. உமா தேவியார் மணலால் இலிங்கம் அமைத்து இங்கு வழிபட்டார். அதுவே திருவேகம்பம் என்னும் கோயிலாக திகழ்கின்றது. இவ்வாறு பிரமன், திருமால், உமாதேவியார் என்பவர் களின் வழிபாட்டை ஏற்றுக் கொண்டருளிய சிவபெருமான், அவற்றை மட்டுமேயன்றி, இவ் வுலகத்தில் வாழுகின்ற இழிந்த எளிய மக்களா கிய நம்மனோரின் வழிபாட்டையும்கூட மருது, மகிழ்ந்துஏற்றுக்கொள்ளுகின்றான்; அதுபோலப், பொய்யடிமையில்லாத புலவர் பெருந்தகை யாகிய நக்கீரர் பெருமான், முதலிய பலராலும் புகழ்ந்து துதிக்கப்பெற்ற முருகப்பெருமான், என்னுடைய சிறுசொல்லையும் கூட, இகழாது இசைந்து ஏற்று மகிழ்ச்சி கொள்ளுவான் என்பதில் ஐயமில்லை ” என்கின்றார் கச்சியப்பர்.

“பொய்யற்ற கீரன் முதலாம்
புலவோர் புகழ்ந்த
ஐயற்கு எனது சிறுசொல்லும்
ஒப்பாகும் ; இப்பார்

செய்யுற்றவன், மால், உமை
பூசைகொள் தேவ தேவன்,
வையத்தவர் செய் வழிபாடும்
மகிழும் அன்றே ”

இதன்கண் நக்கீரரைப் “பொய்யற்ற கீரன்” என்றும்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருமுருகாற்றுப்படை பாடிய முருகன் அடியாராகிய நக்கீரர் பெருந்தகையே, பின்னர் வழி வழியே வாழையடி வாழையாக வந்து தோன்றிய பல்லாயிரக்கணக்கான முருகன் அடியார்களுக்கெலாம் தலைசிறந்த முதல்வராத லின், “கீரன்முதலாம்புலவோர்” என்றும் ; அவர் பாடிய நூல் “பெருஞ்சொல்” அதனை நோக்க யான்பாடும் இந்நூலோ “சிறுசொல் ” என்றும் கச்சியப்பர் விதந்து குறிப்பிட்டருளியுள்ள திறம், நினைந்து நினைந்து மகிழ்தற்குரியதாகும்.

ஆறுபடை வீடுகள் :

ஏனைய பிறகடவுளர் எழுந்தருளி விளங்கும் இடங்களையெல்லாம் தலங்கள் என்றும், க்ஷேத் திரங்கள் என்றும், திவ்விய தேசங்கள் என்றும் குறிப்பிடுவர்: ஆனால் நம் முருகன் எழுந் தருளி வீற்றிருக்கும் இடங்களை மட்டும், “படை வீடுகள்” என்று தனிச் சிறப்பாகக் குறிப்பிடும் வழக்கம் இருந்து வருகின்றது. முருகன் ‘வீரர்களுக்கெல்லாம் ஒரு பெருவீரன்’ ஆதலின், அச் சிறப்பைத் தனித்து இனிது எடுத்து உணர்த்துதற் பொருட்டே, ‘படை வீடுகள்’ என்னும் பரவலான வழக்கம் நிலவி வருகின்றது எனலாம். முருகன் எண்ணில் லாத எத்தனையோ பல தலங்களில் இருக்கின்றா னாயினும், மிக்க பழமையும் பெருமையும் சிறப்பும் உடையனவாகப் போற்றப் பெறும் தலங்கள் ஆறு அவனுக்கு உண்டு. அவற்றையே பெரியோர்கள் “ஆறுபடை வீடு கள்” என வழங்கி வருகின்றனர். அவைகள்

முறையே திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்று தோருடல், பழமுதிர்சோலை என்பனவாகும்.

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர், சங்காலத் தலைமைப் பெரும் புலவராகிய நக்கீரர் பெருந்தகை, முதன்முதலாகப் பாடிய திருமுருகாற்றுப்படையைத் தழுவியே, ஆறுபடை வீடுகள் பற்றிய வழக்காறும், வரிசை முறையும் ஏற்படுவன ஆயின. அவ்வழக்காற்றையும், வரிசை முறையினையும், அங்ஙனமே பிறழாது பின்பற்றித் தழுவிப் போற்றியே, கச்சியப்பர் தமது கந்தபுராணத்தில், கடவுள் வாழ்த்துப் பகுதியிற் பாடியிருக்கின்றார். ஆறுபடை வீட்டின் பெயர்களை, முறையே ஒவ்வொரு பாடலின் ஈற்றடியாகிய நான்காம் அடியில் வைத்து, அதற்கு ஏற்ப மேலே மூன்று அடிகளிலும் பொருத்தமும் திருத்தமும் மிக்க எதுகைத் தொடர்களைச் செவ்விதிற் சிறப்புற அமைத்து, கவிதைநலம் கவினவும், கருத்தமைதியும் கலை நலமும் செறியவும், அவர் பாடியிருக்கும் திறம் மிக்கஅருமைப்பாடு உடையது; அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்து ஆவது எனலாம்.

இருப்பரங் குறைத்திடும் எஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங்குன்றுஅமர்சேயைப் போற்றுவாம். (1)

சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம். (2)

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர வீளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவாம். (3)

நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம். (4)

ஒன்றுதொ ருடலை ஒருவி ஆவிமெய்
துன்றுதொ ருடலைத் தொடங்கி ஐவகை
மன்றுதொ ருடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ ருடிய குமரற் போற்றுவாம். (5)

எழமுதி ரைப்புனத்து இறைவி முன்புதன்
கிழமுதிர் இளநலம் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம். (6)

குமரகோட்டம் :

குமரகோட்டத்தில் அருச்சகராகப் பணி புரிந்து வந்த கச்சியப்பர், அந்த ஆறுபடை வீடுகளைப் போலவே, குமரகோட்டமும் மிகப் பெரிய கோயில் அமைப்புகளுடையதாகவும், தெய்விகத் திருவருட் சிறப்புடையதாகவும் மிளிர்தல் வேண்டும் எனப் பெரிதும் ஆர்வங் கொண்டிருந்தார் போலும்! அவர் காலத்தில், அதாவது இற்றைக்குச் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்னர், குமரகோட்டம் இப்போதுள்ள அளவுகூட இல்லாமல், மிகச்சிறிய கோயிலாகவே இருந்திருத்தல் கூடும். எனினும், கச்சியப்பரின் அன்புகெழுமிய ஆர்வம்மிக்க கவியியல் உள்ளம், மிகப் பெரிய கோயிலாக அது வளர்ந்தோங்கி விளங்குதல் வேண்டும் எனப் பெரிதும் விரும்பியதுபோலும்! அத்தகைய ஆர்வம்மிக்க பெரு விருப்பத்தால், ஆறுபடை வீடுகளையும் பிறவற்றையும் பின்வரும் ஒரே செய்யுளில் தொகுத்துக் குறிப்பிட்டு, அங்கெல்லாம் வைகும் முருகனே குமரகோட்டத்திலும் சிறப்புற எழுந்தருளி விளங்குகின்றான் எனக் கூறி முடிக்கின்றார் கச்சியப்பர்.

"மேவரும் கூடல் மேலை
வெற்பினில், அலைவாய் தன்னில்,
ஆவினன் குடியில், நல் ஏரகம்
தன்னில், தணிகைஆதிப்

பூவுல குள்ள வெற்பில்,
பொற்புறும் ஏனை வைப்பில்,
கோவில்கொண் டருளி வைகும்
குமரகோட் டத்து மேயோன்"

இச்செய்யுளால், அவர்தம் இனிய சிறந்த கவியியல் உள்ளமும், எல்லையற்ற பக்தியும், இணையிலாப் பெருவிருப்பும் (Wishful thinking), பிறவும் புலனுதல் காணலாம்.

குமரகோட்டத்து முருகன் :

கச்சியப்பர் தாம் பாடிய கந்தபுராணத்தில் முருகனின் வரலாற்றை மட்டும் பாடிச் சென்றார் அல்லர். தாம் புறத்தே மட்டும் அன்றித், தமது அகத்தேயும் நிலைநிறுத்தி அன்புடன் வழிபட்டு வந்த குமரகோட்டத்து முருகனின் திருவுருவ அமைப்பின் சிறப்பினையும், அவர்

நம் பொருட்டுத் தம் கந்தபுராணத்தில் அழகிய சொற்களில், அழியா எண்ண வண்ண ஓவியமாகத் தீட்டிக் காட்டியருள்கின்றார். பல கோயில்களில் முருகப்பெருமான் ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் உடையவனாகக் காட்சியளிப்பான். ஆனால் குமரகோட்டத்திலோ, முருகன் ஒருமுகமும் நான்கு திருக்கைகளுமாகக் காட்சிதருவான். அவனது ஒரு கையில் செபமாலையும், மற்றொரு கையில் கமண்டலமும் விளங்கும்; ஏனைய இருகைகளில் அபய வரத முத்திரைகள் அமைந்திருக்கும். பிரமதேவன் பிரணவத்திற்குப் பொருள்கூற அறியாமல் விழித்து நின்றபோது, "சிட்டித் தொழிலதனைச் செய்வது எங்ஙன் ?" என்று சினந்துவினவி, அவனைத் தலையிற்குட்டிச் சிறையிடுவித்து, அவனுக்குரிய படைப்புத் தொழிலை மேற்கொண்டருளிய நிலையில் அமைந்ததே, குமரகோட்டத்திலுள்ள முருகனின் திருவுருவமாகும். சிற்ப நூல்கள் இதனைப் பிரமசாத்தர் எனக் குறிப்பிடும். தாம் நாள்தோறும் முப்போதும் தீண்டி வழிபட்டு மகிழ்ந்து வந்த, அத் திருவுருவத்தின் இயல்பைக் கந்தபுராணத்தில் கச்சியப்பர் பின்வருமாறு தீட்டிக் காட்டியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

"கொண்டலை அளக்கும் நொச்சிக்
குமரகோட் டத்துச் செவ்வேள்
கண்டிகை வடமும், தூ நீர்க்
கரகமும் கரத்தில் ஏந்திப்
பண்டையில் அயனை மாற்றிப்
படைத்தருள் வேடம் தாங்கி,
அண்டர்கள் எவரும் போற்ற
அருள்புரிந்து அமர்ந்தான் அன்றே"

கோயில் அமைப்பு :

கச்சியப்ப சிவாசாரியர் குமரகோட்டத்து முருகனை நாளும் அருச்சித்து வந்தவராயினும், காஞ்சியிலுள்ள திருவேகம்பப் பெருமானிடத்தும், காமாட்சியம்மையினிடத்தும் அளவில்லாத பெரும் பக்திமை கொண்டவர். குமரகோட்டம் கோயில், காமாட்சியம்மை கோயிலுக்கும், திருவேகம்பர் கோயிலுக்கும் இடை நடுவே சோமாஸ்கந்த மூர்த்தம் என்னும் நிலைக்கு ஏற்றவகையில் அமைந்திருத்தலின் சிறப்பை, அவர் எண்ணி எண்ணி மகிழ்ந்து இன்புற்றனர் போலும்! தம் உள்ளத்திற் கிளர்ந்து எழுந்து ஓங்குகின்ற அக்களிபெரும் மகிழ்ச்சிப்பெருமிதத்தினைப் பின்வரும் பாடலில் அவர் அழகொழுக எழுதிக் காட்டுகின்றார்.

"ஏல வார்குழல் இறைவிக்கும்
எம்பிரான் தனக்கும்,
பாலன் ஆகிய குமரவேள்
நடுவுறும் பான்மை,
ஞால மேவுறும் இரவொடு
பகலுக்கும் நடுவே,
மாலை யானதோன் றழிவின்றி
வைகுமாற தொக்கும்"

கச்சிநகர்ப் பற்று :

ஒவ்வொரு மனிதனுக்கும தான்பிறந்த நாட்டின் மீதும் நகரத்தின் மீதும் உள்ளார்ந்த ஒருவகைப் பற்றி இருத்தல் வேண்டும். தன்னுடைய நாடு, தன்னுடைய ஊர், தன்னுடைய மொழி என்ற பற்றில்லாதவன் மனிதனல்லன். அவன் நெட்டுயிர்ப்புடைய சவத்திற்கும், நடைப்பிணத்திற்குமே சமமாவான் (2).

"தான்பிறந்த நாட்டின்கண்
தனிப்பற்றும் உணர்வும்இலான்
ஏன்பிறந்தான் வீண்கொடியன்
எனும்இழிவே எய்துகிற்பான் ;
தேன்சிறந்த நம்தமிழும்
செழும்சமயம் கலைகளுமே,
வான்சிறந்த மாட்சியஎன்
றுணராதான் மடவோனே"

— ந. ரா. மு.

இதனாலேயே ஞானத்தின் திருவுருவாய் விளங்கிய ஞானசம்பந்தப் பெருமானும் கூட, தாம் பாடிய ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றிலும், தாம் உதித்தருளிய சீர்காழி மாநகரம் பற்றிப் பற்பலவகைகளில் சிறப்பித்து ஓதக் காண்கின்றோம். அம்முறைமைக்கு ஏற்பக் கச்சியப்ப சிவாசாரியரும், தாம் பிறந்த காஞ்சி

---

(2) "Breathes there the man,
with soul so dead,
Who never to himself hath said,
'This is my own, my native land"
—Sir Walter Scott.

புரத்தின்பால் எல்லையற்ற அன்பும் பற்றும் ஈடுபாடும் கொண்டிருந்தார். சீர்காழிக்குப் போலக் கச்சியம் பதிக்கும் பன்னிரு திருப் பெயர்கள் உண்டு எனக்குறிப்பிட்டு, முறையே அப்பெயர் களுக்குரிய காரணங்களையும் பின் வருமாறு விளக்கிப் பெருமிதம் கொள்ளுகின்றார்.

பெயர்க் காரணங்கள் :

(1) காஞ்சிபுரம், பொன்மயமான காஞ்சி மரங்களையுடையது. (2) பிரளயசித்து, பிரளய காலத்திலும் அழியாமல் வென்று, நிலைத் திருப்பது. (3) சிவபுரம், அம்பிகை தவஞ் செய்து தழுவச் சிவபிரான் குழைந்து அருள் புரிந்தது. (4) விண்டுபுரம், ஐராவதம் புண்ணிய கோடி விமானமாகத் தாங்கப், பிரமன் இயற்றிய வேள்விக்கு விட்டுணு வெளிப்பட் டருளியது. (5) திரிமூர்த்திவாசம், பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் நிலையாகத் தங்கி வசிப்பது. (6) பிரமபுரம், தனது மனம் புனிதமாகப் பிரமன் வழிபட்டது' (7) காமபீடம், வீடும்போகமும் அவரவர் விரும்பியபடி தருவது. (8) தபோமயம், அம்பிகை, பிரமன், திருமால் முதலினோர் தவம் புரிந்து அருள்பெற்றது. (9) சகற்சாரம்,உலகப் பெரு நகரங்களுள் தருமத்தின் சாரம் ஆகிய அறப் பயனை மிகுதியாக்கித் தருவது. (10) சகலசித்தி, எல்லாவகையான சித்திகளையும் அளிக்க வல்லது. (11) கன்னிகாப்பு, துர்க்கை என்னும் கொற்றவை காவல் புரிவது. (12) துண்டீரபுரம், கயிலையிற் சிவகணத் தலைவர்களுள் ஒருவன் ஆகிய துண்டீரன் என்பவன், மாலதி என்பவளைக் காதலித்ததனால் வந்து பிறந்து ஆட்சிபுரிந்தது.

மூவுலகத்தும் நேர்உளதோ?

சேயாற்றுக்கும் பாலியாற்றுக்கும் நடுவே யுள்ள சமவெளியாகிய காஞ்சிபுரம், கங்கை யாற்றுக்கும் யமுனையாற்றுக்கும் நடுவேயுள்ள சமவெளியாகிய காசியினும் மேலானது என்று கட்டுரைக்கின்றார்கச்சியப்பர்.''கங்கை காளிந்தி இடைப்படும் தலத்தின் முற்படும் காஞ்சி மாநகரம்'' என்பது அவர் தம் கூற்று. அம்மட்டோ! ''நகரேஷு காஞ்சி'' எனக் காளிதாசர் புகழ்ந்த படி, ஏழு நகரங்களுள்ளும் சிறந்தது காஞ்சியே என்றும், இதற்கு நிகரான வேறொரு சிறந்த நகரம் மூவுலகத்திலும் இல்லை என்றும், திட்ட வட்டமாகத் தெளிவுறுத்துகின்றார் அவர்.

'' அழகிய அயோத்தி மதுரையே மாயை
அவந்திகை காசி நற்காஞ்சி
விழுமிய துவரை எனப்புவி தன்னில்
மேலவாய் வீடருள் கின்ற
எழுநக ரத்துட் சிறந்தது காஞ்சி
என்று, முன் எம்பிரான் உமைக்கு
மொழிதரு நகர்அந் நகர்எனில், அதற்கு
மூவுல கத்தும்நேர் உளதோ ? ''

அற்புதப் பொருள்கள் :

காஞ்சிபுரத்தின் பால் தமக்குள்ள எல்லையற்ற அன்பும் பற்றும் காரணமாக அங்குப் பின் வரும் பலவகை அற்புதப் பொருள்கள் பொற்புற அமைந்து விளங்குவதாகக் கச்சியப்பர் கவின் மிகப் பாடுகின்றார். 1 காமகோடி பீடத்தினுள் உள்ள தூண்டா விளக்கு ஒன்று. 2 இறைவன் இருக்கும் இறவாத்தானம் பிறவாத்தானம் ஆகிய இடங்கள் இரண்டு. 3 உணவு நல்குவது, கேட்பதைக் கொடுப்பது, ஊமையைப் பேசுவிப்பது ஆகிய தெற்றிகள் மூன்று. 4 கிழக்கிற் கடலும், தெற்கிற் பெண்ணையாறும், மேற்கிற் பவளமலையும், வடக்கில் வேங்கடமலையும் ஆகிய அரண்கள் நான்கு. 5 வேதங்களின் வடிவாய்ப் பொன்நிறம் உடைய மாமரம், அரும்பு மலர் காய் என்பன இன்றிப் பழங்கள் தந்து சித்திகள் நல்கும் எகினமரம், நறுமணப் பூக்கள் பலவும் மலரும் மதூகமரம், விண்ணினை நோக்கும் அத்திமரம், நறுநிழல் பிரியாத காஞ்சிமரம் ஆகிய தருக்கள் ஐந்து. 6 தேவர் உணவு அளிக்கும் சாதகப் பறவை, அணிகலன்கள் நல்கும் அன்னப்பறவை, நூற்பொருள் விளக்கும் கிளி, அலகுசொல் ஆந்தை, குறைபெறில் கூவாத கோழி, பாவம் போக்கும் சக்கரவாகம் என்னும் பறவைகள் ஆறு. 7 கம்பை பம்பை மஞ்சள் பிச்சி கலிச்சி மண்ணி வெஃகா என்னும் நதிகள் ஏழு. 8 புனல் உதவித் திரியும் கூவலம் பொது, குறுமுயல் யானையை வெல்லும் பொது, ஏழிசை ஒலிக்கும் பொது, மால் கண்துயின்றிடும் பொது, வேறு ஓர் உருவமாக்கும் பொது, புற்றில் முழவு ஒலித்திடும் பொது, திசைமயக்கம் செய் பொது, அம்மை தவம் செய் பொது என்னும் பொதுக்கள் எட்டு. 9 பிணிகள் மாற்றுவது,

நாட்டு முதல்வர்கள் முடிவுறுங்கால் செந்திற மாவது, முக்காலமும் தெரிவிப்பது, சிவபிரான் திருவடி காட்டுவது, வேண்டியன நல்குவது, ஞானம் கொடுப்பது, பொன் நிறம் விளைவிப்பது, செல்வம் அளிப்பது, வசீகரம் வழங்குவது ஆகிய பொய்கைகள் ஒன்பது. 10 விடம் அகற்றுவது, பிணி தீர்ப்பது, தேவராக்குவது, வெட்டுண்டவற்றை ஒட்டுவது, பகைவர்களை ஓட்டுவது, இறந்தோரை எழுப்புவது, வழக்குத் தீர்ப்பது, பாவங்களை நீக்குவது, அரசர்களுக்குப் புகலிடம் தருவது ஆகிய கற்கள் பத்து. 11 அயல்மனைச் சென்றோர்-கணவனைப் பிழைத்தோர்-ஆசிரியரை இகழ்ந்தோர் ஆகிய வர்களை ஊமைகளாகச் செய்வது, திருடர் முன் சுழல்வது, பலபல நிறங்களாகத் தோன்றுவது, வித்தைகள் வழங்குவது. பொழுதும் திசையும் அறிவிப்பது, நாகர் ஊர் உய்ப்பது, நவமணிகள் நல்குவது, வடிவினை மறைப்பது, மழைபொழி விப்பது, பகலை இரவாக்குவது, இரவைப் பகலாக்குவது ஆகிய மன்றங்கள் பதினொன்று. இன்னோரன்ன அதிசயங்கள் பற்பல அளவிலாது உடையது காஞ்சிமா நகரம், எனப் பாடுகின்றார் கச்சியப்பர்.

அருங் கற்பனை :

சிலப்பதிகாரம் புகார்க்காண்டத்தில், இந்திர விழாக் காதையில், ஆசிரியர் இளங்கோ வடிகள் புகார் நகரத்தில் வெள்ளிடை மன்றம் ,இலஞ்சி மன்றம், நடுங்கல்மன்றம், பாவைமன்றம், பூதசதுக்கம் என்பன இருந்ததாகப் பாடியிருத்தல் போல்வது, இப்பகுதி. இவை கற்பனையே எனினும், வெறும் கற்பனையன்றி அருங்கற்பனை எனலாம். "நலமே நிறை நாடு" (Utopia) என்னும் நூலை எழுதிய சர் தாமஸ்மூர் (Sir Thomas More) என்பவருக்கும்; "எரிவோன் அல்லது எங்குமில்லாதது" Erewhon or Nowhere) என்னும் நூலை இயற்றிய சாமுவேல் பட்லர் (Samuel (Butler) என்பவருக்கும், மிக மிக முற்பட்ட முன்னோடியாகக் கச்சியப்பர், அற்புதக் கற்பனைக் கவின்மிக்க இப்பாடல்களின் காட்சி தருகின்றார் எனலாம்.

எங்கருக்கு உளது? :

காஞ்சிபுரத்தில் எழும் இசையெல்லாம் மறைமுழக்கம்; புனல் எல்லாம் கங்கை; சிலையெல்லாம் இலிங்கம்; வாழ்பவரெல்லாம் தேவர்; மரம் எலாம் கற்பகம், துய்ப்பவேலாம் இன்பம்; செயலெலாம் பூசை; உரையெலாம் செபம் நினைவெலாம் தியானம்; நடத்தலும் வலம்: தவறி விழுதலும் இறையடி வணக்கம் என; அமையும் என்பது கச்சியப்பரின் உள்ளார்ந்த உட்கோள்! அவர்க்குக் காஞ்சியின்பால் இருந்த வாஞ்சைதான் என்னே!

"அரியபல் இசையும் மறை; புனல் கங்கை;
அருஞ்சிலை இலிங்கம்; அங்
குறைவோர்
சுரர்; தரு அனைத்தும் கற்பகம்; இன்பம்
துய்ப்பது! வேள்வியூண் பூசை;
உரை செபம்; நடத்தல் வலம்வருந் தன்மை;
உள்ளலே தியானம், வீழ்ந் திடுதல்
பரன் அடி வணக்கம் ஆவது காஞ்சிப்
பதிக்கலால் எங்கர்க் குளதே?"

சைவநலச் சால்புள்ளம் :

கச்சியப்பரின் இன்னோரன்ன நலங்கள் பலப் பல. அவர்தம் உள்ளம், சைவநலச் சால்பு நிறைந்தது. சேக்கிழாருக்குச் சிறிது பின்னர்த் தோன்றிய கச்சியப்பர், சைவநாயன்மார்களின் வரலாற்றிலும், வாழ்க்கையிலும் பெரிதும் ஈடுபாடுடையவர். இவ்வியல்பு அவர்தம் பாடல்கள் பலவற்றிற் புலனாகின்றது; (1) மேகங்கள் தம் வாயினாற் கடலிடை முகந்த நீரை நந்தி மலையின் மேல் மழையாகப் பொழிதல், கண்ணப்பராகிய காளத்தி வேடர், தம் வாயினாற் பொன்முகலியாற்றில் முகந்த நீரைத் திருக்காளத்தி மலையின்மேல் உள்ள குடுமித் தேவர் மீது உமிழ்ந்து திருமுழுக்காட்டுதல் போல உள்ளது என்றும்; (2)பாலாற்றில் மீன்கள் எதிர்ந்தேறிச் செல்லுதல், திருஞானசம்பந்தப் பெருமான் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்னும் திருப்பாசுரத்தினை எழுதிவிடுத்த தேவார ஏடு வைகையாற்றின் வெள்ளத்தில் எதிர்ந்தேறிச் சென்றதுபோல உள்ளது என்றும்; (3)தொண்டை நாட்டுக் குளங்கள்தோறும் செங்குவளை மலர்கள்அழகுறத் தோன்றி மலர்ந்திருக்கும் காட்சி, திருவாரூர்ப் பூங்கோயிலில் அறநெறியப்பர் சந்நிதியில் நமிநந்தியடிகள் என்னும்நாயனார் நீர்பெய்து ஏற்றிவைத்து எரிவித்த திருவிளக்குகள் போலத் திகழ்கின்றது என்றும் ; பிறவாறும் பாடியுள்ள பான்மையால் புலனாகின்றன.

பூட்டு கார்முகம் தன்னெடும்
தோன்றிய புயல்வாய்
ஊட்டு தண்புனல் நந்தியங்
கிரிமிசை உகுத்தல்,
வேட்டு வக்குலத் திண்ணனுர்
மஞ்சனம் விமலற்கு
ஆட்டு கின்றதோர் தனிச்செயல்
போன்றுள தன்றே (1)

உதிரு கின்றசிற் றுண்டிகொண்டு
ஒலிபுனற் சடைமேல்
மதுரை நாயகன் மண்சுமந்
திட்டமா நதியில்,
முதிரும் முத்தமிழ் விரகன்றன்
ஏடென மொய்ம்மீன்
எதிர்பு குந்திடப் போவது
பாலியாம் யாறு (2)

பாட்டியல் அளிமுரல் பதுமக் கோயிலில்
நாட்டிய நிமலன்முன் நந்தி நீரிடை
மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமால்
கோட்டுயர் தடம்தொறும் குவளை பூத்தவே

கச்சியப்பர் நூற்சிறப்பு :

இத்தகைய பற்பல பெருஞ் சிறப்புகளுடைய தமிழ்க்கவிஞராகிய கச்சியப்பர், இயற்றியருளிய கந்தபுராணக் காப்பிய நலங்களின் மாட்சிமை நம்மனோர் அறிவால் ஆய்ந்துணர்ந்து அளவிடற்பாலன அல்ல. தமிழிலக்கியத் தொகுதிகளின் வரிசையில் கந்தபுராணத்திற்குத் தனிப்பெரும் சிறப்பிடம் உண்டு என்பது திண்ணம். சூரபதுமனுல் சுவர்க்க வாழ்க்கை இன்பத்தினை இழந்து நின்ற தேவர்கள், பின்னர் முருகப்பெருமான் திருவருளால் அதனைப் பெற்று மகிழ்ந்து இன்பமிக வாழ்ந்தனர் என்பதே, கந்தபுராணக் கதையின் சாரம். ஆதலின், ஜான்மில்ட்டன் (John Milton) என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் பாடிய "சுவர்க்க இழப்பு-சுவர்க்க மீட்பு" (Paradise Lost & Paradise Regained) என்னும் நூலோடு, ஒருபுடை ஒப்புமையுடையது கந்தபுராணம் என, அதன் பெருமையை ஒருவாறு சுருங்கக் கூறலாம். இரண்டிற்கும் காப்பியத் தலைமகன் கடவுளே யாவர். கதை நிகழ் களனே, மீதலம் பாதலம் பூதலம் என்பனவாகும். காப்பியப் பொருளோ, அறிவுடைய நன்மக்கட்கெல்லாம் பொதுவானதாகும்.

"காதை நாயகன் கடவுளே;
கதைநிகழ் களனே,
மீத லத்தொடு பாதலம்
பூதலம்; விடயம்
போத மாந்தர்கட் குரியதாம்;
கந்தவேள் புராணம்,
தீதில் சுவர்க்கத்தின் இழப்பொடு
மீட்புமாச் சிறக்கும்"

—ந. ரா. மு.

கவிநலம் :

கந்தபுராணத்தின் கவிநலனும், காப்பியப் பொருள் நலனும், கற்றோர் உள்ளத்தையும், மற்றோர் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு கவர வல்லனவாகும். "சிறந்ததொரு கவிதையானது திருத்தம்மிக்கதாய், கலைநலம் செறிந்ததாய், நுண்மாண் நுழைபுலம் சான்றதாய், ஆற்றொழுக்கு நடையில் அமைந்ததாய், கற்பவர்க்கெல்லாம் உள்ளக்கிளர்ச்சியும் உவகைப் பெருக்கமும் விளைவிப்பதாய் இருத்தல் வேண்டும்" என இலக்கியத் திறனாய்வாளர்கள் யாவரும் இயம்புவர். (3)* அத்தகைய நலங்கள் அனைத்தும் அழகுற அமைந்து விளங்குவது கந்தபுராணம் என்பது, தமிழறிஞர் அனைவரும் ஒப்புமுடிந்ததொன்று.

மனித குலப்புராணம் :

உண்மையில் ஆய்ந்துணரின், "கந்தபுராணம் நமது மனித குலத்தின் சொந்தபுராணமேயாகும்." தேவர்களைச் சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் ஆகிய அசுரர்கள் சிறையில் இட்டுத் துன்புறுத்த, முருகப்பெருமான் தோன்றித் தன்னுடைய வேற்படையால் அவர்களை அழித்துத், தேவர்களைச் சிறையினின்று விடுவித்துக் காத்தருளினன் என்பது, தத்துவநுணுக்கங்கள் அமைந்த சிறந்த உருவக அமைப்புடையதாகும்.(4).

---

* (3) "After all, poetry should not only be elegant, artistic, and ingenious, but flowing, stimulating and pleasant to the readers."

— Prof. A. C. Bradley

தத்துவ விளக்கம் :

(3) தேவர்கள் என்போர் உயிர்களாகிய நாமே. சூரபதுமன் சிங்கமுகன் தாரகன் ஆகிய மூவரும், நம்மைப் பலவகைகளில் அலைக் கழிக்கும் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களேயாம். உயிர்களாகிய நம்மை, அசுரர்கள் போற் கொடிய மும்மலங்களின் பிடியினின்று விடுவித்துக் காத்தருளும் ஒப்புயர் வற்ற இறைவனே, முருகப்பெருமான். அஞ் ஞானத்தை ஞானமே வெல்லும். சூரபதுமன் முதலிய அசுரர்களைப் போன்ற மும்மலங்களால் விளையும் அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும். சூரபதுமன் முதலிய அசுரர்களைப் போன்ற மும் மலங்களால் விளையும் அஞ்ஞானத்தை, மெய்ஞ் ஞானமாகிய வேலே வென்றொழித்தது. அருளா சிரியர் நல்கும் ஞானத்தாலேயே உயிர்கள் வீடுபேறு எய்தும். அதுபோல முருகனது வேற்படையின் துணையினாலேயே, தேவர்கள் சிறையினின்று விடுபட்டுச் சுவர்க்கலோக வாழ்வின்பம் பெற்று மகிழ்ந்தனர். நாம் நம் பகைவர்களை வெறுத்தலும் அழித்தலும் செய்யாமல், அவர்களின் மனத்தை மாற்றித் திருத்தி உய்வித்தல் வேண்டும். நாம் தீமையை வெறுக் கலாமேயன்றித் தீயவர்களை வெறுக்கலாகாது (Hate the sin, but not the sinner). பகைவரிடமும் அன்பு காட்டி நலம்பல புரிந்து, பகைவர் களையும் நண்பர்களாகச் செய்து கொள்ள வல்ல பண்புடைமையே, தலைசிறந்த சான்றாண்மை யாகும். அதுவே வெற்றிகளுக்கெல்லாம் மேலான சிறந்த பெரு வெற்றியாகும்.

கொடியவனாகிய சூரபதுமனை அழித்தொழிக் காமல், அவனது மனத்தினை மாற்றித் திருத்தி, அவனைத் தனது சிறந்த அடியவர்களுள் ஒருவனாக முருகப்பெருமான் ஏற்றுக் கொண்ட ருளினான். இது தான் முருகனின் ஈடு இணையற்ற அருட்பெருஞ் சிறப்பியல்பாகும்.

(5)

''தீயவை புரிந்தா ரேனும்
குமரவேள் திருமுன் உற்றால்,
தூயவர் ஆகி மேலைத்
தொல்கதி அடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ ?
அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான் ! ''

—கந்தபுராணம்,

இத்தகைய எத்தனையோ பல தத்துவ நுட் பங்களைத் தகவுற விளக்குவதே கந்தபுராணம் எனின், அதனை இயற்றியருளிய கச்சியப்பர் கவி நலத்தின் சிறப்பினை யாம் என்னென்பேம்! ''கரையற்ற தொன்றைக் கரை காணல் ஆகுமோ ?'' ''கடல் கண்டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார் ?''

முடிவுரை :

தமிழகப் பெருங் கவிஞர்கள் பலருள் தலை சிறந்த ஒருவராகிய நம் கச்சியப்பரை, நாம் ஒரு மேகத்திற்கு ஒப்பிடலாம். மேகம் கடலிற் படியும்; அதன் புனலை அருந்தும்; உலகம் உய்யும்படியும், வெப்பம் தணியும்படியும், மலை முகட்டில் ஏறி, இனிய மழையைப் பொழியும். அது போல அருள்மேகம் ஆகிய கச்சியப்பரும், சூதமுனிவர் அருளிய மகாஸ்காந்தம் என்னும் கடலிற் படிந்தார். முருகனின் பெரும்புகழாகிய புனலை அருந்தினார்; உலக மக்கள் உய்யவும், பிறவி வெப்பம் தணியவும், காஞ்சிபுரமாகிய மலைமுகட்டில் ஏறி, அமிழ்தம் போன்று இனிய செந்தமிழ்க் கவிதை மழையினைப் பொழிந்தார். அத்தகைய கச்சியப்பரைத் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் தக்காங்கு போற்றித் தமிழ் நலம் பேணி வாழ்வாங்கு வாழ்ந்து மகிழ்வோமாக !

—ஆசிரியர்.

---

(4) "Every time you find in our books a tale, the reality of which seems impossible, a story which is so repugnant to both reason and common sense, then be sure that the tale contains a profound *allegory* veiling a deeply mysterious truth; and the greater the absurdity of the letter, the deeper the wisdom of the spirit."

—Geoffrey Hodson.
Christianity and the Modern World, p.21
(The Hidden Wisdom in the Holy Bible)

(5) "There is a temptaion to look upon our opponents as inhuman monsters, infernal fiends plotting in dark cellars who require to be destroyed for the safety and health of the world. But we should *try to change the mind* of our opponents, without resorting to force. If we disagree with our opponent, it is not a justification for destroying him. If he is blind, we should help him to see. we must awaken the sense of justice in him. we should never weary in our effort to help him cast off his error. Then what is good in him will unite with what is good in us and we will all march unitedly towards the goal.".

—Dr. S. Radhakrishnan,
Religion and Culture, p.81



1959 - ஆம் ஆண்டு

தமிழ் நாடு இந்து சமய

அறநிலையச் சட்ட நிர்வாகம்

வருவாய்த் துறை

மானியக் கோரிக்கை எண் 12

“ ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல் ”

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாய் மொழிக்கிணங்க, அறவினையைப் பன்னெடுங், காலத்திற்கு முன்பே தொடங்கி வைத்து இன்றளவும் இடையருது நடைபெற்றிடும் வழியில் அறநிலையங்களையும், அறக் கட்டளை களையும் முறைமையிற் காத்து, அவைகளின் மூலம் சமுதாயத்திலே சமதர்ம மணங்கமழச் செய்து வரும் பழந் தமிழ் நெறிநின்று செயல் படும் இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை பற்றிய குறிப்பினை இவ்வவையின் முன் வைத்து அனைவரின் ஆதரவை வேண்டி நிற்கிறேன்.

வரலாற்றுச் சிறப்பையும், வழிபடுவோர் போற்றும் சமயச் சிறப்பையும் ஒருங்கே பெற்று ஒளிர்கின்ற கற்றளிகளும், கவின்மிகு திருக் கோயில்களும், நாளும் நற்றமிழ் வளர்த்திடும் நன்மடங்களும் நிறைந்தது தமிழ்நாடு. முடியுடை மூவேந்தர் காலம் தொடங்கி இன்றளவும் முறைமையான ஓர் வரலாறு கிடைத்திடத் தமிழர்க்கு உறுதுணை பயப்பவை தமிழகத் திருக்கோயில்கள் தான், வரலாற்றுச் சான்றுகளாகவும், வழிபடுவோர் தம் குறை நீக்கும் இறைவன் உறைவிடங்களாகவும் கருதப்படும் கலைமாட்சி மிக்க இத்திருக் கோயில்களைப் பேணிப் பாதுகாத்து இனிவரும் சந்ததியினருக்கு அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பை நிறைவேற்றிடும் வழியில் இத்துறை செயல்பட்டு வருகிறது என்பதை நாடறியும்.

பழந்தமிழர் வாழ்க்கை முறைக்கும், அவர் தம் பண்பாட்டின், கலாச்சாரத்தின் உறை விடங்களாக, வெளி உலகிற்கு இன்றளவும், அவைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கலைமிகு எழிற்கூடங்களாக அமைந்துள்ள இத் திருக்கோயில்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை இவ்வரசு நன்குணர்ந்துள்ளது.

“ செயற்கை அறிந்தக் கடைத்தும், உலகத்து
இயற்கை அறிந்து செயல் ”

என்ற தமிழ்த் திருமறைக்கு ஒப்ப, மக்கள் விரும்பிக் கைக் கொண்டு வாழும் முறையில் தலையீடு ஏதுமின்றி அவர்கள் விருப்பத்தினை நிறைவேற்றி வைக்கும் அரசாக இது செயல் பட்டு வருகிறது. திருக்கோயில்கள் தமிழ்

நாட்டில் எழுந்த முறைகளையும், அவைகளை எழுப்பிய மன்னர் தம் மன நிலைகளையும், அத் திருக்கோயில்களும் அற நிறுவனங்களும் ஆயிர மாயிரம் ஆண்டு நின்று பயன் அளித்திட அவர்கள் ஏற்படுத்திய "நிவந்தங்களையும்" அவைகளை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கல்வெட்டுச் சான்றுகளையும் விரிவாக உணர்ந்ததன் அடிப்படையில் இவ் வரசு இத்துறையில் பெரும் கவனம் செலுத்தி, கடந்த சில ஆண்டுகளாகப் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறது. அவைகளின் தொடர்ச்சியாக இவ்வாண்டுவரை நிறை வேற்றிய பணிகளைப் பற்றியும், இனிவரும் ஆண்டில்நிறைவேற்றிட இருக்கிற பணிகளைப் பற்றியும் இவண் எடுத்தியம்பிட விழைகிறேன்.

தமிழ்நாடு அனைத்துமாக இவ்வாண்டுத் தொடக்கம் வரை இத்துறை 157 மடங்களும், 12,038 திருக்கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் ஆக 13,027 அற நிலையங் களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுள்ளது. இவ்வனைத்து அறநிலையங் களின் மொத்த வருவாய் ரூ. 6,75,00,000 என்று மதிப்பிடப்படுகிறது. இதில் திருக் கோயில் நிலங்களைக் கண்டறிந்து இத்துறை யோடு இணைக்குமாறு நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் காரணமாக இவ் வாண்டில் 2,162 திருக்கோயில்கள் இத் துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ள எண்ணிக்கையும் அடங்கும். இத்துறையை நிருவகிப்பதற்காக வருவாய், இந்து சமய அறக்கட்டளைகள் பற்றிய 1959-வது ஆண்டுச் சட்டத்தின் 92-வது பிரிவின் திருக்கோயில்கள், அற நிறுவனங்கள் ஆகியவற்றால் கொடுக்கப் படவேண்டிய சகாயத் தொகையிலிருந்தும், திருக்கோயில் கணக்குத் தணிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கிறது. ஆண்டொன்றுக்கு ரூ. 200-க்கும் குறைவு படாத வருவாயினைப் பெற்ற ஒவ்வோர் அற நிறுவனமும் குறிப்பிட்ட சகாயத் தொகையினை இத்துறைக்குச் செலுத்த வேண்டும் என்று விதி முறை உள்ளது. இதன் அடிப்படையில் கீழ்க் காணும் வருவாயுள்ள பல்வேறு நிறுவனங்களி லிருந்தும் ஆண்டுதோறும் சராசரியாக ரூ. 51 இலட்சம் கிடைத்து வருகிறது.

(1)	ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	7,558
(2)	ரூ. 1000 முதல் ரூ. 10,0000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	4,830
(3)	ரூ. 10,000-க்கு மேற்பட்டு ரூ. 1,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	566
(4)	ரூ. 1,00,000 முதல் ரூ. 5,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	60
(5)	ரூ. 5,00,000-க்கு மேற்பட்டு, ரூ. 10,00,000 வரை வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	5
(6)	ரூ 10,00,000-க்கு மேற்பட்டு ரூ. 15,00,000-க்குக் குறைவாக வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை.	3
(7)	ரூ. 15,00,000-க்கும் மேற்பட்ட வருவாயுள்ள அறநிலையங்களின் எண்ணிக்கை	5

இவ்வாண்டு இத்துறையின் கீழ்க் கொண்டு வரப்பட்ட 2,162 புதிய திருக்கோயில்களின் மூலமாக இத்துறையின் வருவாய் ரூ. 52,500 அளவுக்குக் கூடுதலாகி உள்ளது.

1973-ம் ஆண்டில் திருக்கோயில்களின் எண்ணிக்கை 15,000-க்கும் மேலாக உயரும் என்றும், அவைகளின் மொத்த வருமானம் சுமார் 7,50,00,000-க்கு உயருமென்றும், அதனால் இத்துறையின் வருமானம் அதிமாக வாய்ப்பு உண்டென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்வாறு பெருகி வரும் இத்துறையின் கீழ்ச் செயல்படும் திருக்கோயில்கள் அனைத்தின் வருவாய் குறித்தும், அறநிலையத் துறையின் பராமரிப்புக்கான செலவுகள் குறித்தும் கீழ்க் காணும் புள்ளி விவரங்கள் விளக்கமளிப்பவை யாக அமையும் என்று எண்ணுகிறேன்.

திருக்கோயில்களின் வருவாய்.

விளைச்சல் ஆண்டு.		ரூ.
1379	...	4,87,51,314
1380	...	5,51,65,419
1381	...	5,55,78,000
1382	...	6,75,00,000

ஆண்டு.		துறையின் நிருவாகச் செலவு.	தணிக்கைச் செலவு.
(1)		(2)	(3)
		ரூ.	ரூ.
1969—70	...	32,47,643	9,64,631
1970—71	...	39,40,636	11,32,260
1971—72	...	49,74,300	13,76,500
1972—73	...	58,11,500	12,43,200

புதிதாக ஏற்படுத்தப்பட்ட சில பதவிகள் காரணமாகவும், ஊதிய விகிதங்களில் ஏற்பட்ட உயர்வு காரணமாகவும், புதிய போக்குவரத்துச் சாதனங்கள் காரணமாகவும், 1972 1973—ஆம் ஆண்டிற்கான நிருவாகச் செலவு கூடுதலாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் துறை ஊழியர்களின் ஊதியச் செலவுகளும் தணிக்கைச் செலவுகளும் ஆரம்பத்தில் அரசு நிதி யினின்றும் செலவிடப்பட்டு, இறுதியில் இந்து சமய அறநிலைய நிருவாக நிதியிலிருந்து திரும்பப் பெறப்படுகின்றன.

திருப்பணிகள்—வருவாய் வாயில்கள் பெருகியதன் காரணமாக உபரி நிதி வசதி யுள்ள திருக்கோயில்களின் நிதியிலிருந்து வானுற எழுந்துநிற்கும் இத்திருக்கோயில்களில் காலத்தாற் பழுதுபட்டும், கலைமாட்சி யறியா தோர் கைபட்டுச் சிதைவுற்றதுமான பல வற்றைத் திருத்தியமைத்து அவற்றின் அழகு கெடாமல்பாதுகாக்கப்பட்டுள்ளது. குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்துச் சிற்பிகளின் கை வண்ணத்தை யெல்லாம் தம் மெய்வண்ணத் தாலே பறைசாற்றிவரும்அரிய சிற்பங்கள்காலத் தால் அழியா வண்ணம் காப்பாற்றப்படுவ தோடு, திருமதில்கள் ஓரங்களிலும், கருவறையி லும் சுற்றுச் சுவர்களிலும் கணக்கின்றி இருக்கும் கல்வெட்டுக்களையும், செப்புப் பட்டயங்களை யும், பிற சான்றுகளையும், முறைமையாகப் பாதுகாக்கத்தக்க வகையிலும், காப்போரின் றிச் சிறு கிராமங்ககளில் கிடக்கும் அழகுச் சிற்பங் களைப் பாதுகாப்பதற்கான வகையிலும் முயற்சி கள் மேற்கொள்ளப் பட்டுத் தமிழ் மண்ணுக் குரிய சிற்பங்களும், சிலைகளும் அயலார் கரத்தே சென்றடையா வண்ணம் காக்கப் பட்டுள்ளன.

பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட செம்பு, ஐம்பொன் சிலைகளும், கற்சிலைகளும் காண்போர் கண்ணுக் கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அழகுற அமைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின் றன. இவ்வாறுஅமைக்கப்பட்ட கலைக்கூடங்கள் கீழ்க்காணும் இரு இடங்களிலும் செயல் பட்டு வருகின்றன.—

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

2. அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக் கோயில் திருவானைக்கா (திருச்சி மாவட்டம்), தஞ்சை மாவட்டம் திருவாரூரில் உள்ள அருள் மிகு தியாகராசர் திருக்கோயிலில் அம்மாவட் டத்தில் அண்மையில் கிடைக்கப்பெற்ற பல் வேறு சிலைகளை அழகுற அமைத்துத் திருக் கோயிலுக்கு வருவோரின் பார்வைக்காக வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டின் மற்ற திருக்கோயில்களில் காணப்படும் கவின்மிகு சிலைகளையும் சிற்பங்களையும் பாது காத்திடும் வகையில் அவைகளின் அழகு குன்றாமலும், காண் போருக்குத் தடையில்லாத வகையிலும், இரும்புக் கம்பிகளால் காப்பு செய்யப்பட் டுள்ளன. விலை மதிப்பற்ற தமிழ்நாட்டுச் சிற்பங்களையும் சிலைகளையும் காப்பு செய்வதில் இத்துறை மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது

திருக்கோயில் சிலைகள், சிற்பங்கள் ஆகியவைகளன்றித் திருக்கோயில்களைப் பாது காப்பதிலும், அவைகளைப் புதுப்பித்துத் திருப் பணிகள் செய்வதிலும் 1967-ம் ஆண்டு தொடங்கிச் செலவிடப்பட்டு வரும் தொகை குறித்த புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட் டுள்ளது.

ஆண்டு	திருக் கோயில்களின் எண்ணிக்கை	செலவிடப் பட்ட தொகை
1967	200	1,19,00,000
1968	90	35,00,000
1969	130	57,00,000
1970	250	1,17,00,000
1971	450	2,20,00,000
1972	700	3,86,00,000

1973 ஆம் ஆண்டில் இன்னும் அதிகப்படியான திருக்கோயில்களைத் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. முக்கியமாகக் கிராமப் பகுதிகளில் உள்ள சுமார் 1,500 திருக்கோயில்களில் திருப்பணி நடைபெற வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதே போல 1967—68 ஆம் ஆண்டு தொடங்கித் திருக்கோயில் திருப்பணிகளுக்காக அரசின் உதவித் தொகை ரூ. 3 இலட்சம் என்று இருந்த நிலையை மாற்றி 1968—69 முதல் ரூ. 4 இலட்சமாகவும், 1972—73-ல் ரூ. 5 இலட்சமாகவும் உயர்த்தி, தற்போது ரூ. 6 இலட்சமாக உயர்த்தி இருப்பதும் எண்ணிப் பார்க்கத்தக்கது. சென்ற ஆண்டில் துவங்கப்பட்ட சில முக்கியமான திருப்பணிகளைக் குறித்த விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

(1) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ. 1,94,950 மதிப்புள்ள 7 கிலோ தங்கத்தால் ஒரு தங்கத் தேர் செய்வது தொடங்கப்பட்டது.

(2) திருக்கோயில் சுற்றுப் பிராகாரத் திருப்பணி ரூ. 5 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(3) ரூ. 1,59,250 மதிப்புள்ள 250 கிலோ வெள்ளியால் தேர் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

(4) ரூ. 3.5 இலட்சம் மதிப்பீட்டில் கடல் அரிப்புத் தடுப்புத் திட்டம் தீட்டப்பட்டு, முக்கிய பாகமாகிய கீழ்ப்பாகத்தில் 590 அடி நீளத்திற்கு வேலை முடிவுற்றது. வடக்குப் பாகத்தில் வேலை தொடர்ந்து நடந்து வருகின்றது.

(5) திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ. 2,36,725 மதிப்புள்ள $3\frac{1}{2}$ கிலோ தங்கத்தில் தங்கக் கவசம் செய்யும் பணியும், 5 கிலோ தங்கத்தில் தங்கத் தேர் செய்யும் பணியும் தொடங்கப்பட்டது.

(6) முகவை மாவட்டம், பாகனேரியில் அருள்மிகு புலவநாயகி அம்மன் திருக்கோயில் சார்பில் ரூ. 2 இலட்சத்தில் தேர் ஒன்று செய்து ஓட்டப்பட்டது.

(7) செங்கை மாவட்டம், மதுராந்தகம் அருள் மிகு கோதண்டராமசாமி திருக்கோயிலுக்கு ரூ. 2,46,500 செலவில் புதிய திருத்தேர் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

(8) மதுரை மாநகரில் அமைந்துள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் வைர முடி ஒன்றும், தங்கக் கவசம் ஒன்றும் ரூபாய் பதினாறு இலட்சம் செலவில் செய்யப்பட்டன.

இவ்வாறு பெருகி வரும் தொகையைக் கொண்டு தமிழ்நாட்டில் பெரும்பாலான திருக்கோயில்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருவது மகிழ்ச்சி யூட்டும் செய்தியாகும்.

திருமண மண்டபங்கள்—1967 ஆம் ஆண்டு வரையிலும் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் கட்டப்பட்டுள்ள மொத்தத் திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 14 ஆகும். ஆனால் 1967-க்குப் பிறகு 1972 டிசம்பர் திங்கள் வரை தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் சார்பில் துவக்கப்பட்ட திருமண மண்டபங்களின் எண்ணிக்கை 169 ஆகும். இவற்றில் 41 திருமண மண்டபங்கள் முழுமையாக முடிவுற்றுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மற்றவற்றை முடிக்கும் வகையில் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமணம் நடத்த வசதியான இடமின்றி இடருற்றோர் பலரின் துயரம் இதன் மூலம் பெருமளவில் களையப்பட்டு வருகிறது.

திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிறைவேற்றப்படும் சமுதாயப் பணிகள்—தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் தோற்றுவாயை உணர்ந்தால், அவைகள் வெறும் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல் சமுதாயப் பணிகளை நிறைவேற்றிடும் அமைப்புகளாகவும், சிற்பம், கலை, கல்வி, மருத்துவம், ஓவியம், நாட்டியம் போன்றவைகளை வளர்க்கும் அறநிலையங்களாகவும், காப்பகங்களாகவும் அமைந்தன என்பது தெளிவாகும். எனவே இவற்றின் அடிப்படையிலேயே பின்வரும் சமுதாயப் பணிகளை இத் திருக்கோயில்களின் மூலம் இத்துறையினர் நிறைவேற்றி வருகின்றனர்.

கேடில் விழுச்செல்வமாம் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வகையில் தமிழ்நாட்டின் பெரு வருவாய் உள்ள திருக்கோயில்களின் சார்பில் தற்போது 6 கல்லூரிகள் தமிழகத்தில் கீழ்க்காணும் பகுதிகளில் அமைந்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றன:—

1. அருள்மிகு பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி, பழனி.

2. அருள்மிகு பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி

3. அருள்மிகு பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி.

4. அருள்மிகு தேவி குமாரி பெண்கள் கல்லூரி, குழித்துறை (கன்னியாகுமரி மாவட்டம் தேவஸ்வம் வாரியத்தினரால் நடத்தப்படுவது)

5. அருள்மிகு பராசக்தி பெண்கள் கல்லூரி, திருக்குற்றாலம்.

6. அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் கல்லூரி, இராமேசுவரம்;

அண்மையில் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த திருநெல்வேலி அருள்மிகு காந்திமதியம்பாள் திருக்கோயில் சார்பில் மகளிர்கல்லூரி ஒன்றும், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ஓர் மகளிர் கல்லூரியும் துவங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்கு துவக்கப்பட்டிருக்கும் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலைக்கல்லூரிக்கு ரூ. 5 இலட்சம் நன்கொடையாக வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இவைகளேயன்றி மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டபாணிசுவாமி திருக்கோயில் சார்பில், திரு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியும், தஞ்சை மாவட்டம் திருவெண்காட்டினை அடுத்த மேலையூரில் பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

இந்திய மெய்விளக்கத்துறை மற்றும் பண்பாடுகளில் பட்டப்படிப்பிற்கும் மேலான படிப்பிற்குக் கல்லூரி ஒன்றினை 1972-ம் ஆண்டில் பூம்புகாரில் தொடங்கப்பட்டது என்பதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

உயர் நிலை ஆரம்பப்பள்ளிகள்—தற்போது தமிழ் நாட்டின் திருக்கோயில்களின் நிதியிலிருந்து 13 ஆண்கள் மற்றும் மகளிர்க்கான உயர் நிலைப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 3 பள்ளிகள் 1972—73-ம் ஆண்டில் தொடங்கப்பட்டனவாகும். 1973—74-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் திருக்கடையூர் பிச்சைக் கட்டளை சார்பில் ஓர் உயர்நிலைப் பள்ளியும், முகவை மாவட்டம் பள்ளத்தூரில் அறக்கட்டளையொன்றின் சார்பில் ஓர் உயர் நிலைப் பள்ளியும் துவங்கப்பட இருக்கின்றன.

நாதசுவரப் பள்ளிகள்—மங்கல ஒலிகூட்டி மக்களுக்கு இன்பம் சேர்க்கும் நாதசுவரக் கலையைப் பேணி வளர்க்கும் வகையில் திருக்கோயில்களின் நிதியிலிருந்து கீழ்க்காணும் இரு இடங்களில் நாதசுவரப்பள்ளிகள் உருவாக்கப்பட்டுத் தக்க விற்பன்னர்களைக் கொண்டு மாணவர்கள் முறையாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர் :—

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நாதசுவரப்பள்ளி.

2. தஞ்சை மாவட்டம் வலிவலம் அருள்மிகு இருதயகமலநாதசுவாமி திருக்கோயில் நாதசுவரப் பள்ளி.

இவற்றில் பழனியில் 20 மாணவர்கள் நாதசுவர இசையிலும், 10 மாணவர்கள் தவில் இசையிலும், தஞ்சை வலிவலத்தில் 15 மாணவர்களும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஊமையர் மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள் :-

இயற்கையின் படைப்பில் ஊமைகளாய்ச் செவிடர்களாய்ப் பிறந்துவிட்டோர்க்குப் பயிற்சி அளித்துப் பேசவும், எழுதவும், இரு பயிற்சிப்பள்ளிகள் திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் (சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்), மற்றும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் ஆகியவற்றின் சார்பில் தற்போது செம்மையாகச் செயல்பட்டு வருகின்றன,

அன்பு இல்லங்கள்—பேணுவோர் இன்மையால் பெருந்தொல்லைக் காட்டப்பட்டு இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப் படும் அனாதைகளைக் காப்பதற்கு அன்பு இல்லங்கள் கீழ்க்காணும் 10 திருக்கோயில் களின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன:—

1. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக் கோயில்; திருத்தணி.

2. அருள்மிகு நவநீதேசுவரர் திருக் கோயில், சிக்கல், நாகபட்டினம்வட்டம், தஞ்சாவூர்மாவட்டம்.

3. அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், வைத்தீசுவரன்கோயில், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

4. அருள்மிகு சீநிவாசப்பெருமாள் திருக் கோயில், நாச்சியார்கோயில், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

5. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

6. அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், பழனி.

7. அருள்மிகு நெல்லையப்பர் திருக் கோயில், திருநெல்வேலி.

8. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக் கோயில், திருச்செந்தூர்.

9. அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் திருக்கோயில், அய்யன்பாளையம், பல்லடம் வட்டம், கோயம்பத்தூர் மாவட்டம்.

10. அருள்மிகு திருமலைக் குமாரசுவாமி திருக்கோயில், பண்பொழில் தென்காசி வட்டம் திருநெல்வேலி மாவட்டம்.

சிறுவர் காப்பகங்கள்.—பள்ளிப் பருவத்தை அடைவதற்கு முன்பே தாய் தந்தையரை இழந்து வாடும், சிறுவர்களுக்கும், காலையிலேயே தொழிலுக்குச் செல்லும் தாய் தந்தையர் கவனிக்க முடியாத சிறுவர்களுக்கும் கீழ்க் காணும் 5 இடங்களில் சிறுவர் காப்பகங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. இங்கெல்லாம் சிறுவர்களுக்கு இந்து சமய நெறிமுறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது:—

1. அருள்மிகு வேதநாராயணப் பெருமாள் திருக்கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக் கோயில் குமாரவயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக் கோயில்- காரமடை. அவிநாசி வட்டம், கோயம் பத்தூர் மாவட்டம்.

4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இளம் பிள்ளை, சேலம் மாவட்டம்.

5. அருள்மிகு தண்டாயுதபாணி திருக் கோயில், பழனி.

முதியோர் இல்லம்.—சென்ற ஆண்டில் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து முதியோருக்கான இல்லம் நடத்தும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அதனடிப்படையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக் கோயில் சார்பில் 30 முதியோர்களைச் சேர்த்துக் கொள்ள வழிவகை மேற்கொள்ளப்பட்டு இவ் வில்லம் 15—2—1973—லிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போது மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இரு திருக்கோயில்களின் சார்பில் 20 நபர்களைப் பேணிக் காக்கும் இரண்டு இல்லங் கள் 15—3—1973 முதல் தொடங்கி நடை பெற்று வருகின்றன.

மருத்துவ மனைகள்.—வழிபாட்டுக்காக வரும் பயணிகள் உட்படப் பொதுமக்களின் நலனுக்காக மருத்தவ மனைகளையும் தொடங்க வேண்டியதன் அவசியம்கருதி 23 சித்த வைத்திய மருத்துவ மனைகளையும், ஆங்கில முறை மருத்துவமனை ஒன்றினையும் திருக் கோயில்களின் சார்பில் நடத்தி வருகின்றோம். சித்தவைத்திய மருத்துவமனைகளின் அவசியம் காரணமாக இன்னும் அதிகமான அளவில் இவைகளைத் துவக்க வேண்டுமென்று திருக் கோயில் அறங்காவலர்களுக்கும் நிருவாக அலுவலர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட் டுள்ளன.

நூலகங்கள்.—பொது அறிவினை வளர்ப்ப தோ டன்றி இந்து சமய நெறியினை நன் குணர்ந்து பயன் பெறும் வகையில் 204 திருக் கோயில்களில் நூலகங்கள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. மேலும் நிதி வசதி யுள்ள திருக்கோயில்களில் நூலகங்களைத் தொடங்கத்தக்க அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

வழிபடுவோருக்கான வசதிகள்.—அருட் டலங்கள் என்று போற்றப்பட்டு நாடோறும் பெருகி வரும் வழிபாட்டுப் பயணிகள் கூடு கின்ற திருக்கோயில்களின் சார்பில் வழி பாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுவோர் களின்நலனுக்காக ஓய்வு விடுதிகளையும், பயணிகள் விடுதிகளையும் கட்டும் திட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இத் திட்டத்தின் கீழ்ப் பல்வேறு திருக்கோயில்களின் சார்பில் வேலைகள் மேற்கொள்வதற்கான வகையில் மதிப்பீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

வழிபாட்டுப் பயணிகளுக்கு விடுதிகள் கட்டுதல்

ஆண்டு,		ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு.
		ரூபாய்
1969	...	1,10, 700
1970	...	2, 65, 800
1971	...	11, 14, 000
1972	...	7, 43, 500

ஓய்வு விடுதிகளைக் கட்டுதல்

1969	...	6, 34, 000
1970	...	10,60,000
1971	...	5, 24, 400
1972	...	5, 07, 000

இவ்வேலைகள் விரைவாக நடந்து வருகின்றன.

1973 ஆம் ஆண்டில் இவைபோன்ற வசதி கள் இன்னும் பெருமளவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

திருக்கோயில் நிலங்கள்.—திருக்கோயில் களின் சார்பில் பயன்மிக்க காரியங்கள் பல வற்றை மேற்கொள்ளும் அதே நேரத்தில் திருக் கோயில்களின் வருவாயைப் பெருக்கிடும் வகையிலும், திருக்கோயில்களுக்குச் சொந்த மான நிலங்கள் மற்றும் அசையாச் சொத்துக் களைத் தனியார் கரங்களிலிருந்து எடுக்கப்பட்டு திருக்கோயில் கணக்கில் சேர்க்கப்பட்டு அவை களின் மூலம் வருவாய்க்கான நிதி வாயில்கள் பெருக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் விவரம் இத்துறையில் மேற்கொண்ட நடவடிக்கை களைத் தெற்றென விளக்கும்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து அந்நிலங்கள் அனைத்தையும் திருக் கோயில்களுக்கே உரியனவாக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவென்று சிறப்புப் பணியாளர்களாக மாவட்ட வருவாய் அதிகாரி நிலையில் ஒரு தனி அதிகாரியையும் மற்றும் 4 தனித்துணை ஆட்சியர்களையும் அவர் களுக்கு உரிய பணியாளர் தொகுதியினையும் பணியில் அமர்த்திச் செயல்பட அரசு அனுமதி அளித்தது. 1971-ஆம் ஆண்டில் திருக்கோயில் நிலங்களைப் பொறுத்த ஆய்வுப் பணியினை விரைவு படுத்துவதற்கு இசைவாகக் கூடுதல் பணியாளர்களை நியமிக்க அரசு ஒப்பளித் துள்ளது. சமய நிறுவனங்களுக்குச் சொந்த மான எல்லா அசையாச் சொத்துக்களும் உண்மையிலேயே அவைகளின் உடைமைகள் பட்டியலில் இடம் பெறவும், அவைகளின் பெயரில் பதிவு பெறவும், சொத்து விவரப் பட்டியலில் முறையாகக் கணக்கிடப்படவும், திருக்கோயில்களின் உடைமைப் பட்டியலிலும் ஆளுகையிலும் இல்லாத சொத்துக்கள் அனைத்தும் அவைகளின் கணக்கில் கொண்டு வரப்பட்டு அந்தச் சொத்துக்களின் வருவாய் முறையாகக் கணக்கிடப்படவும், ஏதுவாக இத் துறை ஏற்படுத்தப்பட்டது. திருக்கோயில் நிலங்கள் முறையான வகையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்றும், ஆக்கிரமிப்பு, அனுமதியில்லாத இருப்பு அல்லது உடைமை முதலியன இருக்கின்றனவா என்பதனை சரி பார்க்கவும், திருக்கோயில்களுக்குச் சொந்த மான நிலங்கள், கட்டடங்கள், மனைகள் முதலிய வற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

(தொடர்ச்சி 355-ம் பக்கம் காண்க)

அழுகையும் ஆன்மீக வாழ்வும்

திரு. டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள், M.A., M.Litt., Ph.D.

தமிழ்த்துறைத் தலைவர்

திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

பிறந்தவுடன் குழந்தை அழுகிறது. அஃது அழுகால்தான் மக்கட்பேறு பெற்றவர்கட்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகும். மக்கட்பேறு நேரிட்ட இல்லங்கட்கு விசாரிக்க வரும் உறவினர்கள், அன்பர்கள் "குழந்தை அழுததா? என்று கேட்பதை நாம் நன்கு அறிவோம். இதன் பொருள் என்ன? சீதள அலமாரியை விட எத்தனையோ மடங்கு உயர்ந்த நிலையிலுள்ள தாயின் கருவறையில் எல்லா நலன்களும் பெற்றுப் பத்துத் திங்கள், பாங்குடன் வளர்ந்து வந்த குழந்தை புதியதோர் உலகிற்கு—இந்தக் கர்ம பூமிக்கு—வருகின்றது. தாயின் கருவறைக்குள் இருக்கும்போது அதற்கு வேண்டிய "உண்ணும் சோறு, பருகும் நீர்" முதலியவை அனைத்தையும் அன்னையிடமிருந்தே பெற்று விடுகின்றது. அங்கு அதற்கு ஒரு குறையும் இல்லை. இங்ஙனம் "செல்வக் களஞ்சியம்போல்" சேம அறையில் எல்லாப் பாதுகாப்புடன் இருக்கும் குழந்தை, தானே அனைத்தையும் தேடிக் கொள்ளவேண்டிய புதிய உலகிற்கு வருங்கால் அழாமல் என்ன செய்யும்? இந்த "அழுகை மொழிதான்" குழந்தை தானாகக் கற்றுக் கொண்ட மொழியாகும் இந்த ஒரே மொழியைக் கொண்டே குழந்தை தன் பெற்றோரிடமிருந்து சில திங்கள் காலம் அனைத்தையும் பெற்று வாழ்ந்து வளர்கின்றது.

பேருந்து ஓட்டி, ஒலிப்பானைக் (Horn) கொண்டு பல்வேறு கருத்துக்களைப் புலப்படுத்துவதைச் சாலையில் செல்வோர் உணர்ந்து கொண்டு செயல்படுவதைப் போல், பெற்றோரும் குழந்தைப் பராமரிப்பில் பங்கு கொள்ளும் மற்றோரும் குழந்தை தன் அழுகை ஒலியால் புலப்படுத்துவதைப் புரிந்து கொண்டு அதற்கு வேண்டிய நலன்களை நல்கி அதன் தேவைகளை நிறைவு செய்கின்றனர். பேருந்து ஓட்டி ஒலிப்பான் மூலம் தரும் ஒரே ஒலிக்குப் பல பொருள்கள் உண்டு. நடுச் சாலையில் நடந்து செல்வோர் ஒலியைக் கேட்டு 'ஓரமாகப் போ' என்பதாக உணர்ந்து ஒதுங்கி ஓரமாகச் செல்கின்றனர். முன்னால் செல்லும் வண்டி ஓட்டிகள் 'முன்னால் செல்வதற்கு இடங்கொடு' என்பதாக உணர்ந்து இடப்புறமாகச் சற்று ஒதுங்கி வண்டி முன் செல்வதற்கு இடந்தருகின்றனர். விளையாட்டில் மனம் ஒன்றிப் பட்டம் விடும் சிறுவர்களும், பம்பரம் ஆடும் பாலர்களும் ஒலிப்பான் ஒலியைக் கேட்டுப் 'பேருந்து வருகிறது' என்பதாக உணர்ந்து அதற்கு வழி விடுகின்றனர்; தம்மையும் ஆபத்தினின்றும் காத்துக் கொள்கின்றனர். அங்ஙனமே குழந்தையும் 'பால் நினைந்தூட்டாத" தாய்க்குத் தனக்குப் பால் வேண்டும் என்பதை அழுகையால் புலப்படுத்துகின்றது. சிறுநீர் விட்டு ஆடைகளை நனைத்துக்கொண்டு குளிரினாலும், பிற அசௌகரியங்களாலும் துன்பப்படும் குழந்தை அழுகின்றது. அருகில் இருப்போர் அழுகையைக் கேட்டு ஆடைகளை மாற்றி அதன் தேவையை நிறைவு செய்கின்றனர். சில சமயம் குழந்தையைப் பெற்ற அன்னை குழந்தையைச் சிறிது நேரம் மறந்து அக்கம் பக்கத்தாரிடம் 'ஸ்வாரஸ்யமாக' அரட்டை அடித்துக் கொண்டிருக்தும்போது 'தனிமையால் வாடும் குழந்தை "வீர், வீர்" என்று கத்துகின்றது. அன்னை வந்து அதனை அணைத்துக்கொண்டு படுத்ததும், அழுகையை நிறுத்தி ஆனந்தமாக உறங்கத் தொடங்குகின்றது குழந்தை.

பிறந்த குழந்தைக்கு அழவேண்டிய இன்றியமையாமையும் உண்டு. தாயின் கருவறையிலிருக்குங்கால் குழந்தை உயிர்ப்பதில்லை, அன்னையே அதனைச் செய்து அதற்கு

வேண்டிய உயிர்க் காற்றை (Oxygen) நல்கு கின்றாள். ஆதலால் கருவறை வாழ்வில் குழந் தையின் நுரையீரல் (Lungs) செயற்படு வதில்லை. குழந்தை கருவறையினின்றும் வெளிப்போந்ததும் அஃது அழுவதால் நுரை யீரல் செயற்படத் தொடங்குகின்றது. பிறந்த வுடன் அஃது அழாவிடில் மருத்துவப் பெண் அதனைக் கிள்ளியாவது அழ வைக்கின்றாள். இந்த உண்மைதான் 'குழந்தை அழுகதா ?'' என்ற வினாவில் அடங்கியுள்ளது 'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்ற பொன்மொழியில் அடங்கிக் கிடக்கும் உண்மையும் இதுதான். 'பால் குடிக்கும்' என்பது ஒரு மரபுத் தொடர்; 'பிழைக்கும்' என்பது அதன் பொருள். இங்ஙனம் பிறர் மகிழ அழுது பிழைத்த குழந்தை தானாக அறிந்த 'அழுதல்' மொழி யைத் தன் வாழ்வுக்குப் பயன்படுத்திக் கொள் வதை மேலே கண்டோம்.

இந்த உலக வாழ்விலும் பலருக்கு இந்த 'அழுதல்' ஒரு கொள்கையாக அமைந்து விடு கின்றது. அழுதலையே ஒரு கொள்கையாக அமைத்துக் கொண்டு, சண்டித்தனம் செய்து கல்நெஞ்சக் கணவன்மார்களையும் நெகிழச் செய்து தம் காரியத்தை முற்றுவித்துக் கொள் ளும் மனைவிமார்களையும் நாம் காணத்தான் செய்கின்றோம். இந்தப் பேருண்மையைக் கையாண்டு கவிஞர்களும் தம் கவிதைகளிலும், காவியங்களிலும் சிறந்த சொல்லோவியத்தை யும் காவிய மாந்தர்களையும் படைக்கின்றனர். அகநானூற்றில் ஒரு பாடல்: தலைவியின் உடன் பாடு பெறாமல் பிரியும் குறிப்பொடு புறப்படு கின்றான் தலைமகன். அவனை வழியனுப்ப வருவாள் போல் வெளியே வருகின்றாள் தலைமகள், ஆகத்துப் புதல்வனை ஒடுக்கியிருக் கிறாள். 'அறத்தாறு அன்று என மொழிந்த தொன்றுபடு கிளவி, அன்னவாக என்னுநள் போல்' வருகின்றாள். பிரிவின் துன்பத்தை அடக்க முயலுகின்றாள். அடக்க முயன்ற அவளது விழி வழியே பெருகிப் பெருகி வளரும் துன்பத்தை அவளால் பொறுக்க முடியவில்லை. அழுகையை அடக்க முயன்ற தலைவியின் நெஞ்சம் குமுறி நிற்கின்றது. ஆகத்திருந்த புதல்வனுடைய உச்சியை மோந்து நெட்டு யிர்ப்பு விடுகின்றாள். அப்புதல்வனின் முடியிலிருந்த செங்கழுநீர் மாலை அவளுடைய அழற் கொழுந்து போல மூச்சுக் காற்றுப் பட்ட தால் வாடிக் கரிந்து போகின்றது. தலைவன் இதனைக் காண்கின்றான். அழுகை நிறைந்த உள்ளம் புழுங்கி வருகின்ற அவளுடைய வருத் தத்தை உணர்கின்றான் தலைவன். உடனுறை யும் போதே இவ்வாறு புழுங்குகின்றவள், தான் பிரிந்தால் என்னுவாளோ எனக் கருதித் தன் செலவினைத் தவிர்க்கின்றான்.

''முன்னங் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்று நினைந்தேற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்க மொ(டு)
ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு விழந்த அணியழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே''. (அகம் 5)

[முன்னம் — குறிப்பு, ஓவச் செய்தி — ஓவியம் உணர்த்துவது; ஒன்று நினைந்து — உடன்படா மையை நினைந்து; பாவை — கண்மணி; மாய்த்த — மறைத்த; ஆகம் — மார்பு; பயந்த — தந்த; பிணையல் — மாலை; மோயினள் — மோந்து; மணிஉரு — பவளம்போலும் உரு; அணி அழி தோற்றம் — பொலிவற்ற காட்சி; கடிந்தனம் — தவிர்ந்தோம்; செலவு — பயணம்].

என்ற பகுதி இதனை விளக்குகின்றது. தலைவி யின் அழுகையை அடக்கும் முயற்சியாலேயே தலைவன் தன் பயணத்தை நிறுத்திக் கொள் கின்றான்; தலைவி தன் கருத்தினை நிறை வேற்றிக் கொள்கின்றாள். அறுபதினாயிரம் ஆண்டு அரசாண்டு பெரும்புகழ் எய்திய தசரத னைக் கைகேயி அழுதே தன் காரியத்தினை முற்றுவித்துக் கொள்ளும் செயலைக் கம்பநாடன் காட்டுவதை நாம் நன்கு அறிவோம். 'மாகமும் நாகமும் மண்ணும் வென்ற வாளான் கைகேயி யின் அழுகைக்குத் தோற்றுவிடுவதைக் காண் கிறோம். இங்ஙனம் உலக வாழ்வில் 'அழுகை' புரியும் அற்புதத்தை அன்றாட நிகழ்ச்சிகளாலும் கவிஞர்கள் சித்திரித்துக் காட்டும் நிகழ்ச்சி களாலும் அறிகின்றோம்.

இங்ஙனம் உலக வாழ்க்கைக்குப் பெருந் துணையாக இருக்கும் அழுகை, ஆன்ம வாழ்க் கைக்கும் பெருவழியாக அமைவதை அருட் பெருஞ் செல்வர்கள் நமக்குக் காட்டியுள்ளனர். நூல்வழியாகக் கற்றுணர்ந்த உண்மைகளும் ஆன்ம நெறியில் உய்ப்பதற்குத் தவறும் பொழுது இந்த அழுகை கைகொடுத்து உதவு வதை விளக்கியுள்ளனர், அழுகையின்

உரைப்பிற்கேற்ப ஆண்டவன் மீதுள்ள பேரவா இருப்பதைப் புலப்படுத்தியுள்ளனர். ஆழ்வார்கள் அருளியுள்ள திருப்பாசுரங்களிலும், நாயன்மார்கள் திருவாய் மலர்ந்துள்ள திருப்பாடல்களிலும் இதற்குச் சான்றுகளைக் காணலாம்.

திருமங்கையாழ்வார் தன்னுடைய வாழ்நாட்களில் பெரும்பகுதி கொன்னே கழிந்தமைக்குக் கழிவிரக்கம் கொண்டு புலம்புகின்றார்.

''ஊமனார் கண்ட கனவிலும் பழுதுஆய்
ஒழிந்தன கழிந்தஅந் நாட்கள்''.
(பெரிய திருமொழி 1,1:3)

என்பது அவருடைய திருவாக்கு. ஊமையன் ஒருவன் கனாக் கண்டால் அதனை ஒருவரிடம் வாய்விட்டுச் சொல்லி மகிழமுடியாது. ஆகவே ஊமையன் கனவுகள் பழுதேயாகும். ஊமன் ஒருவன் தான் கனவை வாய்விட்டுச் சொல்ல முடியாமற் போனாலும், தன் நெஞ்சாலாவது நினைந்திருந்து மகிழ்தல் கூடும். அங்ஙனம் தான் தனக்குள்ளேயே மகிழக் கூடிய விஷயமும் ஒன்றில்லாமையால் ஊமன் கண்ட கனவைவிட தன் நாட்கள் வீணாகக் கழிந்தமைக்கு அங்கலாய்க்கின்றார் ஆழ்வார். கடந்த காலங்களில் ஆற்றின் வழியாகப் பாய்ந்து சென்று ஆழியில் கலந்த நீரை அளவிட்டுக் கூறமுடியாது. அங்ஙனமே, தன் வாழ்நாளின் பெரும் பகுதி வீணாகக் கழிந்துவிட்டதே என்று சோக உணர்ச்சியுடன் அழுகின்றார். தான் அன்று திருக்கோவலூரில் கண்ட எம்பெருமானின் திருவடிகளைத் தொழுதவாறு கடந்த காலத்தில் செய்ய முடியவில்லையே என்று பரிதபித்துப் பேசுகின்றார் பொய்கையாழ்வார்.

''பழுதே பலகாலும்
போயின வென்று அஞ்சி அழுதேன்''

என்பது அவரது திருமொழி (முதல். திருவந். 16)

ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் தனக்கு அறிவு மலராத காலத்தில் இராமபிரானைத் தோத்திரம் செய்யாது போனமைக்கு இரங்கி அழுகின்றார்.

''தெரிந்துணர் வொன்(று) இன்மையால்
தீவினையேன் வாளா
இருந்தொழிந்தேன் கீழ்நாட்கள்
எல்லாம்''

என்பது அவரது திருவாக்கு (பெரிய திருவந்தாதி-82). இந்தத் திருவாக்கினை 'உணர்வு இன்மையினால், உணர்வு ஒன்றின்மையால், தெரிந்து உணர்வு ஒன்றின்மையால்' என்று பொருள் காணவேண்டும். 'உடல் வேறு ஆன்மா வேறு' என்ற ஞானமில்லாமையைக் கருதி 'உணர்வு இன்மையால்' என்றார். ஆன்மா எம்பெருமானுக்கு அடிமைப்பட்ட பொருள்' என்கின்ற ஞானமில்லாமையை நினைந்து 'உணர்வு ஒன்று இன்மையால்' என்றார். 'பகவானுக்கு அடிமை என்ற கொள்கைக்கு எல்லை நிலம் பாகவதர்க்கு அடிமை என்ற கொள்கை' என்கின்ற ஞானமில்லாமையைத் தெரிந்து, 'தெரிந்து உணர்வு ஒன்று இன்மையால்' என்றார். இந்த உணர்வு நிலைகளின்மையால் தன்னைப் 'பாவியேன்' என்றும் சொல்லிக் கொள்கின்றார்.

இந்த ஆழ்வாரின் திருவாய்மொழி ஆயிரமும் இறைவன் திருவடிகளில் கைங்கரியம் புரிய வேண்டும் என்ற பேரவாவினைப் பல்வேறு நிலைகளில் வெளியிடும் அழுகைத் திருப்பாசுரங்களாகும்.

''செடியார் ஆக்கை அடியாரைச்
சேர்தல் தீர்க்கும் திருமாலை
அடியேன் காண்பான் அலற்றுவன்''
[அலற்றுவன்—கதறுகின்றேன்]

என்பது அத்தகைய அழுகையைக் காட்டும் பாசுரப் பகுதி (திருவாய் 1.5:7). ஸம்ஸாரமாகின்ற பெருங்காடு நிறைந்த சரீர சம்பந்தத்தைத் தவிர்த்துத் தருகின்ற எம்பெருமானைக் காணும் பொருட்டு ஆழ்வார் கூவுவதைப் பாடல் காட்டுகின்றது. இங்கு 'ஸம்ஸாரம்' என்பது பிறவித் தொடர்கள் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையை. இன்னொரு பாசுரத்தில் (திருவாய் 3.2:9),

''கூவிக் கூவிக் கொடுவினைத்
தூற்றுள் நின்று
பாவியேன் பலகாலம்
வழிதிகைத் தலமருகின்றேன்''

[தூறு—புதர்; அலமருதல்—வருந்திக் கிடத்தல்]

என்று பேசுகின்றார். இங்குத் 'தூறு' என்பது மேலே குறிப்பிட்ட ஸம்சாரத்தையே குறிக்கின்றது.

இன்னொரு பாசுரத்தில் (திருவாய் 4.7:3) தனக்குக் காட்சி தந்தருளுமாறு வேண்டுவது கல்நெஞ்சத்தையும் உருக்கும் தன்மையது.

"தாவி வையம் கொண்ட எந்தாய்
தாமோதரா என்று என்று
கூவிக் கூவி நெஞ்சுருகிக் கண்பனி
சோர நின்ருல்
பாவீநீ என்று ஒன்று சொல்லாய்
பாவியேன் காணவந்தே".

என்பது அப்பாசுரப் பகுதி. "திருவடிகளால் மூன்று உலகங்களையும் அகப்படுத்திக் கொண்ட எந்தையே! தாம்பால் ஆப்புண்ட தழும்பை வயிற்றிலுடையவனே! என்று பல காலும் விடாயுடன் கூவிக் கூவி நெஞ்சு நீர்ப் பண்டமாக உருகிக் கண்ணீர் பெருக நின்ருல் பாவியான அடியேன் சேவிக்கும்படியாகக் கண்ணுக்கு இலக்காகி வந்து. 'ஆழ்வாரே, நீர் பாவி' என்று சொன்னுலும் போதும், அதுவும் சொல்லுகின்ருய் இல்லை" என்பது இதன் கருத்து. பிறிதொரு பாசுரத்தில் (திருவாய் 6, 9:6)

"பாய் ஓர் அடிவைத்து அதன்கீழ்ப்
பரவை நிலம் எல்லாம்
தாய் ஓர் அடியால் எல்லா
உலகும் தடவந்த
மாயோன்! உன்னைக் காண்பான்
வருந்தி, எனைநாளும்
தீயோடு உடன்சேர் மெழுகாய்
உலகில திரிவேனே?"

[பாய்வைத்து – பரப்பிவைத்து; தாய் – தாவி அளந்து, தடவந்த—ஆக்கிரமித்த]

என்று கூறுவர். முன்னிரண்டு அடிகளின் கருத்தை ஆருயிரப் படியில் "என்னை உன் திருவடிகளிலே சேர்க்கவேணுமென்று உலகத்தை அளக்கும் செயலை வியாஜமாகக் கொண்டு விலையிலாததொரு இரத்தினம் கெடுத்துத் தேடுவாரைப் போலே பெரிய வருத்தத்தோடே உன் திருவடியாலே என்னைத் தேடிக் கொண்டு திரிந்த உன்னை" என்று பிள்ளான் அருளிச் செய்துள்ளார் 'நீ என்னைத் தேடித் திரிந்த காலத்தில் உனக்கு நான் அகப் பட்டேன் இல்லை; உன்னை நான் தேடித் திரியும் இக்காலத்தில் எனக்கு நீ அகப்படுகின்ருய் இல்லை' என்று ஆழ்வார் கூறுவது போல் உள்ளது.

இங்ஙனம் ஆழ்வார் திருநகரியில் திருப்புளி யாழ்வார் நிழலிலிருந்து கொண்டு அழலிலிட்ட மெழுகென உருகி ஆண்டவனை அழுது அழுது கூவியழைப்பதே அவர் அருளிய திருவாய் மொழி. அவருடைய திருக்குரல் சிந்தை செல் லாச் சேண்நெடுந்தூரத்திலுள்ள அந்தமில் இன் பத்து அழிவில் வீடாகிய பரமபதத்திலும் ஒலிக் கும் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. இந்த அழுகைக் குரலைக் கேட்ட பரமபதநாதன் ஆழ் வாருக்குத் தன் திருவடிப் பேற்றை அருளினுன் என்பதை "அவா அற்று, வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்" என்ற அவரது திருவாக்கிலேயே (திருவாய் 10,10 : 10) அறி கின்ருேம்.

இங்ஙனமே, சைவ அடியார்களுள் மணி வாசகப் பெருமான் அழுகையையே வீடுபெறும் வழியாகக் கொண்டு உய்ந்த ஞானியாவார். அவர்,

"யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனுல் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே".

என்று (திருச்சதகம் — 90) கூறியிருப்பதை அறியலாம். அவருடைய திருவாசகம் முழு வதும் இங்ஙனம் ஆண்டவனை நோக்கி அழுத திருப்பாடல்களேயாகும். இவை இன்று நமக்கு 'எல்லை, மருவா நெறியளிக்கும் வாத வூர் எங்கோன், திருவாசகம் என்னும் தேன்' ஆகத் திகழ்கின்றது. மாணிக்கவாசகரின் அழு கைக் குரலை நன்கு அறிந்த பரஞ்சோதியார் அவரை "அழுது அழுது அடி அடைந்த அன்பர்" (திருவிளையாடல் — மதுரைக் காண்டம்—செய் 21) என்று போற்றி மகிழ் கின்ருர்.

'திருவாய் மொழி,' 'திருவாசகம்' ஆகிய இரண்டு சொற்ருெடர்களும் ஒரே பொருளைத் தருவன. இரண்டுமே இரண்டு பெரிய ஞானி யரின் அழுகுரல்களின் தொகுப்புக்கள்; ஆன் மிக வாழ்விற்கு நெறியமைத்துத் தரும் அருள் மொழிகளமைந்த கருவூலங்கள். இவை இரண் டையும் பயின்று அழுகை வழியைத் துணை யாகக் கொண்டு ஆன்மிக வாழ்வினை அமைத் துக் கொள்வோமாக. இந்த வாழ்வே ஆண்டவனை அடையும் பெருநெறி என்பதை அறிவோமாக. ★

வாழும் நெறி

மாட்சிமிகு. திரு. எஸ். மகராஜன் அவர்கள், B.A., B.L.

சென்னை உயர்நீதிமன்ற நடுவர்

லெயோ டால்ஸ்டாய் என்ற ஞானி ஒருவர் ரஷ்யாவில் வாழ்ந்தார். அவர் காலத்திலே ரஷ்யாவில் பிச்சைக்காரர்களுடைய தொல்லை அதிகம். மாஸ்கோ நகரத்தின் 24 — ஆவது சாலையிலே அவர் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஒரு பிச்சைக்காரன் அவரை வழி மறித்து, அவர் சட்டையைப் பிடித்து இழுத்து, ''ஐயா, பிச்சை'' என்று கேட்டான். டால்ஸ்டாய் இளக்கமான மனமுடையவர்; பரிவு நிறைந்தவர். பிச்சை கொடுக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில், தன் நீண்ட கையைச் சட்டைப் பைக்குள் விட்டுத் துழாவித் துழாவிப் பார்த்தார். பைக்குள்ளே ஒருகாசுகூட இல்லை. மனவேதனையோடு பிச்சைக்காரனைப்பார்த்து, ''பையிலே பணமில்லையே, தம்பி, பணமில்லையே'' என்று சொன்னார். இதைக்கேட்டவுடன் பசியால் வதங்கிப் போயிருந்த பிச்சைக்காரன் முகத்திலே என்றுமில்லாத ஒரு ஒளி பிறந்தது. ''பிச்சைக்காசு இல்லையென்பதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். பிச்சை கொடுப்பதைக் காட்டிலும் பெரிய உதவியொன்றை நீங்கள் எனக்குச் செய்து விட்டீர்கள். ஐயா, 'தம்பி' என்றல்லவா என்னை அழைத்து விட்டீர்கள்! அது போதும்'', என்று சொன்னான் பிச்சைக்காரன். கொஞ்சமும் தன்னை மதிக்காத இவ்வுலகத்திலே, தன்னையும் ஒரு உருப்படியாக மதித்துத் தம்பியென்று உறவு கொண்டாடிய டால்ஸ்டாயிடத்திலே, பிச்சைக்காரனுக்கு அளவுகடந்த மதிப்பு ஏற்பட்டுவிட்டது. கேவலம் பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும், ஊக்கமும் பரிவினால் கிட்டிவிடுகிறது.

உலகத்திலுள்ள துன்பங்கள் பலவற்றிற்கும் காரணமாக இருப்பது பரிவின்மைதான். அந்தப் பரிவைப் பெறுவது எப்படி? நாள்தோறும் கொஞ்ச நேரமாவது நம்மைப்பற்றிய சிந்தனையினின்றும் நம்மை விடுவித்துக் கொண்டு, கூடு விட்டுக்கூடு பாய்ந்து, மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து, அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயலுவோமேயானால், டால்ஸ்டாய்க்கு ஏற்பட்டபரிவுணர்ச்சி நமக்கும் கைவரும்.

நியூயார்க் நகரத்திலேயிருந்த ஓர் உள மருத்துவ நிபுணரிடத்திலே ஆலோசனை கேட்பதற்காக வந்தாள் ஒரு பெண்; ''நான் ஒரு தொழிற் சாலையின் தலைமை அலுவலரிடத்திலே சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன். என்னுடைய அதிகாரி ஒரு சுடுமூஞ்சி எனக்கு அவனுடைய கோபதாபங்களை யெல்லாம் தாங்க முடியவில்லை. அவனுடைய கொடுங்கோன்மையை நினைத்தால் இரவில் தூக்கம் வருவதில்லை. வேலையை விட்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்திருக்கிறேன். அதற்கு முன் உங்கள் ஆலோசனையையும் கேட்கலாமே என்று வந்தேன். என்ன சொல்லுகிறீர்கள்'' என்று பரபரப்போடு கேட்டாள். வைத்தியர் சொன்னார்: ''அம்மா, நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன். அதன்படி மூன்று மாதம் நடந்துவிட்டு மறுபடியும் என்னிடம் வா. பிறகு ராஜிநாமாவைப் பற்றிச் சிந்திப்போம்'' என்றார்.

அவர் சொன்ன யுக்தி இதுதான்: ''சுடுமூஞ்சியிடத்திலும் சில நற்குணங்கள் பதுங்கிக் கொண்டிருக்கும். அவற்றைத் தேடிக் கண்டு பிடித்து, வாயார அவற்றைப் பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக் கொள்'' என்று சொல்லியனுப்பினார்.

இந்த ஆலோசனையை மேற்கொள்ளத் தலைப்பட்டாள் சுருக்கெழுத்துப் பெண். மறு நாள் சுருக்கெழுத்து எழுதுவதற்காக எஜமானனிடம் போனாள். அவன் அணிந்திருந்த சட்டை அழகாக இருந்தது. அதை உள்ளன்போடு பாராட்டினாள். அடுத்த நாள் அவனுடைய ஆங்கில எழுத்துநடையின் நுணுக்கத்தை உணர்ந்து பாராட்டினாள். இப்படியாக, பாராட்டு ஏற, ஏற, எஜமானனுடைய சுடுமூஞ்சித்தனம் குறைந்துகொண்டே வந்தது. கதையை வளர்ப்பானேன்! சுடுமூஞ்சியாயிருந்த அவன் காதலனாகிவிட்டான். மூன்று மாதங்கள் கழித்து மருத்துவரைப் பார்க்கச் சென்றாள் பெண். ''என்னம்மா, இராஜிநாமா பண்ண வேண்டியதுதானே?'' என்று கேட்டார் அவர். ''ஐயோ, இராஜிநாமாவா? என்னை அவர் நாளைக்குத் திருமணம் செய்துகொள்ளப் போகிறார். பாருங்கள் இதை,'' என்று சொல்லி அவர் பரிசாகக் கொடுத்திருந்த வைரமோதிரத்தைக் காட்டினாள். பரிவினால் வந்த விளைவை அது டால் அடித்துக் காட்டிக்கொண்டிருந்தது.

நம்மைச் சுற்றியுள்ளவர்களிடத்தில், நம்மிடமிருப்பது போலவே, பல குற்றங்களிருக்கலாம். அவற்றைக் கொஞ்ச நேரமாவது மறந்து விட்டு, அவர்களிடமிருக்கும் ஒரு துளி நல்ல குணத்தை முயன்று கண்டுபிடித்து, நாம் பாராட்டக் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டால், நம்மிடமிருக்கும் பொறாமை நம்மை விட்டு அகலும்; இங்கிதம் பெருகும்; சமுதாயத்தில் மங்களம் பொங்கும். ★

திருஈங்கோய் மலைக் காட்சிகள்

திரு. ம. அ. முருகேச முதலியார் அவர்கள், B.A., B.L.,

அறநிலையத் துணையாணையர், மதுரை.

சைவ சமயத் தோத்திரப் பாடல்கள், பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பதினோராம் திருமுறையைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகள். இதில் திருவாலவாயுடையாரின் திருமுகப்பாசுரம் முதல் 40 பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. தோத்திரப்பாடல்களும் சாத்திரப்பாடல்களும் சுவையற்ற வறட்சியான இலக்கியங்கள் என்ற தவறான எண்ணம் ஒரு சில மக்களிடையே இருந்துவருகிறது. ஆனால் ஊன்றிப் பார்க்கின், அவைகள் சிறந்த கவிதை இலக்கியப் படைப்புகள் என்பது விளங்கும். பதினோராம் திருமுறை என்றதும், அதில் அடங்கிய காரைக்கால் அம்மையார் பதிகங்களும், நக்கீரர் ஆக்கிய திருமுருகாற்றுப் படையும் பிறவுமே நம் நினைவுக்கு வருகின்றன. எனினும், இவை தவிரவும் பல அரிய இனிய நூல்களையும் திருமுறை தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

''காலைக்கடம்பர், மத்தியானச்சொக்கர், மாலைத் திருஈங்கோய் நாதர்'' என்பது ஆன்றோர் வாக்கு. ஒரே நாளில் இம்மூன்று மூர்த்திகளையும் வழிபடுவது மிகப் பயனுடையது என்பது, இந்த வாக்கால் தெரியவருகிறது. மூன்றாவதாகச் சொல்லப்பட்டிருக்கும் திருஈங்கோய்நாதர், திருஈங்கோய் மலையில் எழுந்தருளி இருக்கின்றார்; இம்மலை திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் உள்ளது. ''திருவேங்கிமலை'' என்று மருவி வழங்கப்படுகிறது. இம்மலை குறித்து எழுபது பாடல்களைத் ''திருஈங்கோய் மலை எழுபது'' என்று நக்கீரர் பாடி இருக்கின்றார். இது பதினோராந் திருமுறையில் தொகுக்கப்பட்ட நூல்களுள் ஒன்று. திருமுருகாற்றுப்படை பாடிய சங்ககாலப் புலவர் நக்கீரரும், திருஈங்கோய்மலைஎழுபது முதலிய மற்றப்பதிகங்களைப் பாடிய நக்கீரரும் ஒருவரே என்றும், வேறு வேறானவர் என்றும் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. சங்க இலக்கியத்திற்கே தனிச்சிறப்பைத் தரும் இயற்கை வருணனையும் சொற்செறிவும் 'திருஈங்கோய்மலை எழுபதின்' சிறப்பு அம்சங்களாகும். இம்மலையில் எழுந்தருளியிக்கும் சிவபெருமானின் சிறப்புக்களும், திருவிளையாடல்களும் அமைந்த இந்நூலில் அம்மலையின் வளமும், சிறப்பும் பெருமளவில் பேசப்பட்டுள்ளன. ''நவில்தொறும் நூல் நயம்'' என்றாற் போல், படிக்கப்படிக்கத் தித்திக்கும் கவிதை வளம் இந்நூலில் நிறைந்து விளங்குகின்றது. அம்மலையில் நக்கீரர் கண்ட காட்சிகளில் சிலவற்றை நாமும் காண்போம்.

(1) கூட்டம் கூட்டமாக மான்கள் மலை எங்கும் ஓடுகின்றன. கூட்டத்தை விட்டு ஒரு இளமான், பிரிந்துபோன தன் கூட்டத்தை எண்ணி ஏங்குகிறது. மயங்கியவாறு வழிதவறி வந்த அந்த இளமான் குறமகளிர் வசிக்கும் குடில்கள் பக்கமாக வந்து விடுகிறது. குடில்களிலே இருக்கும் குறமகளிர் அம்மானின் நிலை கண்டு இரங்கி அதற்கு ஆதரவு காட்டுகின்றனர். தாய்க்குலமாதலால் அவர்களுக்கு அந்த இளமானின் மனத்துயருடன் பசித்துயரமும் உள்ளத்தைத் தொடுகிறது. தாயன்புமீக்கூரச் சந்தன மரத்தின் இலையைப் பறித்துத் தேனில் குழைத்து வளைஅணிந்த தம் கைகளால் அவ்விள மானுக்கு ஊட்டுகின்றனர். இந்தக் காட்சியைக் கவிதையிலே பார்ப்போம்.

''அந்தஇள மான்குழவி ஆயம் பிறந்ததற்குக்
கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர்—சந்தின்
இலைவளைக்கை யால்கொடுக்கும் ஈங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை''.

(2) மலைச்சாரலிலே யானைக் கூட்டங்கள் உலவுகின்றன. களிறும் பிடியும் கூடிக்களிக்கின்றன. அவைகளில் ஒருபிடி ஊடிக்கொண்டு போய்த் தனித்து உறங்குகிறது. அதன் களிறு அதைத் தேடிகொண்டுபோய் நல்ல கனிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்து அதன் ஊடலைத் தணிக்கிறது.

''ஊடிப் பிடிஉறங்க ஒண்கதலி வண்கனிகள்
நாடிக் களிறு நயந்தெடுத்துக்—கூடிக்
குணமருட்டிக் கொண்டாடும் ஈங்கோயே
வானோர்
குணமருட்டும் கோளரவன் குன்று''.

(3) இன்னுமொருகாட்சி: இம்மலைச்சாரலிலே எயினர் வாழ்கின்றனர். அக்கூட்டத்தின் காளை ஒருவன், தன் துணைவியைப் பிரிந்து வில்லேந்தி வேட்டைக்குச் செல்கின்றான். கையில் வில் சுமந்து சென்றாலும், அவன் மனம் அவன் காதலியைச் சுமந்து செல்கின்றது. அம்மலையில் உள்ள இயற்கை வளங்கள் எல்லாம் அவன் காதலியின் வனப்பையே நினைவூட்டுகின்றன. அவள் நினைவாகவே வில்லைச் சுமந்து அலைகின்றான். எந்த வேட்டையும் ஆடிய பாடில்லை. வேட்டையில் மனம் இருந்தால் அல்லவோ, அதற்கான தொழில் முறை வரும்? மனம் எல்லாம் குறத்தியின்பால் செல்ல, வெற்று நோக்கோடு அலையும் அவனுக்கு முன்பாகக் கன்னிமான் ஒன்றுவந்தது. அதைக்கண்ட வேடனுக்கு வேட்டை நினைவு வந்து வில்லை வளைத்து நாண்பூட்டி அம்பைத் தொடுக்கின்றான். குறிபார்க்கும்போதில், கன்னி மானின் அச்சத்தால் மருண்ட பார்வை கொண்ட கண்கள், அவனுடைய குறத்தியின் அழகிய மருட்சி மிக்க கண்களை நினைவூட்டுகின்றன. தன் தலைவியின் கண்களை நினைத்துக்கொண்டு, அதன் மீது அம்பு செலுத்தாமல் நின்றுவிடுகின்றான். மானையும் நகரவிட்டு விடுகின்றான். இதோ பாட்டு.

எய்யத் தொடுத்தோன் குறத்திநோக்
கேற்றதெனக்
கையிற் கணைகளைந்து கன்னிமான்—
பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே
தூங்கெயில்கள்
சென்றன்று வென்றான் சிலம்பு''

இந்தப் பாட்டிலே இன்னொரு நயம். திருஈங்கோய் மலை சோழ நாட்டிலே இருந்தாலும், பாடிய புலவர் ஆகிய நக்கீரர், பாண்டி நாட்டினருக்கே உரித்தான 'பைய' என்ற சொல்லைக் கவிதையிலே காண்கின்றோம். இங்கே ''பையவேசென்று பாண்டியற்காகவே'' என்ற திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் வரி, நம் நினைவுக்கு வருகின்றது.

(4) மலைச்சாரலின் இன்னொருபுறத்திலே இலவமரங்கள் ஓங்கிப் பரந்து வளர்ந்திருக்கின்றன. அம்மரங்களிலே சிவந்த நெருப்புத் துண்டகளாக அரும்புகளும் மலர்ந்திருக்கின்றன. அறிவுக் கொழுந்தாகிய ஒரு ஆண் குரங்கு அந்த அரும்புகளைக் கண்டு அவைகள் நீறுபூத்த நெருப்பென்று கண்டுபிடித்து விடுகின்றது. ஆப்பைப் பிடுங்கிய இனமாயிற்றே. நெருப்புத்துண்டை அப்படியே விட்டுவிடலாமா? விட்டு விட்டால் தன் இயற்கைக் குணத்துக்கு ஊறு அல்லவா? கொள்ளிக் கட்டையை ஊதித் தீப்பொறி பறக்கச் செய்து காட்டை எரிக்க வேண்டாமா? ஆகவே அந்த நீறுபூக்த நெருப்பை வாயால் ஊதிக் களைத்துப் போய், விசிறிதேடி மூங்கில் இலைகளை ஒடித்து வந்து வீசுகிறது.

ஓங்கிப் பரந்தெழுந்த ஒள்இலவத் தண்போதைத்
தூங்குவதோர் கொள்ளி எனக்கடுவன் —
மூங்கில்
தழையிறுத்துக் கொண்டோச்சும் ஈங்கோயே
சங்கக்
குழையிறுத்த காதுடையான் குன்று''

'தூங்குவதோர் கொள்ளி' என்று படிக்கும் போது நமக்கு விநோதரச மஞ்சரியில் வரும் பரமார்த்த குருவின் கதையும், நெருப்பைக் கிளறும்குரங்கின் முயற்சியும், அதன் இயற்கைக் குறும்பும் நினைவுக்கு வருகின்றன. கவிதையின் சரளமான நடை, நம்மை வாய்விட்டுப் படிக்கத் தூண்டுகிறது.

(5) எயினர் சேரி ஒன்றில், மகளிர் உணவு அருந்த எண்ணினர். கல்லுரலிலே அவர்கள் தினை இடித்தனர். இடிப்பதற்கு உலக்கை வேண்டாமா? மரம் செதுக்கி இருப்புப்பூண் போட்டு உலக்கை செய்ய வாய்ப்பில்லை. அதைத் தேடவும் தேவையில்லை இருக்கவே இருக்கிறது. குறவன் ஒடித்து வந்த யானைக் கொம்புகள். அக்கொம்புகளால் திணை மாவு இடிக்கின்றனர். குறவன் கைந்நிறைய நீர் மொண்டு வருவதுபோல் கொம்புத் தேன் கொண்டு வருகின்றான். தினைமாவைத் தேனில் கலந்து உண்ணுகிறார்கள்.

''கருங்களிற்றின் வெண்கொம்பாற் கல்லுரல்வாய்
நல்லார்
பெருந்தினைவெண் பிண்டி இடிப்ப—வருங்குறவன்
கைக்கொணரும் செந்தேன் கலந்துண்ணும்
ஈங்கோயே
மைக்கொணரும் கண்டன் மலை''.

— தொடரும்

இராமனும் கோவிந்தனும்

“மான்எய் நோக்கி மடவாளை
மார்வில் கொண்டாய்! மாதவா!
கூனே சிதைய உண்டைவில்
நிறத்தில் தெறித்தாய்! கோவிந்தா!
வானார் சோதி மணிவண்ணா!
மதுசூதா! நீ அருளாய், உன்
தேனே மலரும் திருப்பாதம்
சேரு மாறு வினையேனே!”

என்பது நம்மாழ்வார் அருளிய ஒருதிருவாய் மொழிப் பாசுரம். இதன்கண் “கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்” என்னும் வரியில், கூனியின் முதுகில் உண்டைவில் எறிந்த செய்தி வருகின்றது. இராமபிரானே, தன் இளமைக் காலத்தில் மந்தரை என்னும் கூனியின் முதுகில் விளையாட்டாக உண்டைவில் எறிந்தான் என்பதுதான். தொன்றுதொட்டுக் கூறப்பட்டு வரும் வரலாறு,

“பண்டைநாள் இராகவன்
பாணி வில்உமிழ்
உண்டை உண்டதனைத் தன்
உள்ளத்து உன்னுவான்”

என்பது, மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் வரும் கம்பர் கூற்று, இங்ஙனமாகவும், இராமபிரான் இத்தகைய ஒரு தீங்கு செய்ததாகச் சொல்ல, ஆழ்வார்க்குத் திருவுள்ளம் இசைய வில்லையாகலின்,

“பல்லா யிரவர் இவ்வூரிற்
பிள்ளைகள் தீமைகள் செய்வார்
எல்லாம் உன்மேல் அன்றிப் போகாது”

என்று பெரியாழ்வார் பாடுவதுபோல, இக் குற்றத்தையும் கண்ணபிரான் செய்தது போலவே ஏற்றிவைத்து, அக்குறிப்பு வெளிப் படுமாறு,

“கூனே சிதைய உண்டைவில்
நிறத்தில் தெறித்தாய், கோவிந்தா”

என நம்மாழ்வார் பாடியருளினர். இராமபிரான் செய்த தீங்கினை, இங்ஙனம் கண்ணபிரான் செய்ததாகக் காரணமின்றி வறிதே ஏற்றி வைத்துப் பாடலாமோ? எனச் சிலர் வினவக் கூடும். கண்ணபிரான் தீங்கு செய்யாதிருந் தாலும், பிறருடைய தீங்கும் அவன் தலையில் ஏறும் என்பதனை வலியுறுத்துவதற்குப் பின் வரும் புனைந்துரைக் கதை ஒன்று. நம்பிள்ளை என்னும் வைணவப் பெருஞ்சான்றோரால் சுவை கெழும எடுத்துக் காட்டப்பெறுகின்றது.

ஒரு திருடன் ஓர் அந்தணனின் வீட்டில் கன்னம் வைத்தான். அவ்வீட்டின் அப்பகுதி அன்றைக்குத்தான் சுவர் வைக்கப்பெற்றிருந்தது. ஈரச் சுவராக இருந்ததனால் அஃது இடிந்து விழுந்து, கன்னம் வைத்த கள்வன் மாண்டு போனான். அவனுடைய உறவினர்கள், அந்தணனே அவனைக் கொன்றதாகக் குற்றம் சாற்றினர். அந்தணனும், கள்வனின் உறவினரும், அரசனிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். அந்தணன் யான் குற்றமிழைத்திலேன், சுவர் வைத்த கூலியாட்கள் தான் காரணம் என்றான். அவர்கள், தண்ணீர் விடுகிறவன் அதிகமாக வார்த்து விட்டான் என்றனர். அவனோ, குயவன் பெரிய பானையைக் கொடுத்துவிட்டான் என்றான். குயவனோ, யான் பானை வனையுங்கால், தெருவழியே ஒரு விலைமகள் சென்றுகொண்டும் வந்துகொண்டும் இருந்தாள். அவளைக் கண்டு மதிமயங்கிய யான் பானையை அளவாகச் செய்யமுடியாமற் போயிற்று என்றான். அரசன் விலைமகளை அழைத்து வினவ, வண்ணான் என் சேலையை விரைவில் கொணர்ந்து தராமையினால், அதனை வாங்கிவர யான் தெருவழியே பலமுறை போக வரத் திரிந்தேன் என்றாள். வண்ணானோ, நான் துணி துவைக்கும் கல்லிலே ஓர் அமணன் வந்து அமர்ந்து தியானத்தில் இருந்தான். யான் எவ்வளவு முயன்று பார்த்தும் அவன் எழுந்து செல்லவில்லை. அவனாகவே எழுந்து சென்ற பின்புதான் யான் சேலையைத் துவைத்துக் கர முடிந்தது என்றான். அரசன் அமணனை அழைத்துக் கேட்க, அவன் மௌன விரதம் பூண்டவன் ஆதலால் ஒன்றும் பேசமால் இருந்தான். அதுகண்ட அரசன், ‘உண்மைக்கு உத்தரமில்லை’ என்றிருக்கிறான். ஆதலின் இவனே குற்றவாளியாதல் வேண்டும் என்று தீர்மானித்து, அவன் தலையை வெட்டி விடுமாறு கட்டளையிட்டான் என்பது கதை. எதனாலோ நிகழ்ந்த குற்றத்திற்குரிய பழியும் தண்டனையும், வீணாக ஒரு தீங்கும் செய்தறியாத அமணனுக்கு நேர்ந்தன.

“அன்றிக்கே, தீம்பு சேருவது
கிருஷ்ணனுக்கே
யாகையாலே. போம்பழி யெல்லாம்
அமணன் தலையோடே என்னுமா போல,
அவன் தலையில் ஏறிட்டுச் சொல்லுதல்”

எனவரும் நம்பிள்ளை ஈட்டுரையின் பகுதி, “போம் பழி எல்லாம் அமணன் தலையோடே என்னுமா போல” என்னும் ஒரு பழமொழியினை எடுத்துக்காட்டி. இராமபிரானுக்கு ஆம்பழி எல்லாம் கூடக் கண்ணபிரானாகிய கோவிந்தன் மீது ஏற்றி வீண்பழியாக உரைக்கப்படும் என நம்பிள்ளை என்பவர் விளக்கியிருக்கும் சுவைத் திறம், அறிந்து மகிழற்பாலது.

— ஆசிரியர்,

அவையடக்கம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

'அவையடக்கம்' என்பது, நம்முடைய தமிழிலக்கியங்கள் பலவற்றிலும், 'கடவுள் வாழ்த்து' என்னும் பகுதியை அடுத்து வருகின்ற, ஒரு சிறப்பான—சுவைமிக்க—நல்ல பகுதியாகும். தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற நூல்களில், 'அவையடக்கம்' என ஒருபகுதி தனியாக இருக்கக் காண்கிலோம். எனினும், திருத்தக்கதேவர் இயற்றியருளிய சீவகசிந்தாமணி முதலிய பழைய விழுமிய தமிழ் இலக்கியங்களில் அவையடக்கம் என்பது பயின்று வரக் காண்கிறோம். தாம் இயற்றும் நூலில் பல குற்றங்குறைகள் காணப்படினும், அவற்றைப் பொறுத்தருளி, அறிவுடைய பெருமக்கள் தம்முடைய நூலை இகழாது ஏற்றுக் கோடல் வேண்டும் என வேண்டிக் கொள்ளும் முறையில், கவிஞர்கள் தம்மைப் பெரிதும் தாழ்த்திக்கொண்டு, இப்பகுதியிற் பல பாடல்களை அமைப்பர். அடிப்படைக் கருத்து ஒன்றேயாயினும், இதனை வெவ்வேறு வகைகளில், பல்வேறு உவமைகள் முதலியன காட்டி, அழகும் சுவையும் அருமையும் பெரிதமையக் கவிஞர்கள் வெளியிட்டிருக்கும் திறம், நினைத்தொறும் வியப்பும் மகிழ்ச்சியும் விளைவிப்பதாகும். அம்மட்டோ? அவையடக்கக் கவிதைகள், அவ்வக் கவிஞர்களின் குணநலங்களைப் புலபடுத்துவதுடன், அவர்களின் சிறந்த பல புலமைநலக் கூறுகளுக்கு ஏற்றவண்ணம் அழகுற அமைகின்றன.

பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை :

அண்மைக் காலத்தில், திருவாவடுதுறை ஆதீனத்துப் பெருங்கவிஞரேராக விளங்கியிருந்த மகாவித்துவான் திரு மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் அருமை பெருமைகளை, தம் தமிழுலகம் நன்றியும். அவர்கள் பாடியருளிய அரும்பெறல் நூல்கள் எத்தனையோ பல. அவற்றுள் ஒன்றாகிய திருவம்பர்த் தலபுராணத்தில் வரும் அவையடக்கச் செய்யுட்கள் சிலவற்றின் பொருளை மட்டும், இங்குச் சுருக்கமாகக் கண்டு சுவைத்து இன்புறுவோம்:—

கேனோப நிடதம்:

(1) பிரமதேவர் வழிபட்ட திருவம்பர்ப் பிரமபுரேசரின் புராணம் பாடுவதற்கு உனக்குத் தகுதியில்லை என்று சிலர் கூறக்கூடும். ஒரு காலத்தில் திருமால் முதலிய தேவர்களும் கூடத் தன்னை அசைக்க முடியாதபடி நிலை பெற்று நின்று, ஒரு துரும்புங்கூட வெற்றி பெற்றது என்னும் வரலாற்றைக் கேனோபநிடதம் கூறுகின்றது. ஆதலின் இறையருள் பெற்றால், இறையருளைத் துணையாகப் பற்றினால், எளியவன் ஆகிய யானும் இந்நூலைப் பாடுதல் இயலும்.

''பிரமனூர் பூசை கொண்டு
பெருந்திருக் கோயில் மேய
பரமனூர் புராணம் பாடும்
பண்புனக் கில்லை என்னில்,
உரமனூர் அணங்கி னோர்முன்
னோரைவெல் துரும்பு போலத்
திரமனூர் அருள் இலேசம்
சேர்தரின் உண்டாம் அன்றே''

குறிலும் நெடிலும்:

(2) தமிழில் உயிர் எழுத்துக்கள் குறில் நெடில் என இருவகைப்படும். குறுகிய ஓசையையுடைய குற்றெழுத்துக்கள் இருத்தல் பற்றியே, நீண்ட ஓசையையுடையன என்னும் பொருளில் மற்றைய எழுத்துக்கள், நெட்டெழுத்துக்கள் எனப் பெயர் பெற்றன. ஆனால் நெட்டெழுத்துக்களுள் ஆ ஈ ஊ ஏ ஓ என்ற ஐந்திற்கு மட்டுமே, அ இ உ எ ஒ என்னும் ஐந்து இணைக்குற்றெழுந்துக்கள் முறையே உள்ளன. ஐ ஔ என்னும் இரண்டுக்கும் இணையான குற்றெழுத்துக்கள் இல்லை.

''ஐஔ இஉச் செறிய முதல் எழுத்து
இவ்விரண்டு ஓரின மாய்வரல் முறையே''

என்பது நன்னூல். ஆயினும் இரண்டு மாத்திரையளவு ஒலித்தல் ஆகிய காரணம் பற்றி ஒரு வகையில் ஐ ஔ என்னும் இரண்டும் கூட நெட்டெழுத்துக்களேயாகும் என்று இலக்கண நூலார் கொள்வர். அம்முறைப்படி அறிவிலாத என்னுடைய இழிந்த கவிதைகளையும் கூட, இறைவனுடைய புகழ் பற்றியனவாக இருக்கும் காரணம் பற்றி, அறிவுடையோர்களின் சிறந்த பாடல்களோடு சேர்த்துப் பெரியோர்கள் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளுவார்கள்.

''செறிகுறில் உடைஐந் தோடு
குறில்இலா இரண்டும் சேர்த்து
மறிவில்நெட் டுயிர்ஏழ் என்று
மாத்திரை நோக்கிக் கொள்வார் ;
அறியிய லுடைய பாவோடு
இயலிலா அடியேன் பாவும்
குறியிலான் சரிதம் நோக்கிக்
குறிகொள்பா என்றே கொள்வார்''

மூர்த்தி நாயனார் :

(2) நல்ல சிறந்த சொற்களையே கொண்டு இறைவனைத் துதிப்பதுதான் முறை. அங்ஙனம் இயலாமல் முட்டுப்பாடு நேர்ந்தால், புல்லிய இழிந்த சொற்களையேனும் கொண்டு போற்ற முற்படுதல் கடமையேயாகும். மூர்த்திநாயனார் சிறந்த நல்ல சந்தனக் குறடுகளைச் சாந்து அரைத்து இறைவனுக்குச் சாத்தி வழிபட்டு வந்தாராயினும், அவை கிடைக்கப் பெறாமல் முட்டுப்பாடு நேர்ந்த வழி தம்முடைய முழங்கையையே தேய்த்தார் அன்றோ ?

நன்சொலே கொண்டு போற்றல்
நன்மையாம் : அதுமுட் டுற்றால்
புன்சொலாய் வந்த கொண்டு
போற்றலும் கடன்மை யாகும்;
கொன்சொலார் நறிய சந்தக்
குறடுமுட் டுற்ற தாலே
முன்சொல்வார் மூர்த்தி யார்தம்
முழங்கைதேய்த் திட்டார் அன்றே

மன்ற மராட்டவன் :

(4) விராட் (உலகமே உருவமாகக் கொண்டவன்). சாம்ராட் (பெருந்தலைவன்) என்னும் பெயர்களோடு, சுராட் (தனிமுதற் பெருந்தலைவன்) என்னும் சிறப்புப் பெயரையும் கொண்ட 'மன்ற மராட்டவன்' (மன்று + அமர் + ஆட்டவன் — அம்பலத்தில் நடனம்புரிபவன்) ஆகிய சிவபெருமான், விரும்பத்தக்க சந்திரனோடு வெறுக்கத்தக்க பாம்பினையும் கூடச் சடையில் அணிந்து கொண்டிருக்கிறான். அஃது எதற்குத்தெரியுமா ? 'ஒன்றோடு இரட்டையின்' (இரு + ஆட்டையின்; அஃதாவது ஒன்றோடு இரண்டு சேர்ந்த மூன்றும் ஆண்டில்) எழுந்த, திருஞானசம்பந்தரின் சிறந்த பாடல்களோடு, என்னுடைய இழிந்த பாடல்களையும் விருப்பு வெறுப்பு இல்லாமல், உயர்வு தாழ்வு நோக்காமல், ஏற்றுக்கொண்டு அருள் புரிதலையுணர்த்துவதற்கேயாகும்.

''விராட்டொடு சாம்ராட் என்னும்
நாமத்தும் விசேட மாகச்
சுராட்டெனும் நாமம் பூண்ட
சுயம்பிர காசன், மன்ற
மராட்டவன் மதியொ டும்பாம்பு
அணிந்தமை மதிக்கின், ஒன்றோடு
இராட்டையின் எழன்முற் பாவோடு
என்னதும் ஏற்றற்கு அன்றோ?

எறும்பும் ஈயும் :

(5) சிறந்த பெரிய கவிஞர்களைப்போல ஒன்றுக்கும் பற்றாத எளியவன் ஆகிய யானும், திருஅம்பர்ப் பிரமபுரீசர் மீது புராணம் பாடத் தலைப்பட்ட தன்மையினை ஆராய்ந்தால், திருமாலைப் போல யானும் உலகம் முழுவதையும் உண்பேன் என்று ஒரு சிற்றெறும்பு எழுந்ததனையும்; மலர்களிலுள்ள சிறிய தேனைத் தேடியுண்ணும் தேனீயானது, அகத்திய முனிவரைப் போலக் கடல் முழுவதையும் யான் பருகுவேன் என்று கூறிப் புறப்படுதலையுமே போலும்.

பெரியர்போல் யானும் பெம்மான்
பேரருட் புராணம் கூறல்
தெரிதரின், மாயோன் போற்சிற்
றெறும்புமண் முழுதும் உண்பான்
புரிவொடும் எழுஞ்சற் றுய
போதில்தேன் உண்ணல் ஈத்துப்
பரிவின்ஈ முனிபோல் ஆழி
யுண்ணவும் படரும் அன்றே

உயர்திணையும் அஃறிணையும் :

(6) தனித்தனியே கருதிய வழி அஃறிணையாகக் குறிப்பிடப் பெறும் உயிரும் உடலும் தம்முள் ஒன்று சேர்ந்து அறிவு நலனும் எய்தப் பெற்றால், அஃறிணை என்னும் குறைபாடு ஒழிந்து, உயர்திணை என்னும் சிறப்புப் பெறும்.

"காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வருஉம்
ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வருஉம் கிளவி எல்லாம்
பால்பிரிந்து இசையா உயர்திணை மேன"

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே"

எனவரும் தொல்காப்பியச் சூத்திரங்கள் இதனை உணர்த்தும். இங்ஙனம் அஃறிணை எனப்படும் உயிரும் உடலும் அறிவுடன் ஒன்று கூடுதலால் உயர்திணையாகிச் சிறப்புறுதல் போன்று, இழி தகவு மிக்க என்னுடைய சொற்பொருள்களும் கூட, இறைவனின் சரிதத்தோடு முழுவதும் சேர்தலினால் சிறப்பை அடையும் என்பதற்கு ஐயம் உண்டோ?

இழிதிணை உயிரும் மெய்யும்
இலங்கு அறிவொடும் இயைந்தே
இழிபு உயர்பு உற்றாற்போல்,
இறைவன் சரிதத் தோடும்
அழிதக வுடையேன் சொல்லும்
பொருளும் முற்றுற இயைந்தே
இழிபு ஒழித்து உயர்வு பூணும்
என்பதற்கு ஐயம் என்னே?

முடிவுரை:

தம்முடைய பணிவுடைமை தோன்றப் பாடுவதற்குரிய, எளிய பொதுவான அவை யடக்கச் செய்தியினைக்கூட, தமது ஒப்புயர் வற்ற புலமைநலனும், அற்புதம் மிக்க கற்பனைத் திறனும், இலக்கண இலக்கிய நுண்ணுணர்வும், பக்திமைப் பண்பாடும் தோன்றப் பாடியுள்ள திருவாவடுதுறை ஆதீனத்துப் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின், அருமை பெருமைகள் அறிந்து வியந்து பெரிதும் போற்றி மகிழ்தற்குரியன அன்றோ? ★

சென்னை திருவல்லிக்கேணி அருட்டிரு காமகலாகாமேசுவரர் கோயிலில் நிகழ்ந்த தூய்மைப் பரிசளிப்பு 'விழாவில்' அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல் (30-1-73)

நீர்வண்ணன்

மகாவித்துவான், பத்மவிபூஷண்

திருமிகு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்

எம்பெருமான் திருநீர்மலையிலே நீர் வண்ணன் என்றும், கச்சியூரகத்தில் நீரகத்தான் என்றும் திருநாமம் பெற்றிருப்பது பிரசித்தம் நீர்க்கும் எம்பெருமானுக்கும் ஒப்புமை பல படிகளால் உண்டு.

(1) நீர் பள்ளத்தில்தான் பாயும், மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமானும் சாதி முதலியவற்றால் குறைந்தாரிடத்தே எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோம் என்று மார்பு நெறித்திருப்பாரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்கட்காகத் தூது எழுந்தருளும் போது, ஞானத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரோணாசாரியரையும், செல்வத்தால் சிறந்தோம் என்றிருக்கும துரியோதனனையும். ஒரு பொருளாக மதியாதே, இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவராகத் தம்மை நினைத்திருந்த விதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று, "முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவஞ்செய்ததிச் சிறுகுடில் என்றான்" (வில்லி பாரதம்). என்று அவர் உள் குழையுமாறு இருந்து அமுது செய்தருளினான் கண்ண பிரான்; ஆகவே, பள்ளத்தே ஓடிப் பெருங் குழியிலே தங்கும் இயல்பு நீருக்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும்.

(2) நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது; அப்படியே எம்பெருமான் இன்றி ஒரு காரியமும் ஆகாது. "லோகோ பிந்நருசி" என்கிறபடியே ஒருவன் விரும்பினதை மற்றொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தை உடையதாயினும் எல்லோரும் நீரை விரும்பியே யாகவேண்டும்; அதுபோலவே எம்பெருமானையும்.

(3) நீர்க்குக் குளிர்ச்சி இயற்கை; சூடு வந்தேறி; எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாய்ச் சீற்றம் வந்தேறியா யிருக்கும். "நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்" என்ற முமுக்ஷுப்படித் திவ்விய சூக்தி காண்க.

(4) நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேணும்; எம்பெருமான் சீறினாலும் அவன்றானே தெளிவு பெறவேணும். "தரு துயரந் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை" என்றார் குலசேகரப் பெருமாள்.

(5) நீர் நம் விருப்பப்படி தேக்கிவைக்கவும் ஓடவிடவும் உரியதாயிருக்கும். எம்பெருமான் படியும் அப்படியே. ஆண்டாள் தான் சூடிக் களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்து அநுபவிக்க நின்றான் எம்பெருமான். பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோக விடப்பெற்றான். ஆண்டாள் தேக்கி வைத்தனள். பாண்டவர்கள் ஓடவிட்டனர்.

(6) நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயிருக்கும். தனிப்படத் தானே குடிக்கத் தக்கதுமாய் இருக்கும். எம்பெருமானுக்கும் உபாயத்துவம் உபேயத்துவம் என்ற இரண்டு ஆகாரங்களுண்டே. எம்பெருமானைக் கொண்டு வேறு பலன்களைப் பெற விரும்புவாரும், எம்பெருமான் தன்னையே சுவயம் புருஷார்த்தமாகக் கொள்வாரும் உள்ளமை காண்க.

(7) சோறு முதலானவை தமக்குப் பிரதிநிதிகளைப் பொறுக்கும். அதாவது, காய் கனி கிழங்கு வேர் பால் முதலியவற்றால் தேகதாரணம் பண்ணலாம். பண்ணுவாருமுளர். நீரானது அப்படி பிரதிநிதி ஒன்றையும் சகிக்கமாட்டாது.

நீர்க்கு நீரே வேணும். அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது; குணநுசந்தாநத்தாலும் போது போக்கவரிது; "ஒருநாள் காணவாராயே" "அடியேன் தொழ வந்தருளே" என்று பிரார்த்தித்துப் பெற்றே தீர வேண்டும். உணவுப் பொருள்களில் அரிசிக்குப் பதிலாகக் கோதுமையோ பாலோ மற்றும் எந்தப் பொருளோ அவரவர்களின் சுவைக்கு ஏற்றபடி வைத்துக் கொள்ளப்படுவதுண்டு. ஆனாலும் நீருக்குப் பதிலாக வேறெதுவும் வைத்துக் கொள்ளப்படுவதில்லை; நீர் ஒருவராலும் விடமுடியாதது. அதுபோல கர்ம ஞாந பக்தி பிரபத்தி முதலியவற்றில் எதை விட்டு எதைப் பற்றினாலும் எம்பெருமான் ஒருபடியாலும் விடத்தகாதவன் என்றதாயிற்று. இது மிக நுட்பமான தத்துவப் பொருள்.

(8) சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது. அப்படி நீர் வேறொன்றை வேண்டி நிற்பதன்று. எம்பெருமான் படியும் அப்படியே. உபாயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேணும்; எம்பெருமான் இதர நிரபேஷக். (அதாவது) எதையும் எதிர்பாராதவன். "உன்னாலல்லால் யாவராலு மொன்றுங் குறைவேண்டேன்" என்றாரே நம்மாழ்வார்.

(9) கொள்ளும் பாத்திரங்களின் தாரதம்மியமேயன்றி நீர்தான் குறையல்லாது; எங்கும் நிரம்பவல்லது. எம்பெருமானும் "வேண்டிற்றெல்லாந் தருங் கோதில் வள்ளல்" என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி எங்கும் நிரப்பவல்லவன். கொள்வார் குறையே யத்தனை: ஐசுவரியமே போதுமென்பாரும், கைவல்யமே போதும் என்பாருமாகக் குறையக் கொள்ளுவாருடைய குற்றமே. அற்பமான ஐசுவரியம், உத்தமமான முத்தியளவும் எதையும் அளித்து நிரப்ப வல்லவன் இறைவன்.

(10) நீர் ஐவகைப்பட்டிருத்தல் போல எம்பெருமானும் ஐவகைப்பட்டிருப்பவன்; எங்ஙனேயென்னில், (1) பூமிக்குள்ளே பதிந்து கிடக்கின்ற நீர். (2) அண்டத்துக்குப் புறத்தேயுள்ள நீர். (3) பாற்கடல் நீர் (4) பெருக்காற்று நீர். (5) தடாகங்களில் தேங்கும் நீர் என நீர் ஐவகைப்படும். விடாய்த்தவனுக்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதபடி நிற்கிறவிடத்திலேயே உண்டாயிருக்கச் செய்தேயும் கொட்டும் குந்தாலியுங் கொண்டு கல்லினால் அல்லது குடிக்கக் கிடையாத பூமிக்குள் பதிந்து நீர்போலேயாய்த்து அந்தர்யாமித்வம்; கண்டு பற்ற வேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு இருதயத்திலே இருக்கச்செய்தேயும் கண்ணுக்குப் புலப்படாமல், அட்டாங்க யோகமாகிற முயற்சியாலே, காணவேண்டும்படியான தன்றோ இது. (2) விடாய்த்தவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரண சலம் போலேயாயிற்று. கண்டு பற்ற வேணும் என்றிருக்கிறவனுக்கு லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்துவம், (3) அப்படி அதிதூரத்திலும் அன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் விடாய்த்தவனுக்குக் கிட்ட அரிதான பாற்கடல்போலேயாயிற்று, சென்று காண அரிதாம்படி இருக்கிற வியூகம். (4) அருகேயிருந்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கு மட்டும் உபயோக யோக்யமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று, இராமகிருஷ்ணாதி அவதாரங்களான விபவம். பூமியிலே அவதரித்துச் சஞ்சரித்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கே அடையத் தக்கதாய்ப் பிற்காலத்திலுள்ளவர்களுக்குக் கிட்டாதபடியாய் இருப்பதன்றோ இது. (5) விடாய்த்தவனுக்கு விடாய் தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள்போலேயாயிற்று கோயில்களிலும் இல்லங்களிலும் எங்கும் ஒக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம். ஆக இந்த ஐந்து வகைகளினாலும் ஐவகை நீரை ஒத்திருப்பான் எம்பெருமான்.

(11) நீரானது இயற்கையிலே பரிசுத்தமாயினும் ஆதரவசத்தாலே கொள்ளத்தக்கதும் தள்ளத்தக்கதுமாகிறது. அப்படியே பிற தெய்வங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் உபேட்சிக்கத்தக்கவனாகவும். கூராராழி வெண் சங்கேந்தின எம்பெருமான் உத்தேசியனாகவும் உள்ளமை காண்க.

(12) தோண்டத் தோண்டச் சுரக்கும் நீர்; எம்பெருமானும் கொள்ள மாளா இன்ப வெள்ளமாய்ப் பேசப்பேச வளர்ந்திடுவன். "செலக் காண்கிற்பார் காணுமளவும் செல்லுங் கீர்த்தியாய்" என்றாரே நம்மாழ்வார். "பேசுவார்

எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாசமலர்த் தண்டுழாய் மார்வன்—வடிவு'' என்றார் பேயாழ் வாரும்.

(13) நீர் தனக்கொரு பிரயோசனமும் இன்றிப் பரார்த்தமாகவே யிருக்கும்; அது போல எம்பெருமானுடைய இயல்பு ரூபம் குணம் விபூதிகள் ஆகியனவெல்லாம் நம்போன்ற அடியார்களுக்காகவே யிருக்கும்.

(14) நீர் தானே பெய்யவேணுமேயன்றி ஒருவரால் வடிம்பிட்டுப் பெய்விக்கமுடியாதது; எம்பெருமான் படியும் இப்படியே; அவன் தனது இயற்கை இன்னருளால் இரங்கி ளுல்தான் உண்டு.

(15) நீர் கடலிலிருந்து காளமேகம் வழி யாக வந்தாலன்றி உபஜீவிக்க உரியதாகாது; எம்பெருமானும் சாத்திரங்களில் இருந்து ஆசாரியர் முகமாக வந்தே உபஜீவனுகிறன். "மேகம் பருகின சமுத்திராம்பு போல நூற்கடற் சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே'' என்ற ஆசார்ய இருதய சூக்தி காண்க.

(16) சிறியார் பெரியார் என்கிற விபாக மின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி இருக்கும் நீர்; எம்பெரு மானும் 'நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே'' என்றும், "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்'' என்றும் சொல்லுகிறபடியே, பெரியார் சிறியார் என்னும் வாசியற ஒக்க வழிபடலாம் படியிருப்பன்,

(17) நீர் சிறிது துவாரம் கிடைத்தாலும் உட்புகுந்துவிடும். எம்பெருமானுக்கும் சிறிது காரணமே போதும்; "திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்'' என்றும், "மாதவன் என்றதே கொண்டு என்னுள் புகுந்திருந்தான்'' என்றும் அருளிச் செய்தார் நம்மாழ்வார்.

(18) கங்கை, காவிரி, திரிவேணி முதலான தீர்த்த விசேடங்களிலே நீருக்குப் பெருமை அதிகம்; எம்பெருமானுக்கும் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப் பொலியும்,

(19) தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலே ஏறட்டுவது முதுகில் கொட்டுவது உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவதுபோல், ''வாக்கினல் கருமந்தன்னல் மனத்தினல் சிரத்தைதன்னல், வேட்கை மீதூர வாங்கி விழுங்குவர்கள்'' எம்பெருமானையும் என்கிறார் திருமங்கையாழ்வார்.

(20) நீர் வேண்டியவன், ஒரு துளிநாக்கு நனைக்கக் கிடைத்தால் போதுமென்பன்; "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே'' என்றும், ''ஒருநாள் காணவாராயே'' என்றும் "நம்மையொருகால் காட்டி நடந்தால் நாங்களுய்யோமே'' என்றும் ஆழ்வார்கள் கூறுவர் எம்பெருமானை நோக்கி.

(21) நீரில் சிறிய கல்லும் அமிழும்; பெரிய தெப்பமரமும் மிதக்கும். ''எம்பெருமான் பக்கலிலும் பிரமாமவாய் இழந்துபோதல், இடைச்சியாய்ப்பெற்று விடுதல் செய்யக் காணு நின்றோமிறே'' என்கிறபடியே பெரியார் இழக்கவும் சிறியார் பெறவுமாகும். "நேரே கடிக்கமலத்துள்ளிருந்துங் காண்கிலான், கண்ணனடிக் கமலந்தனை அயன்'', என்று பிரமன் இழந்ததைப் பொய்கையார் கூறினர். ''மருவுநின் திருநெற்றியில் சுட்டியசைதர மணிவாயிடை முத்தந் தருதலும், உன்றன் தாதையைப் போலும் வடிவு கொண்டு உள்ளம்' உள் குளிரவிரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கும் அவ் வுரையும் திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே'' என்று இடைச்சி பெற்றதைக் குலசேகராழ்வார் கூறினர். பகவத் குணங்களில் சிறுமாமனிசர் அமிழ்தலும், ஊன்மல்கிமோடு பருப்பார் வாய்க் கரையில் நிற்றலுங் கொள்க.

(22) "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாய தூஉம் மழை'' (திருக்குறள்) என்கிறபடியே உணவு பெருக வினைதற்குக் காரணமாகையாலே சாதனமாயும், விடாய்தீரப் பருகுகையாலே தானே போக்கிய மாயும் இருக்கும் நீர். உபாயமும் தானாய் உபாயமும் தானுயிருப்பன் எம்பெருமான் என்பது நூற்கொள்கை. இங்ஙனே காண்க.

★

சம்பந்தரும் பௌத்தமும்

டாக்டர் திரு. சோ. ந. கந்தசாமி M.A., M. Litt., Ph.D.
(தமிழ் விரிவுரையாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.)

(முற்றொடர்ச்சி)

1. சௌத்திராந்திகம் :

இஃது ஈனயான பௌத்தத்தின் இன்றியமையாப் பிரிவாகும். பெரும் பாலும் சூத்திர பிடகத்தினைப் பின்பற்றுதலின் சௌத்திராந்திகர் எனப்பட்டனர். இந்நெறியை உருவாக்கியவர் குமாரலப்தர். இவர் நாகார்ச்சுனரின் சமகாலத்தவர். தொன்மைவாய்ந்த தேரவாதம் கந்தபிடகத்தின் தேரகாதா தேரீகாதா, தம்மபதம் சுத்தாந்தங்கள் சுத்தநிபாதம் என்ற ஐந்திலும் தான் உள்ளன. மக்கள் அன்றாட வாழ்வில் அனுசரிக்க வேண்டிய அறவுரைகள் நிரம்பியிருப்பதும் இபிப்டகத்தில் தான். கொல்லாமை, கள்ளாமை, கற்பழியாமை, பொய்யாமை, புறங்கூருமை, இன்னுசொல்லாமை வெகுளாமை, பயனிலசொல்லாமை, பிறழ உணராமை, இன்னபிற சீலங்களும் நீதிகளும் சுத்தபிடகத்தில் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. சம்பந்தர், சாக்கியர்கள் அறிவுரை பகர்பவர் என்பதை 14 இடங்களில் சுட்டியுள்ளார். அவற்றுள் சில. 1. அறங்காட்டும்....சாக்கியரும் 117 204. 2. அறிவுரைசொல்லும் .. தேரரும் 79. 3. புத்தரோடமணர்கள் அறிவுரை .25 193 217 345. என்னதான் அறக்கருத்துக்கள் இருந்தாலும் பரம்பொருளைச் சுட்டாத பௌத்தத்தினை எவ்வளவு காலம் தமிழர்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்கள் எனவேதான்பௌத்தரின் போதனைகளைச் சலநெறியன அறிவுரைகள் 19, குன்றிய அறவுரை 113 217 எனக் குறித்தார். போதியார் நன்னெறியைப்போதியார் போலும்!

புலால் உணவு :

கொல்லாமையினை வற்புறுத்தும் பௌத்தம் புலால் உணவினைக் கடியவில்லை. பிடகங்களில் இன்னின்ன புலால் உண்ணலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. புத்தரே பன்றி இறைச்சியை உண்டு இறந்ததுபோனுர் என்றொரு செய்தி உண்டு. சம்பந்தர் காலத்துப் பௌத்தர்களில் சிலர் புலால் மறுத்தவர், சிலர் புலால் உண்டவர் எனக்காண்றேும் (16ா). மீன் உணவுகளும் கவர்ந்து உண்பர் (250 305 340). இப்பழக்கம் சௌந்திராந்திகப் பௌத்தர்க்கு உரியது என்பதைச் சிவஞானசித்தியார் பரபக்கத்தில் காணலாம். (சௌத். மதம், செய்யுள் 29). நெற்தற்கவியிலும், மணிமேகலையிலும் இத்தகைய குறிப்புக்கள் உண்டு.

கணிகவாதம், அநான்மவாதம் :

சௌத்திராந்திகர்கள் காட்சிப்பொருள் உண்மைவாதிகள் பொருள்கள் யாவும் கணத்தன்மையின எனின், தொடர்ந்தும் விரைந்தும் சுழன்றுகொண்டிருத்தலின் கணத்தன்மை என்ற எண்ணம் எழுவதில்லை. எல்லாப் பொருள்களும் கணப்பொழுதுடைய தர்மங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. கணத்தன்மைத்தான் உண்மை. "யத், சத், தத், க்ஷணிகம்" என்பர். தாமரை மலரின் எட்டிதழ்களை ஏககாலத்தில் அம்பு துளைத்துச் செல்லும் கால அளவுதான் கணம் என மாத்துவரும் அருணந்திசிவருைம் குறிப்பிடுவர். ஞானசம்பந்தர் க்ஷணிகவாதத்தினைச் சுட்டியுள்ளார் (21). போதிமங்கையில்சாரிபுத்தருடன் நிகழ்த்திய வாதத்திலும்பதிகம் எழுதும் அன்பர் க்ஷணிகவாதத்தினைத்தகர்த்தெறியக் காணலாம் வைபாஷிகர்களுக்கும்இக்கொள்கைஉடன் பாடே. பௌத்தர்கள் அநான்மவாதிகள். எண்ணங்கள் உண்டு, எண்ணுவோன் இல்லை. செயல் உண்டு, செய்வோன் இல்லை, என்பதே அவர்கள் கொள்கை. ''முயன்றனபடும்''(335) என்புழி, இக்கருத்தினைக் காணலாம்,

ஆன்மாவை உடன்படாதவர் பரமான்மாவை உடன்படாததில் வியப்பில்லை.

2. வைபாடிகம் :

அபிதம்ம பிடகத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் வைபாஷிகர்கள் ஆவர். இப் பிடகத்தின் பாஷிகமே இவர்கள் ஆதாரமாகக் கடைப்பிடிப்பவர்கள் ஆதலின் இப் பெயர் ஏற்பட்டது. துறவறத்தை வலியுறுத்தும் விநயபிடகமும் இவர்க்குரியது என்பர் சார்லஸ் இலியட் (Hinduism and Buddhism IV P. 82) அபிதம்ம பிடகம்தான் தத்துவ நுணுக்கங்கள் நிரம்பியது ஆகும். எனவேதான், இதனைப் பின்பற்றும் வைபாஷிகர்களைப் "புத்தர்கள் தத்துவர் மொய்த்து" (136) எனக் காழியர் கோன் கழறினாரதல் வேண்டும்.

மகாயானபௌத்தம் :

மகாயான பௌத்தத்தில் மக்களுக்குப் பணிபுரிதலேகடனாகக்கொண்டபோதிசத்துவக் கொள்கை முக்கிய இடம் பெறும். போதியர் என்ற பகுதியில் முன்பே சில மொழிந்தோம். ஈனயான பௌத்தர்கள் இறையுண்மையினை ஏற்றுக்கொள்ளாதவர்கள். ஆனால் மக்கள் தங்கள் மனக் கொந்தளிப்பினையும் குமுறலையும் வெளியே முறையிட்டுத் துன்பச்சுமையினை இறக்கிவைக்க ஒரு பரம்பொருள் தேவைப் பட்ட பொழுது எழுந்த மகாயான பௌத்தம் புத்தனைப் பகவானாகவும், போதிசத்துவர்களைத் தெய்வங்களாகவும் உருவாக்கிவிட்டது. பொது மக்களின் தேவை ஒருவாறு திருப்தி செய்யப் பட்டாலும், முத்திபெற்ற புத்தனையும் போதி சத்துவர்களையும்விட மேலான பரம்பொருள் உண்டெனும் விழுமிய கருத்தினைச் சம்பந்தர் இரண்டிடங்களில் விளக்குகின்றார்.

1. "மூடிய சீவரத்தர்
முதுமட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லாம்
நயந்தேத்திய நன்னலத்தான" (317.)

2. "மூடிய சீவரத்தர்
முதிர்பிண்டியர் என்றிவர்கள்
தேடிய தேவர்தம்மால்
இறைஞ்சப்படும் தேவர்பிரான்" (318)

3. மாத்தியமிகம் :

இதனை நிறுவியவர் நாகார்ச்சுனர். உலகம் ஒரு மாயைத் தோற்றம். அது உள் பொருளோ எனின் இல்லை; இல்பொருளோ எனில் இல்லை. உண்மை இன்மை என்ற இரண்டிற்கும் இடையேஉள்ள ஒருவித ஓரக்கொள்கையினை உணர்த்துவது. "உண்டு இல்லை என்றே நின்றே" (97) "பொருளுள மருவியபொருள் களும் இல எனும் அவரொடு' (21) எனவரும் பகுதிகள் மாத்தியமிகத்தினைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

4. யோகாசாரம் :

சர்வாஸ்தி வாதப் பாலி பௌத்தத்தினைப் பின்பற்றி வந்த ஆசங்கர், வசுபந்து என்ற இரு சகோதரர்களும் யோகாசாரம் என்ற புதுப் பிரிவினை உருவாக்கியவர்கள். யோகநெறியில் நின்று புத்தனை உள்ளத்துள் உருகி உய்திபெற லாம் என்பதே இவர்கள் எண்ணமாகும். இவர் கள் கருத்துப்பொருள் உண்மைவாதிகள். உள்ளத்தின் விரிவே உலகமாகத் தோன்று கிறது. உள்ளத்தில் ஊறும் உணர்ச்சிக் கோவைகள் உலகில் உள்ள பல்வேறு பொருள் களாகக் காட்சி அளிக்கின்றன. 'சர்வம் புத்தி மயம் ஜகத்' என்பதே இவர்கள் கொள்கை. புறவுலகினைப் பொய்யெனத்தள்ளும் லோகாசார ராகிய விஞ்ஞானவாதிகள் மனோவிஞ்ஞான மாகிய ஸ்கந்தவிஞ்ஞானத்தையும் அது அடங் கியிருக்கும் வியாபகப்பொருளாகிய ஆலயவிஞ் ஞானத்தையும்உள்பொருளெனக்கொண்டனர். இவ்விரண்டும் முறையே ஜீவாத்மா, பரமாத்மா வுடன் ஒப்பிடத்தக்க வகையில் அமைந்த தாலும், உலகம் சூனியமயம் என்ற மாத்திய மிகத்தைஎதிரொலித்ததாலும்தான், சங்கரரைப் பிரச்சன்ன பௌத்தர் எனப் பிற்காலத்தார் பேசினர். ஞானசம்பந்தர் காலத்தில் யோகா சார பௌத்தர்கள் தழைத்து விளங்கியிருத்தல் வேண்டும். இவர்கள் கருத்துக்களை நிலை நிறுத்தப் புதுப்பிடகங்களை அமைத்துக் கொண் டனர். அவற்றைச் சூத்திரம் சாத்திரம் தருக் கம் எனப் பிரித்துரைப்பர். சம்பந்தர் "சடங் கொண்ட சாத்திரத்தார் சாக்கியர்" 118 எனச் சுட்டும் பௌத்தர்க்கும் "பிடகர் நுண்மையும்" 'பிடக்கேயுரை செய்வார்" எனச்சுட்டும்

திருச்செந்தூர் முருகன் கோயிலின் கலையரங்குக் கல்வெட்டினைச் சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன், பி. ஏ., பி.எல். ஐ.ஏ.எஸ்., அவர்கள் திறந்துவைத்தல்.

திருச்செந்தூர்க் கோயிலின் கலையரங்கு நன்கொடையாளர் சிங்கப்பூர் திரு. பொ. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் (15-2-73)



திருச்செந்தூர் முருகன் கோயிலில், ஆலயத்தூய்மைக்குரிய பரிசுச் சுழல் கோப்பையைத் தருமகர்த்தர்களிடம், ஆணையர் அவர்களும், துணை ஆணையர் அவர்களும் கொடுத்தல். (15-2-73)

திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி கோயிலில் கலையரங்குத் திறப்பு விழாவில், தலைமை வகித்த நெல்லை மாவட்ட நீதிபதி உயர்திரு டி. ஸி. ஆர். கோதண்டராமராஜு, B.A., B.L. அவர்களும், அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B.A., B.L., I.A.S. அவர்களும் மற்ற பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல். (15-2-73)



திருச்செந்தூர் முருகன் கோயிலில், ஆலயத்தூய்மைக்குரிய நிரந்தரப் பரிசுக் கோப்பையைத் தருமகர்த்தர்களும், நிர்வாக அதிகாரியும், ஆணையர் அவர்களிடமிருந்து பெறுதல். (15-2-73)

பௌத்தர்க்கும் கொள்கையளவில் ஒரு வேறுபாடு இருத்தல் வேண்டும் பௌத்த தத்துவத்தில் யோகாசாரர்களுக்குரிய நூல்களைச் சாத்திரம் எனக் குறிக்கும் மரபு உண்டு.

யோகாசாரர்களின் சாத்திரங்கள்:

1. போதிசத்துவ மைத்திரேயரும் ஆசங்கரும் எழுதிய யோகாசார பூமிசாத்திரம்.
2. ஆசங்கரின் சூத்திராலயங்கான சாத்திரம்
3. ஆரியாவாசா பிரகரண சாத்திரம்.
4. ஆசங்கரும் போதிசங்கரும் எழுதிய அபிதர்மசங்கதி சாத்திரம்.
5. ஆசங்கரும் வசுபந்தும் எழுதிய மகாயான சம்பரிகிரக சாத்திரம்.
6. மைத்திரேயரின் யோக விபாக சாத்திரம்.
7. வசுபந்துவின் தசபூமிக சாத்திரம்.
8. மைத்திரேயரும் ஆசங்கரும் எழுதிய மத்யாந்த விபாகம்.
9. திக்நாகரின் ஆலம்பன பிரத்யாய சாத்திரம்
10. திக்நாகரின் பிரமாண சமுச்சயம்.
11. வசுபந்துவின் விந்தியாமாத்திர சித்தி—20 பாடல்கள்.
12. வசுபந்துவின் விந்தியாமாத்திர சித்தி—20 பாடல்கள்.

5. சௌந்திராந்திக யோகாசாரம்:

இப்பன்னிரண்டும் யோகாசாரர்களின் அபிதம்ம பிடகம் ஆகும் இவற்றுடன் அபிதர்மசூத்திரம், ததாகத ஆவிர்ப்பாவ குணலங்கார சூத்திரம், அவதம்சக சூத்திரம், இலங்காவதார சூத்திரம், கணவியூகம், சந்தி நிர்மோகச சூத்திரம், என்ற ஆறும் இவர்களின் சூத்திர பிடகமாகும்.

தேரவாதத்தின் ஒரு பிரிவாகிய சௌத்திராந்திகத்தையும் மகாயானத்தின் பிரிவான யோகாசாரத்தையும் இணைத்துச் சௌந்திராந்திக யோகாசாரம் என்ற புதுக்கொள்கை உருவாயிற்று வசுபந்து திக்நாகர் தருமபாலர், தருமகீர்த்தி முதலியோர் இப்பிரிவினை வளர்த்தவர்கள். இந்த ஒட்டுநெறியினர் தருக்கத் துறைக்கு ஆற்றிய அரும்பணி போற்றற்பாலது. சம்பந்தர்,

“தடுக்கமரும் சமணரொடு
தர்க்கசாத்திரத் தவர்சொல்
இடுக்கண்வரும் மொழிகேளாது
ஈசனையே ஏத்துமின்கள்” 62

எனக்கூறும் பகுதியில் பௌத்தர்களைத் தர்க்க சாத்திரத்தவர் என அடையாளம் காட்டுகிறார். தேரவாதத்தில் (ஈனயானத்தில்) தருக்க நூல்கள் இல்லை புத்தரே தத்துவ விசாரணைகளையும் தருக்க முழக்கங்களையும் விரும்பவில்லை. ஆனால், மகாயான பௌத்தர்கள் தம் கொள்கையினை நிலைநாட்டத் தருக்கத்தினைக் கருவியாக வளர்த்தனர் நாகார்ச்சுனரின் உபாய கௌசல்ய சூத்திரம் முதல் பௌத்த தருக்க நூலாகும். எனினும் அவர் பெரும்பாலும் நையாயிக தருக்கத்தினை ஒட்டியே தம் நூலினை யாத்துள்ளார். சௌத்திராந்திக யோகாசாரர்கள்தான் பௌத்த தருக்கத்தின் முதலாசிரியர் என ஷேர்பட்ஸ்கி, வித்யாபூஷண், கீத், துசி என்ற பேரறிஞர்கள் கருதுகின்றனர். வசுபந்துவின் வாதவிதி, வாதவிதானு, திக்நாகரின் பிரமாண சமுச்சயம், நியாயமுகம், சங்கர சுவாமியின் நியாயப்பிரவேசம், தருமகீர்த்தியின் நியாயபிந்து என்பன பௌத்த தருக்கத்தில் புதுமையும் புரட்சியும் கொண்டு பொலிவனவாகும். இவற்றுள்பல சீனம், ஜப்பான், திபெத்திய மொழிகளில் அக்காலத்தே மொழி பெயர்கப்பெற்றுள்ளன. சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த பௌத்த தருக்க மேதை தருமகீர்த்தி என்னும் தமிழர் ஆவர். இவர் திக்நாகரின் மாணவர். அளவைக் கோவையில் பக்கம் ஏது திட்டாந்தம் உபநயம் நிகமனம் என ஐந்துறுப்புக்கள் உண்டெனக் கொண்டனர். நையாயிகர் ஆயின் முதல் மூன்றுமே சாலும் எனச் சௌத்திராந்திக யோகாசாரர்கள் கடைப்பிடித்தனர் தருமகீர்த்தி ஒருபடி மேலே சென்று திட்டாந்தம் ஏதுவில் அடங்குதலின் பக்கதன்ம வசனமாகிய எடுத்தமொழியும் அதனை உறுதிப்படுத்தும் ஏதுவுமேபோதுமெனக் கருதினர். இவ்விரண்டுறுப்புக்கள் அடங்கிய அளவைக்கோவையால் எப்பொருளையும் ஆராய்ந்து உண்மை சாதிக்கலாம் என்பதே அவர் கண்ட புதுமையாகும். இதனைச் சம்பந்தர்,

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்கா வேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையேவந்து சார்மின்களே" (312)

என்வரும் பாசுரத்தில் குறித்திருத்தல் காண்க. மெய்யுணர்வினால் காணுதற்குரிய பரம்பொருளைத் தருக்கவாதத்தால் தேடித்திரிதல் பிழைநெறியே. சாதாரண யோகாசாரர்களுக்கும், சௌத்திராந்தக யோகாசாரர்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. முன்னையோர் காட்சி, கருதல், ஆகமம் என்ற மூன்றளவைகள் கொண்டவர்கள். பின்னையோர் காட்சி கருதல் என்ற இரண்டே கொண்டவர்கள். திக்நாகர், மணிமேகலைச்சாத்தனார், தம்மகீர்த்தி மூவரும் இவ்விரண்டு அளவைகளே கூறியுள்ளனர். இவர்கள் ஆகமப்பிரமாணத்தை அடியோடு விட்டவர்கள் என்பதை,

"பொங்கும் நூல்வழியன்றியே
புலவோர்களைப் பழிக்கும் போலர்
அங்கதர்க் கெளியேனலேன்
திருவாலவாயரன் நிற்கவே" (297)

எனச் சம்பந்தர் சுட்டுதல் காண்க.

பௌத்தத் தருக்கவாதிகளின் சொல்லாற்றலும் வாதத்திறனும் பல பதிகங்களில் புகலியோர்கோன் பொறித்துள்ளார்.

"விருதுபகரும் வெஞ்சொற்சமணர் வஞ்சகச் சாக்கியர்.
பொருது பகரும் மொழியைக் கொள்ளார்."
"போதியார் பிண்டியார் என்றவப் பொய்யர்கள்
வாதினால் உரையவை மெய்யல."
"சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டு வெருளேன்மின்."

பௌத்தரைப்பற்றிய செய்திகளுடன் சமணரைப்பற்றிய குறிப்புக்களும் கலந்தே உள்ளன. கேட்பார்ப் பணிக்கும் தகையவாய்ப் பேசும் சொல்லாற்றல் படைத்தவர்கள் (171 223) வித்தக மொழியினர் (125), விகடப் பேச்சினர் (344), ஆச்சியப் பேய்கள் நயமுகவுரையினர் (348), சொல்வளம்மிக்கவர் (362), இத்தகையோரிடம் பொய்யையும் மெய்யாகச் சாதிக்கும் சொல்லாற்றல் இருத்தல் இயல்பே. எனவே அவர் மொழியினைக் கேட்டுத் தளராதீர் எனச் சம்பந்தர் வேண்டுகிறார்:

"அழிவல் லமண ரொடு தேரர்
மொழிவல் லனசொல்லிய போதும்
இழிவில் லதோர் செம்மையினானூர்
பழியில் லவர்சேர் பனையூரே"
"போதியெனப் பெயராயினாரும் பொறியில் சமண்
சாதியுரைப்பன கொண்டயர்ந்து தளர்வெய்தன்மின்"

எனவே, பௌத்த தருக்கத்தினை வளர்த்த சௌத்திராந்திக யோகாசாரர்கள் சம்பந்தர் காலத்தில் தழைத்திருந்தனர் என்பது போதரும்

6. தாந்திரிக பௌத்தம்:

கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் இம்மகாயானப் பிரிவு தோன்றியது. தாந்திரிகம், மாந்திரிகம் அற்புதங்கள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டது. கண்டார் மயங்கும் சால வித்தைகளைக் காட்டித் தம்சமயம் ஈர்க்கப்பௌத்தர்கள் பெரிதும் தலைப்பட்டனர். பௌத்தத் தேவதைகள் பெண்தெய்வங்களுடன் இணைந்து வணங்கும் புதுமரபு தோன்றியது. இவர்களைச் சம்பந்தர்:

"செந்துவர் ஆடையினர்............சொன்ன
இந்திர ஞாலம் ஒழிந்தின்புற வேண்டுதிரேல்" (1[illegible]5)
வெந்துவர் மேனியினர் .... சொல்லும்
அந்தர ஞானம் எல்லாம் அவையோர்
பொருள் என்னேல்" (104)
உடைபடு துகிலரும், அழிவதோர்
விச்சையர்" (343)

எனச் சுட்டியிருத்தல் காணலாம். சமணரும் இத்தகைய விச்சைவல்லரே. அபரஞானத்தைக் கண்டு அதிசயமடைந்த மக்களை நல்லாற்றிற் படுத்த ஞானசம்பந்தருங்கூடச் சில அற்புதங்களை நிகழ்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆயினும் பதிஞானமே சிவகதி அடைய வழியாகும்.

இதுகாறும் எழுதியவாற்றால் சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த அறுவகைத் தேரர்கள் யாவர் என்பது புலனாகும், இவர் காலத்தில் தென்னாட்டிற்கு வந்த யுவான்சுவான் என்னும் சீன நாட்டவர், தமிழகத்தில் பௌத்த சமயம் அழிநிலை அடைந்ததைத் தன் பயணக் குறிப்பில் பொறித்துள்ளார்.

(தொடரும்)

மயிலையின் மாட்சி

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.,
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

"மட்டிட்ட புன்னை
அங்கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான்
கபாலீச்சரம் அமர்ந்தான்;
ஒட்டிட்ட பண்பின்
உருத்திரப் பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே
போதியோ பூம்பாவாய்"

"கான்அமர் சோலைக்
கபாலீச்சரம் அமர்ந்தான்
தேன்அமர் பூம்பாவைப்
பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம்பந்தன் நலம்
புகழ்ந்த பத்தும்வல்லார்
வான்சம பந்தத்
தவரோடும் வாழ்வாரே"

— சம்பந்தர்

தொண்டை நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்ருக, நம் சென்னை மாநகரில் சிறப்புற்றுத் திகழ்வது திருமயிலாப்பூர். அம்பிகை சிவபெருமானை மயில்வடிவங் கொண்டு புன்னை மரத்தின் கீழ்க் கடற்கரைச் சோலையில் இருந்து வழிபட்டாள் என்பது வரலாறு. அதனுல் இதற்கு மயிலை என்றும் மயிலாப்பூர் என்றும் பெயர் ஏற்பட்டது. இதனை "மட்டிட்ட புன்னையங் கானல் மட மயிலை" என்று, சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கியிருந்த திருஞானசம்பந்தர் மிகவும் சிறப்பாகப் புகழ்ந்து போற்றியுள்ளார். புகழ்மிக்க பண்டைக்காலக் கிரேக்க அறிஞராகிய தாலமி (Ptolemy) (கி. பி. 140) என்பவர், இதனை மயிலார்ஃபா (Mylarpha) எனக் குறித்துள்ளார்.

உலகமே உவந்து போற்றும் ஒப்புயர்வற்ற பெருங் கவிஞராகிய திருவள்ளுவர், முதலாழ் வார்களுள் ஒருவராகிய பேயாழ்வார், அறுபத்து மூன்று சைவநாயன் மார்களுள் ஒருவரான வாயிலார் நாயனுர் முதலிய பெருஞ் சான்றோர்கள் இத் தலத்தில் அவதரித் துள்ளனர். இங்கு சைன சமயத்தைச் சேர்ந்த நேமிநாதர் என்னும் தீர்த்தங்கரரின் கோயிலும் இருந்ததாகத் தெரிகின்றது. "நன்னூல்" என்னும் சிறந்த தமிழ் இலக்கண நூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர் என்பவர், இங்குத் தோன்றியவர் எனக் கூறப்படுகின்ருர்.

சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது கி. பி. 7ஆம் நூற்ருண்டிலேயே இத்தலம் மிகவும் சிறப்புற்று மாடமாளிகைகள் நிறைந்ததாகவும், மலிவிழா வீதிகளைக் கொண்டதாகவும் விளங்கியிருந்தது "துறைக் கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித் தொன்மயிலை" எனச் சுந்தரமூர்த்தி சுவாமி களும், "பல்பெருங்குடி நீடு பரம்பரைச் செல்வர் மல்கிய திருமயிலாபுரி" என்று சேக்கிழார் பெருந்தகையும், இத் தலத்தைப் புகழ்ந்து பாராட்டியுள்ளனர்.

சுமார் 1000 ஆண்டுகளுக்கும் முன்பே, இது "நானுதேசிகள்" கூடும் ஒரு பெருந்துறை முகம் (Intetnational Port) ஆக விளங்கி யிருந்தது. வரலாற்றுப் புகழ்மிக்க தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் (கி. பி. 825 - 850) என்னும் பல்லவ மன்னன் மீது பாடப்பெற்ற நந்திக்கலம் பகம் என்னும் நூலில், "மல்லை வேந்தன், மயிலை காவலன், பல்லவர் தோன்றல், பைந்தார் நந்தி" எனவரும் பகுதியில், இவ்வூர் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆழ்வார்களால் பாடப் பெற்ற திருவல்லிக்கேணி, மயிலையின் ஒரு பகுதி யாகவே இருந்ததென்று தெரிகின்றது. இவ்வுண்மை "மாடமாமயிலைத் திருவல்லிக்கேணி" எனத் திருமங்கையாழ்வார் குறித்திருப்பதனுல் புலனுகின்றது.

திருமயிலாப்பூர், திருவிழாக்களுக்குப் பண்டும் இன்றும் புகழ்வாய்ந்தது. திருஞான சம்பந்தர் "மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலை" என்று இதனைச் சிறப்பிக்கின்ருர். மேலும் அவர் தம்முடைய திருப்பதிகத்தில், ஒவ்வொரு மாதமும் இங்கு நிகழ்ந்த விழாக்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கின்ருர்.

இவ்வாறு திங்கள்தோறும் நிகழும் திருவிழாக்களால் சிறப்புற்றுள்ள திருமயிலைக்கு மேலும் மிக்க பெருஞ் சிறப்பை விளைவிப்பதாக அறுபத்து மூவர் திருவிழா அமைந்துள்ளது. 'காணக்கண் கோடி வேண்டும்' எனப்பெரியவர் ஒருவர் பாடியிருப்பது போலவும், 'நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்று அருணகிரிநாதர் பாடுவதற்கேற்பவும், திருமயிலை அறுபத்துமூவர் விழா மிகப் பெருஞ் சிறப்புற நிகழ்ந்து வருகின்றது. இவ்விழாவைத் தரிசித்து, அன்பர்கள் அனைவரும் கற்பகாம் பாள் உடனுறை கபாலீச்சுரப் பெருமானின் திருவருளைப் பெற்று மகிழ்ந்து இன்புறுவார் களாக. ★

சித்திரைப் பௌர்ணமியில்

சிலப்பதிகாரக் கலைக்கூடம்



[பூம்புகார்த் திருநகரில் அமைந்து வரும் சிலப்பதிகாரக் கலைக்கூடம், வரும் சித்திரைப் பௌர்ணமி அன்று திறக்கப்படும் என, இன்று (14-3-73) மாமல்லபுரத்தில், சுற்றுலாக்குடில்கள் திறப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

மாமல்லபுரம் கடற்கரையோரத்தில் சுற்றுலாப்பயணிகளுக்கான 24 குடில்களை, இன்று காலை நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், குத்து விளக்கு ஏற்றி வைத்துத் திறந்து வைத்தார். அனைத்திந்தியச் சுற்றுலா வாரியத்தினர் அமைத்துள்ள இக் குடில்களின் திறப்பு விழாவில், அவ்வாரியத் தலைவர் திரு எம். எஸ். சுந்தரா வரவேற்புரை யாற்றினர். தமிழகச் சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. க. இராசாராம் அவர்கள் தலைமை வகித்தார். சர்வதேசச் சுற்றுலா அமைப்பின் தலைவர் பாதூல், செயலாளர் லோனெட்டி ஆகியோரும் விழாவில் பேசினர். இந்தியச்சுற்றுலாவாரியத் தலைமைப் பொறியாளர் திரு ஒய். எஸ். இராமசாமி நன்றி கூறினர். அதுபோது நமது தமிழக முதல்வர் அவர்கள் நிகழ்த்திய உரைச்சுருக்கம், இங்குத் தொகுத்துத் தரப் பெறுகின்றது.

—ஆசிரியர்.]

மாமல்லபுரம் :

" மாமல்லபுரத்தில் நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். முதலில் நம்முடைய சுந்தரா அவர்கள் மூலம் மத்திய அரசுச் சுற்றுலாவாரியத் துறையை, மகாபலிபுரம் என்று அழைப்பதற்குப் பதில் மாமல்லபுரம் என்று அழைக்க வேண்டும்என்பது தான், என்னுடைய வேண்டுகோளாகும். மகாபலிபுரம் என்பது, சிதைந்து திரிந்து பழக்கத்தில் அழைக்கப்படுவதாகும். ஒரு ஊரின் பெயர் குறிப்பிடப்படுகிற நேரத்தில், அந்த ஊரோடு மறைந்து கிடக்கின்ற வரலாற்றுச் சிறப்புக்கள் காப்பாற்றப்பட்டாக வேண்டும். மகாபலிபுரம் என்றால் ஒரு புராண கதைதான் நமக்கு ஞாபகத்திற்கு வரும். மாமல்லபுரம் என்று சொல்கிற நேரத்தில், இந்த ஊரை நிர்மாணித்தவன், இங்கு அழகு மிக்க சிற்பங்களை உருவாக்கக் காரணமாக இருந்தவன், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, இந்த மண்டிலத்தை ஆண்ட நரசிம்ம பல்லவனுடைய நினைவு நமக்கு வரும். அந்த நரசிம்ம வர்ம பல்லவனுடைய ஆற்றலால், திறனால் அவனுக்குக் கிடைத்த பட்டப் பெயர் "மாமல்லன்" என்பது. அந்தப் பட்டத்தின் நினைவாக அமைக்கப் பட்டு, மாமல்லபுரம் என்று அழைக்கப்பட்டு, இத்தனை வரலாற்றுச் சிறப்புக்களையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது இந்த ஊர். இது வரையில் மகாபலிபுரம் என்று அழைக்கப் பட்டாலும், இனி இது மாமல்லபுரம் என்று அழைக்கப்பட, சுந்தரா அவர்கள் பெரும் முயற்சி எடுத்துக்கொள்வார் என நம்புகிறேன்.

எப்போதுமே இவர்களுக்கு ஊர்களின் பெயரை மாற்றுவதுதான்வேலை என்று யாரு

தவறாக எண்ணி விடுதல்கூடாது. இதிலே ஒரு சரித்திரச் சான்று இருக்கிறது. அந்தக் குறிப்பு விட்டுப் போய் விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இங்கே பேசிய நம்முடைய நண்பர்கள், வெளிநாட்டுக்காரர்கள்கூட, மகாபலிபுரம் என்ற இந்தப் பெயரைக் கூறுவதற்கு, உச்சரிக்கச் சிரமப் பட்டார்கள். மாமல்லபுரம் என்று பெயர் வைத்து விட்டால், இதை விடச் சுலபமாக உச்சரிக்க முடியும் என்று நம்புகிறேன்.

சுந்தரா அவர்களும், மற்றவர்களும்பேசுகிற நேரத்தில் ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்தார்கள். மத்திய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கரண்சிங், மீண்டும் பதவியில் நாம் எதிர்பார்த்தபடி நீடிக்கிறார் என்பதுதான், அந்த மகிழ்ச்சிகரமான செய்தி. அவர் இந்தத் துறையை மிகச் சாதுர்யமாக நடத்தி வந்தார். மிகுந்த அக்கறையோடு இந்தத் துறையில் நல்ல கவனத்தைச் செலுத்தி வருகிறார். ஆகவே நாம்கூட, அவர் இந்தப் பதவியில் இந்தத் துறையைக் கண்காணிக்கும் பொறுப்பில் நீடிக்கவேண்டும் என்றேதான் எதிர் பார்த்தோம். அப்படி நாம் எதிர்பார்த்ததைப் போலவே, அவர் சுற்றுலாத் துறையில் பதவியில் நீடிக்கிறார் என்பது, உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இன்னொரு மகிழ்ச்சி என்னவென்றால், அவருடைய விலகற்கடிதம் இன்று அகில உலக விளம்பரம் பெற்றுவிட்டது. விலகற்கடிதச் செய்தி, விளம்பரமாகும் அதே நேரத்தில், எந்தத் துறையின் அமைச்சர் என்பதும் விளம்பரமாகி, அதன்மூலம் சுற்றுலாத்துறை அகில உலகத்திலும் நல்ல விளம்பரத்தைப் பெற்றிருக்கிறது. சுற்றுலாத்துறைக்கு எப்படியெல்லாம் விளம்பரம் தேவை என்பதை, மிகுந்த அக்கறையுடனும் ஆர்வத்தோடும் நாம் பார்க்கிறோம். சுற்றுலாத்துறையின் விளம்பரத்திற்காக இந்த விலகற்கடிதம் பயன்பட்டதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறைக்கு இந்தியாவைப் பொறுத்தவரையில் மேலும் அதிகமாகப் பணம் ஒதுக்கப்படச் செய்யவேண்டும் என்பதுதான், நான் பலமுறை மத்திய அமைச்சர் திரு. கரண்சிங் அவர்களைப் பார்க்கிற நேரத்திலும், இந்தியப் பிரதமரைச் சந்திக்கிற நேரத்திலும் வலியுறுத்திக் கூறிவரும் செய்திகள் ஆகும்.

புலிக்குகை மண்டபம் :

சுற்றுலாத்துறை கேட்பதற்கும், பார்ப்பதற்கும், ஏதோ சாதாரணமாகத் தோன்றலாம். இது எப்படி நாட்டின் பொருளாதாரத்தில், ஒரு முக்கிய இடத்தை வகிக்க முடியும் என்று சிலர் எண்ணலாம். ஆனால் பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாக ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தக்க ஒரு துறை, சுற்றுலாத் துறை. வெளிநாடுகளில் கோடிக்கணக்கான ரூபாய்களை இந்தத் துறையின் மூலம், வருமானமாகப் பெறுவதை நான் வெளிநாடுகளிலே நேரிலும் விசாரித்துத் தெரிந்துகொண்டேன். அகில உலக நாடுகளின் வருமானங்களைப் பற்றிய புள்ளி விவரங்களைப் பார்க்கிற நேரத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

இரண்டு, மூன்று ஆண்டுகாலமாக இந்தியா, இந்தத் துறையில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. அதில் மாமல்லபுரமும் ஒன்றாக இருப்பதில், நாம் பெருமையடையலாம். இந்த ஊரைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ எனக்கு 22 ஆண்டு காலத் தொடர்புண்டு. 22 ஆண்டுகாலத்திற்கு முன்பு, நான் ஏதாவது எழுத வேண்டுமானால், இங்கேதான் வருவேன். அப்போது இவ்வளவு பெரிய மாளிகைகள் கிடையாது. வேறு ஒரு இடத்தில் சிறிய விடுதியில்தான், தங்கவேண்டும். அந்த விடுதியில் சில புகைப்படங்களைக் காண நேரிட்டது. அதிலே புலிக்குகையும் ஒன்றாகும். அது எங்கே என்று விசாரித்த நேரத்தில், எங்கேயோ ஒரு காட்டிற்குள் இருக்கிறது என்று சொல்லி முடித்துவிட்டார்கள். எப்படியாவது அதைப் பார்த்துத் தீரவேண்டுமென்று நான் முயற்சி எடுத்து அந்த இடத்திற்குச் சென்று, அருகே செல்லப் பாதை வசதியில்லாமல் மிகுந்த சிரமத்திற்கிடையே சென்று பார்த்தேன்.

அது முதலே, எனக்கு மாமல்லபுரத்திலே உள்ள இந்த சிற்பங்களை, அகில உலகத்திற்கும் அறிவிக்கவேண்டும் என்பதிலும், அந்தப் புலிக்குகை மண்டபம் அமைந்துள்ள எழிலை, வனப்பை, சிறப்பை நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டுமென்பதிலும், தணியாத ஆர்வம் இருந்தது. அது இன்றுதான் நாங்கள் பொறுப்பேற்று இருக்கும்போது நிறைவேறுவதை எண்ணுகிற நேரத்தில், 20 ஆண்டுகளுக்கு முன்பு அதைத் தேடிப் பார்த்த நிகழ்ச்சி

நினைவுக்கு வருகிறது. இப்போது அந்த இடங்களை உலகத்தார் முன்னிலையில் காட்டுகிற பொறுப்பை ஏற்றிருக்கிறோம் என்பதை எண்ணுகிற நிலையில், அளவற்ற பூரிப்பினை நான் அடைகிறேன்.

இங்கே இன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிற இந்த 24 குடில்கள், உள்ளபடியே வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளை மெத்தவும் கவரக்கூடியவை. இதைப்போல ஆற்றங்கரையோரங்களில் எல்லாம், சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய அம்சங்களைச் சேர்க்கவேண்டும் என்று சுற்றுலா அமைச்சர் சொன்னார். தமிழ் நாட்டிற்கும், மத்திய அரசிற்கும் கிடைத்திருக்கிற சுற்றுலா அமைச்சர்கள் எப்படியென்றால், மத்தியச் சுற்றுலா அமைச்சர் திரு. கரண்சிங் சுற்றுலாவிலேயே பிறந்தவர். அவருடைய பெற்றோர்கள் வெளிநாடுகளைச் சுற்றி வந்த நேரத்தில், பாரிஸ் நகரத்திலே ஒரு ஓட்டலிலே திரு. கரண்சிங் பிறந்ததாக நான் அண்மையில் கேள்விப்பட்டேன். ஆகவே கரண்சிங் அவர்கள் சுற்றுலாவில் பிறந்தவர்.

நம்முடைய அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் சுற்றுலாவிற்காகவே பிறந்தவர். அவரிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லாத் துறைகளையும்விட, இந்த இலாகாவில்தான் அவர் மிகவும்அதிகக்கவனம்செலுத்திவருகிறார். அதன் காரணமாகத்தான், திரு. ஆசைத்தம்பி அவர்கள் தலைமையில்கூட, ஒரு சுற்றுலா வாரியம் அமைக்கப்பட்டு, அதுவும் நல்ல முறையில் பணிகளைச் சிறப்புற ஆற்றிக் கொண்டு வருகிறது.

சிலப்பதிகாரக் கலைக்கூடம் :

சுற்றுலா வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பேகூட, நான் பொதுப் பணித்துறை அமைச்சர் பொறுப்பை யேற்றுக்கொண்ட நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணையின் பேரில், பூம்புகார்ப்பட்டினத்தில் சிலப்பதிகாரக் கலைக்கூடம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான சிற்பங்களை எல்லாம் வடிக்கும் பணிகள், மாமல்லபுரத்தில் நடைபெற்று வருவதை நான் பலமுறை காணும் வாய்ப்பைப் பெற்றேன்! இன்று அந்தக் கலைக்கூடம் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. பூம்புகாரில், காவிரிப் பூம்பட்டினத்தில், அமைக்கப்படவிருக்கிற அந்தக் கலைக்கூடம், எதிர்காலத்தில் வெளி நாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் அமைய இருக்கிறது.

சித்திரைத் திங்களில் நடைபெறுவதாகச் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிற இந்திர விழா மிகச் சிறப்புக்குரிய விழா. சித்திரா பௌர்ணமி அன்று இந்திர விழாக் கொண்டாடப்படுகிற அந்த நாளில், சிலப்பதிகாரக் கலைக்கூடம் தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் பூம்பட்டினத்தில் திறக்கப்பட இருக்கிறது. இது போன்ற பல சுற்றுலா இடங்களை, நாம் உருவாக்குவதன் மூலம், சரித்திரத்தை, வரலாற்றுச் சான்றுகளை ஞாபகப்படுத்துவது மாத்திரமல்ல; கலாசாரத் தொடர்புகளையும், கலைத் தொடர்புகளையும், நாட்டிற்கு நாடு-மாநிலத்திற்கு மாநிலம்-மாவட்டத்திற்கு மாவட்டம்-ஊருக்கு ஊர், என்று நாம் இணைப்பை ஏற்படுத்தவும் இந்தத் துறை வழி வகுக்கும். அந்த வகையில் இந்தத்துறை செய்து வருகிற எல்லா முயற்சிகளையும் நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

முதலிடத்தில் வைத்திடுக

மத்திய அரசு சுற்றுலாத்துறையைப் பத்தாவது, பன்னிரண்டாவது இடத்தில் வைத்து எண்ணிப் பார்க்காமல், இரண்டாவது மூன்றாவது இடம் என்றுகூட இல்லாமல், முதலிடத்திலேகூட வைத்து, இந்தியாவிலே சுற்றுலாத் துறையை மேலும் பெருக்கினால், இந்தியாவின் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை நிச்சயமாகக் காணமுடியும். இதில் இந்தியப் பேரரசும், மத்திய அமைச்சர் திரு. கரண்சிங் அவர்களும் பாடுபடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

ஒளி-ஒலி அமைப்பு

தமிழ் நாட்டில், குறிப்பாக மாமல்லபுரம் போன்ற இடங்களை, இன்னும் வெளிநாட்டுப்

பயணிகளைக் கவருகிற அளவிற்குச் சிறப்பும் வனப்பும் கொழிக்கும் வகையில் ஆக்க வேண்டும். மதுரையில் ஒளி ஒலி அமைப்பு பற்றித் திரு. கரண்சிங்கிடம் பலமுறை பேசியிருக்கிறேன். முதலில் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆனால் மதுரையிலிருந்து சிலர், அதை அங்கே அமைக்கக்கூடாது, ஆண்டவனுக்கு ஆகாது என்று தெரிவித்தவுடன், மத்திய அரசு கொஞ்சம் அச்சம் தெரிவித்து, வேறிடத்தில் வைக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

இப்போது மாமல்லபுரத்தில் அந்த ஒளி-ஒலி அமைப்பு, கிட்டத்தட்ட இருபது லட்ச ரூபாய்ச் செலவில் உருவாக இருக்கிறது. மாமல்லபுரத்தில் உருவாகிற அதே நேரத்தில், இங்கே உருவாகி விட்டது, ஆகவே மதுரைக்குக் கிடையாது என்று சொல்லாமல், மாமல்லபுரத்தில் இருக்கட்டும், மதுரைக்கும் வரட்டும் என்ற அளவில்தான், தமிழக அரசு தன் வேண்டுகோளை மத்திய அரசிடம் வைத்திருக்கிறது. திரு. கரண்சிங் வந்திருந்தால் இன்னும் பல வேண்டுகோளை வைத்திருக்கலாம். இருந்தாலும் அவருடைய காதிற்குச் சுந்தரா அவர்கள் மூலம் நமது வேண்டுகோள்கள் நிச்சயம் செல்லும் என்று நம்புகிறேன்.

148708

சென்னை திருவல்லிக்கேணி அருட்டிரு காமகலாகாமேசுவரர் கோயிலில் நிகழ்ந்த தூய்மைப் பரிசளிப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல் (30—1—73)

அறநிலையத் துறையின் ஆக்கப் பணிகள்

(கோவை மாவட்டம்)

★

மாண்புமிகு

திரு. மு. கண்ணப்பர் அவர்கள்

அறநிலையத்துறை அமைச்சர்

★

பல முனைத் திட்டங்கள் :

அறநிலையத்துறை என்றால் "கடவுள் வழிபாடு" மட்டுந்தான் என்ற நிலைமைமாற்றி, இத்துறையின் மூலம் இன்று நாம் பல்வேறு சமுதாய முன்னேற்றத்திற்கான பணிகளை நிறைவேற்றி வருகின்றோம்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்றார் பாரதி. இந்த வகையில் தமிழகத்தில் இன்று ஆலயங்கள் மூலம் வரும் வருமானத்தில் பலமுனைத் திட்டங்கள் பாங்குற நடைபெற்று வருகின்றன.

கல்விப் பணிகள் :

கல்விப்பணி வளர்ச்சியில் அறநிலையத் துறையின் மூலம், இன்று தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் கல்விக் கூடங்களை நிறுவி, ஏழைகள் இலவசமாகக் கண்ணெனும் கல்விபெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் அதிக வருமானம் வரும் பழனிக் கோயில் நிதியில் இருந்து "பழனியாண்டவர் கலைக்கல்லூரி" ஒன்றும் செம்மையுற நடைபெற்று வருகின்றது. ஆரம்பப்பள்ளி முதல் உயர்நிலைப்பள்ளி வரை, கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. அந்த வகையில், கோவை மாவட்டத்தில், மருதமலை முருகன் கோயில் நிதியிலிருந்து, உயர்நிலைப்பள்ளி தொடங்கப்பட்டுச் சிறப்புற நடைபெற்று வருகின்றது. அதே போன்று வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் நிதியிலிருந்தும், ஒரு உயர்நிலைப் பள்ளி நடைபெற்று வருகின்றது. இவ்விரு பள்ளிகளிலும் சுமார் 500 ஏழை மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களைப் பொறுத்த மட்டில் 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும்' என்பது எக்காலும் உண்மையாகும். வரும் 1973—74-ஆம் கல்வி ஆண்டில் 'பண்ணாரி' என்ற இடத்தில் (சத்தியமங்கலம் அருகில்), சுமார் 3 லட்சம் ரூபாய்ச் செலவில், உயர்நிலைப் பள்ளி அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

பராமரிப்பு நிலையங்கள்

வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலில், தாய்-தந்தையற்ற 30 திக்கற்ற

மாணவர்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டு வருவதுடன், உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகளும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. காரமடைக் கோயில் வருவாயிலிருந்து, 'சிசுப் பராமரிப்பு நிலையம்' ஒன்று தொடங்கப்பட்டு, 40 இளஞ்சிறுர்கள் இந்த அரசின் பாராமரிப்பில் வளர்ந்து வருகின்ருர்கள். அத்துடன், கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுத் தாய் தந்தையரை இழந்த 5 குழந்தைகளை, அரசு தத்து எடுத்துக் கொள்ள, அறநிலையத் துறை அவர்களுக்குத் தாயாக நின்று தக்கன செய்து வருகின்றது.

திருமண மண்டபங்கள் :

திருமண முறைகளில் இருந்த சிக்கலை நீக்கிச் சட்டம் செய்த பின்னர், கோயில்களில் நடக்கும் திருமணங்களின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்திருக்கின்றது. திருமணங்கள் செய்ய இடவசதி, பொருள் வசதியற்ருேர், குறைந்த செலவில் கோயில்களுக்குச் சென்று முடித்துக் கொள்வது, தொன்று தொட்டுப் பெரிய வழக்கமாக இருந்து வருகின்றது. இத்தகைய திருமணங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைக் கணக்கில் கொண்டு, கோயில் நிதியிலிருந்து 'திருமண மண்டபங்கள்' கட்டப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், தற்பொழுது கீழ்க்கண்ட 5 கோயில்களில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

		இலட்சம் ரூபாய்.
1.	பண்ணுரி மாரியம்மன் கோயில்	1·80
2.	வெங்கம்பூர் வரதராசப் பெருமாள் கோயில்	1·75
3.	பெரிய களந்தை ஆதித்தேசுவரர் கோயில்	0·40
4.	கிணத்துக்கடவு, பொன்மலை வேலாயுத சாமி கோயில்	1·40
5.	காட்டூர் விநாயகர், சுப்பிரமணியர் மாரியம்மன் கோயில்	0·60

வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் அருகே ரூபாய் 3·75 இலட்சத்தில் ஒரு திருமண மண்டபம் கட்டப்படும். கோயில் நிதியிலிருந்து, ஏழை மக்களுக்கு இலவசமாகத் திருமணங்கள் செய்து வைப்பது என்ற கொள்கைக்கு ஏற்ப, கோவை மாவட்டத்தில் 300 திருமணங்கள் நடந்தேற இருக்கின்றன.

கோயில்கள் :

சிறிய, பெரிய, நடுத்தரத் கோயில்கள் தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கில் இருக்க, கோவை மாவட்டத்தில் 1967ஆம் ஆண்டில் அறநிலையத் துறையின் கீழ் 921 கோயில்கள் இருந்தன. ஆனுல், இன்று 1,293 கோயில்கள் அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளன. 1973 — 74 —ஆம் ஆண்டு இறுதிக்குள், 1, 528 கோயில்கள் அறநிலையத்துறையின் கீழ்க் கொண்டு வரப்படும். வருவாயைப் பொறுத்த அளவில் 1977—ல் ரூ. 18, 67, 450 என்றிருந்த வருவாய் 1972—ல் ரூ. 29, 33, 620 ஆக உயர்ந்துள்ளது மேலும் 1, 528 கோயில்களை அறநிலையத்துறையின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம் கோவை மாவட்ட அறநிலைய வருமானம் மேலும் ரூபாய் 5 இலட்சம் அளவுக்குஉயரும்.

தமிழில் அருச்சனை :

கோயில்களில் தமிழிலேயே அருச்சனை செய்திட வழிவகுத்து, பலரும் போற்றும் வண்ணம் சிறப்புற நடந்தேறி வருகின்றது. மேலும்,அர்ச்சகர்களாக யார் வேண்டுமானுலும் வரலாம் என்ற சமுதாயச் சீர்திருத்தச்சட்டம் கொணர்ந்ததால், கோயில்களில் சாதி பேதம் நீங்கி, சமதர்மச் சமுதாயம் உருவாக வழி ஏற்பட்டுள்ளது. ஆண்டவன் முன்னுல் அனைவரும் சமம் என்ற தத்துவம் உண்மையாகிறது. கோயில் நிருவாகக் குழுவில் ஒருவர் கட்டாயமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற புரட்சிகரமான மாற்றத்தைச் சட்டம் மூலம் நம்முடைய அரசு இந்தியாவிலேயே முதல்முதலில் ஏற்படுத்தியுள்ளது.

வருமானம் :

(1) பண்ணுரி மாரியம்மன் கோயில் :

1967	...	1, 62, 286, 44
1972	...	2, 99, 376, 54

(2) வாழைத்தோட்டத்து அய்யன்கோயில், அய்யம்பாளையம் :

1967	...	1, 47, 922, 57
1972	...	1, 92, 812, 35

(3) வரதராசப்பெருமாள்கோயில், ஊஞ்சலூர், ஈரோடு :

1967	...	47,171.00
1972	...	1,87,549.00

(4) தண்டுமாரியம்மன் கோயில், கோயம்பத்தூர்,

1967	...	18,862.00
1972	...	46,013.70

(5) அவிநாசிலிங்கேசுவரர் கோயில், அவிநாசி.

1967	...	15,001.00
1972	...	46,013.70

(6) சுப்பிரமணியசுவாமி கோயில், திருப்பூர்:

1967	...	15,028.00
1972	...	69,781.00

(7) மகுடேசுவரர், வீரநாராயணப்பெருமாள் கோயில், கொடுமுடி, ஈரோடு:

1967	...	71,902.01
1972	...	1,29,631.83

(8) கோனியம்மன் கோயில், கோயம்பத்தூர்:

1967	...	54,080.44
1972	...	61,580.15

(9) சங்கமேசுவரசுவாமி கோயில், பவானி:

1967	...	30,902.28
1972	...	62,210.00

பெரும் புகழ்க் கோயில்கள்:

கோவை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் கோயில்கள் இருந்தாலும், பெருவாரியான மக்களின் எண்ணத்தில் இருப்பவைகளாகவும் பெரியவைகளாகவும் உள்ளவை (1) மருதமலை முருகன்கோயில், (2)பேரூர்ப் பட்டீசுவரசுவாமி கோயில் (3) சிவன்மலைச் சுப்பிரமணியசுவாமி கோயில், (4) வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் (5) அவிநாசி அவிநாசிலிங்கேசுவரர் கோயில், (6) கோவை தண்டுமாரியம்மன் கோயில் (7) கோவை கோனியம்மன்கோயில், (8) பண்ணாரி மாரியம்மன் கோயில், (9)வெங்கம்பூர் வரதராசப் பெருமாள் கோயில், (10) பவானி சங்கமேசுவரசுவாமி தேவத்தானம், (11) கொடுமுடி வீரநாராயணப் பெருமாள் கோயில் ஆகிய கோயில்கள் வரலாற்றுச் சிறப்புமிக்கவையாக விளங்குகின்றன. வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சுற்றுலாக் கண்ணோட்டத்திலும், மருதமலை—பேரூர்—கொடுமுடி ஆகியவற்றின் கோயில்கள் பெருமை பெற்று விளங்குகின்றன. பேரூர்க் கோயிலில் உள்ள சிற்பங்கள் அயல்நாட்டினரைப் பெரிதும் கவருகின்றன. ★

திருவானைக்கா சம்புகேசுவரர் கோயில், நீலகிரீசுவரர் ஆலயத் திருப்பணித் துவக்க விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள். (19—1—73).

(359-ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நிலை ஆய்வின் காரணமாக இப்பிரிவினரால் கீழ்க்காணும் விவரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

		சமய நிறுவனங்களின் எண்ணிக்கை	அவைகளுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பு (நஞ்சையும் புஞ்சையும்) ஏக்சர். செண்ட்
1.	ஆய்வின் காரணமாகத் தமிழ் நாடெங்கும் கண்டுபிடிக்கப் பட்ட, அற நிலையத் துறையினரின் கட்டுப் பாட்டில் இல்லாத நிறுவனங்கள்.	40,247	1 98,920.53
2.	இவற்றில் ஆய்வாளர்களின் முதல் அறிக்கை பெறப் பட்ட சமய நிறுவனங்கள், அவற்றுள் 2621 நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.	6,000	41,664·08
3.	திருக்கோயில் நிலங்கள் உண்மையிலேயே திருக்கோயில் உடைமையிலும் அனுபவத்திலும் இல்லாமல் தனியாரிடம் இருப்பனவாகக் கண்டு பிடிக்கப்பட்ட நிறுவனங்கள்.	15,944	26,065·8 (விவசாய) (நிலம்.) 656·62 (நகர்ப்புற நிலம்)
4.	திருக்கோயில் நிலங்களை அவற்றின் உண்மையான உடைமை யாக்க நிருவாகிகள் நடவடிக்கை மேற்கொண்ட நேர்வுகள்.	880	2,250·41
5.	உண்மையிலேயே திருக்கோயில் உடைமைகளாக ஆக்கப் பட்ட நேர்வுகள்.	186	717.43

மேலும் திருக்கோயில்களுக்கு உரிய குத்தகைக் குறைவாக உள்ள 33,703,86 ஏக்கர் விவசாய நிலங்கள் மற்றும் 772·89 ஏக்கர் நகர்ப் புற நிலங்கள், மற்றும் 2,218 கட்டடங்களைப் பொறுத்தும் சிறப்புப் பணியாளர்கள் அறிக்கை சமர்ப்பித்து உள்ளனர். மேலும் திருக்கோயில் களுக்குச் சொந்தமான தரிசாக உள்ள 6,694·87 ஏக்கர் நிலங்களை இலாபகரமான முறையில் பயன்படுத்துவதற்கும் வழிவகைகளைத் தெரி வித்திருக்கின்றனர். இது குறித்து இத்துறை அலுவலர்களால் தக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு (மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகள் இணைக்கப்பட்ட - இணைக்கப் படாத தேவஸ்வம் சட்டம் (1959-ஆம் ஆண்டு 30-வது தமிழ்நாடு சட்டம்).—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு 30-வது சட்டத்தின் படி கன்னியா குமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டத் திலும் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக் கப்படாத தேவஸ்வங்கள் என்று அழைக்கப் படும் சமய நிறுவனங்களை தேவஸ்வம் வாரியம் நிருவகித்து, கட்டுப்படுத்தி, மேற்பார்வை செய்து வருகிறது. இப்பகுதிகளில் உள்ள இதர நிறுவனங்கள் 1959-ஆம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் கீழ் வரும். இவைகள் அனைத்தும் கன்னியா குமரி இந்து சமய உதவி ஆணையாளரின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருக்கின்றன. கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் மூன்று நியமன உறுப்பினர்களைக் கொண்டது. இதில் ஒருவர் திருவிதாங்கூர் மாநில முன்னாள் மன்ன ரால் நியமனம் செய்யப்பட்டும் இதர உறுப் பினர்கள் (தலைவர் உட்பட) தமிழ்நாடு அரசால் நியமனம் செய்யப்பட்டும் வருகின்ற னர். இந்தக் உறுப்பினர்களின் பதவிக்

காலம் 31—3—1972 முதல் முடிவடைந்து விட்டது. ஆயினும் இந்த வாரியம் தற்போது செயல்பட்டு வருகிறது.

தேவஸ்வம் வாரியம் அரசு மானியமாக ஆண்டு தோறும் ரூ. 13,68,000 பெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் செங்கோட்டை வட்டத்தில் செயல்பட்டு வரும் தேவஸ்வம் வாரியம் என்னும் அமைப்பை நீக்கி இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத அனைத்துத் திருக்கோயில்களையும் கண்காணித்து நிருவகித்திடத் தமிழ்நாட்டில் மற்ற எல்லாப் பகுதியிலும் செயல்பட்டு வரும் இந்து சமய அறநிலைய 1959-வது ஆண்டுச்சட்டத்தினை முழுமையாக இப்பகுதிகளுக்கும் விரிவாக்கிடும் வகையில் சட்டத்திருத்தத்திற்கு அனுமதி கோரி இவ்வரசு மத்திய அரசை வேண்டியுள்ளது. இது பற்றி விரைந்து செயல்பட வேண்டிய அவசியம் குறித்து, பன்முறை மத்திய அரசுக்குத்தெரிவித்தும்,மத்திய அரசின் அனுமதி இது வரையில் தரப்படவில்லை என்பதை இங்குக் குறிப்பிடுவது அவசியமாகிறது. இத்திருத்தம் திருக் கோயில்களின் முறையான நிருவாகத்திற்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலும் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த செங்கோட்டைப் பகுதியிலும் உறுதுணை பயக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டைத் திருக்கோயில்கள் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் பெற்று வருகின்றன. இதுவன்றித் தன்னுடைய வழிபாட்டு இல்லத்தை பராமரித்து வருவதற்காகப் புதுக் கோட்டையின் முன்னாள் மன்னருக்கு ஆண்டொன்றுககு ரூ. 6,000 அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழில் வழிபாடு.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஒன்றுபட்ட கோரிக்கையை ஏற்கும் வகையில் தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் அனைத்திலும் தமிழ் வழிபாட்டு முறை விரிவு படுத்தப்பட்டது. துவக்கத்தில் சிலரின் எதிர்ப்புக் குரல் இருப்பினும் தமிழ்ப்பெருங்குடி மக்களின் நல்லாதரவு காரணமாகத் தற்போது அனைத்துத் திருக்கோயில்களிலும் தமிழ் வழிபாட்டு முறை நடைமுறையில் உள்ளது. ஆயினும் வழிபடுவோரின் உரிமையில் இவ்வரசு தலையிட விரும்பவில்லை என்பதன் காரணமாக, வடமொழியில் வழிபாடு செய்ய வேண்டுவோருக்கு உரிய வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. எனினும் தமிழ் வழிபாடு முறையை விரும்புவோர் எண்ணிக்கை நாள்தோறும் பெருகி வருவது மன நிறைவை அளிக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

யுனெஸ்கோ உதவி

இம்மாநிலத்திலுள்ள வரலாற்றுப் பெருமை வாய்ந்த தொன்மையான திருக்கோயில்கள் சிலவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் புதுப்பிப்பதிலும் "ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞானப் பண்பாடு நிறுவனம்" தொடர்ந்து அக்கறை காட்டி வந்துள்ளது. திருவரங்கத்திலுள்ள அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு இந்நிறுவனம் 12, 000 டாலர்களை பென் காப்சுலா (ஒருவகை தெளிக்கும் எண்ணை) உட்பட இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அத்திருக்கோயில்களின் பண்டைக்காலப் பண்பாடு கெடாத வகையில் சுதை வேலைகளைப் பாதுகாக்கப் பயன்படும் பொருள்கள் மூலம் வழங்கியுள்ளது. 1972—73-ம் ஆண்டில் நான்முகம் கோபுரம் மற்றும் "ஆரியபாதாள் கோபுரம்" ஆகியவற்றின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவி பெறும் இரண்டாவது திருக்கோயிலாக இராமேசுவரத்தில் உள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலும், காஞ்சிபுரத்திலுள்ள அருள்மிகு வரதராஜசுவாமி திருக்கோயில் மூன்றுவதாகவும், சிதம்பரத்தில் உள்ள அருள்மிகு நடராசர் திருக்கோயில் நான்காவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை நன்றியுணர்வோடு ஈண்டுக் குறிப்பிட்டுக் கொள்வதோடு இவைகள் குறித்துக் கடிதப் போக்குவாத்து இருந்துவருகிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

தொல்பொருட் களஞ்சியம்

கோயில்களில் கலை மற்றும் சிற்பக்கலை ஆகியவைகளைக் காட்டும் தொல்பொருட் களஞ்சியங்களைக் கீழ்க்காணும் சமய நிலையங்கள் பேணி வருகின்றன:

1. அருள்மிகு அரங்கநாதசுவாமி ஆலயம், திருவரங்கம்.

2. அருள்மிகு மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயம், மதுரை.

3. அருள்மிகு ஜம்புகேசுவரர் ஆலயம், திருவாணைக்கா, திருச்சிராப்பள்ளி.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள கோயில்கள் சிறந்த கலைக்கூடங்களைப் பராமரிக்க முடியும். தற்போது அவ்வகையான கலைக் கூடங்களை மேலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திருக்கோயில் திங்கள் ஏடு

1958-ல் தொடங்கப்பட்டுத் திங்கள் தோறும் வெளிவரும் "திருக்கோயில்" இதழ் தமிழ் நாட்டில் மட்டுமின்றி அண்டை அயல் நாடுகளிலும் 4, 925 சந்தாதர்ரர்களைக் * கொண்டிருக்கிறது. இந்து சமய வேதாந்த கலாச் சாரமற்றும் இலக்கியப் பொருள்கள் குறித்தும் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களின் தொன்மையையும் வரலாற்றையும் சிறந்த முறையில் வெளியிடும் ஏடாக இது அமைந்து, சமய இலக்கிய அறிஞர் பெருமக்கள் நல்ல தரமுற்ற கட்டுரைகளை அளிக்கும் ஒன்ருக மிளிர்கிறது.

சென்ற ஆண்டில் எடுத்த சில குறிப்பிடத் தக்க முடிவுகளில் சிலவற்றை இங்கே எடுத்துரைப்பது பயன்தரத் தக்கதாய் அமையும் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து சென்ற ஆண்டில் இரு பெரும் சமுதாய நற்பணிகளுக்காக ஒரு பெருந்தொகை செலவிடப் பட்டது. அவற்றில் ஒன்று பிச்சைக் காரர்கள் மறுவாழ்வு நிதிக்காக, திருக்கோயில்கள் நிருவாகிகள் தாங்களே முன் வந்து ரு 3, 49, 616.00 அளித்துத் தம் பங்கினையாற்றியுள்ளனர். அடுத்து விழியற்ருேருக்குக் "கண் ஒளி வழங்கும் திட்டத்தின்" கீழ்ப் பல்வேறு இடங்களில் திருக்கோயில்களின் சார்பில் ரூ. 2, 27, 552·00 கொடுக்கப் பட்டதுடன் திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடத்திலேயே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது என்பதையும் பெருமையோடு இங்கே நினைவு கூர விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் திருக்கோயில்களுக்குள் சென்று இறைவனை வழிபடுவதுகூட இயலாது இருந்த நிலை மாறி, இன்றைய தினம் தாழ்த்தப் பட்டோர் ஒருவர் கண்டிப்பாகத் திருக்கோயில் அறங்காவலர் குழுவில் இடம் பெற வேண்டும் என்ற அளவுக்கு விதிமுறைகளில் திருத்தம் செய்து சென்ற ஆண்டு முதல் எல்லாத் திருக்கோயில்களுக்கும் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அறங்காவலராக நியமனம் பெறும் சமுதாய மாற்றம் எந்தச் சந்தடியும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் திருக்கோயில்களில் அறங்காவலர்கள் பதவி அளிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், பரம்பரை அர்ச்சகர்முறை ஒழிப்பினையொட்டித் தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் அர்ச்சகராக்கத்தக்க வகையில் தற்போதைய இந்திய அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று, இந்திய அரசுக்கு இம்மாநில அரசு 20—11—1972, அன்று கடிதம் எழுதி இதன்தொடர்பாக 11-12-1972, 22-1-1973 ஆகிய இரு நாட்களும் அவர்கள் நினைவுபடுத்தப் பட்டுள்ளார்கள். என்றைய தினம் தாழ்த்தப் பட்ட குடிமகன் ஒருவன் திருக்கோயில் அர்ச்சகராக வர முடிகிறதோ அன்றுதான் உண்மையான சமதர்ம சமவாழ்வை இந்த நாடு பெற்றதாகக் கருதமுடியும் என்பதால் இந்திய அரசு இதற்கு ஆவனசெய்ய முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு திருக்கோயிலுக்கும், ஒரு நிருவாக அதிகாரியை நியமித்துச் சீர்மை செய்வது கொள்கையளவில் நலம் பயக்கத் தக்கதாய்த் தோன்றிடினும், திருக்கோயில்களின் நிதி வாயில்கள் இதற்கு இடம்தராத காரணத்தால் ஒரு பகுதிக்குள் அடங்கும் பல்வேறு சிறிய திருக்கோயில்களை ஒருங்கிணைத்து நிருவாக வசதிக்கு ஏற்ப ஒரு நிருவாக அதிகாரியினுடைய நேரடி ஆளுகைக்குள் அவைகளைக் கொண்டு வருவதற்கான முடிவு எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

தமிழ்க் கடவுளாம் முருகக் கடவுள் உறையும் பெருமைக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்ருன பழமுதிர்சோலைத் திருக்கோயிலைச் சென்றடைய ஏதுவாக மலையடிவாரத்திலிருந்து நல்ல பாதை வசதி செய்து கொடுக்கக் கருதி ரூ. 5 லட்சம் செலவில் மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுத் தற்போது வேலை தொடங்கப்பட்டு உள்ளது.

உலகப் பொதுமறையாம் திருக்குறளினை அருளிச் செய்த திருவள்ளுவப் பெருந்தகையின் நினைவாய்ச் சென்னை நகரில் மயிலைப் பகுதியில் அமைந்துள்ள திருக்கோயிலைத் திருப்பணி செய்வித்தும் திருக்கோயிலை அடுத்துள்ள இடத்தில் தற்போது முழுமையடையாத மண்டபத்தைத் திருத்தியமைத்து, சிறந்த கலைக்கோயிலாக உருவாக்கிடும் முயற்சியை மேற்கொள்ளத் திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அதன்

* தற்போது 5100 ஆக உயர்ந்துள்ளது.

—ஆசிரியர்.

புரவலராகத் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், தலைவராகத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், மற்றும் உறுப்பினர்களாகப்பல்வேறுதுறையைச்சார்ந்த அறிஞர் பெருமக்களும் பங்கு கொண்டு செயலாற்றி வருகின்றனர். ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாட்டினர்'' தம் நன்றிப் பெருக்கின் சின்னமாய் இது அமையும் என்பதால், அனைவரும் இதனை வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

தண்பொழில் சூழ் காவிரிக்கரையோரம் அமைந்து நாடோறும் பல்லாயிரக் கணக்கான மக்களைத் தம்பால் ஈர்க்கும் அருள்மிகு தாயுமானர்—உச்சிப்பிள்ளையார் திருக்கோயில்களுக்குத் தற்போது வழிபடுவோர் படியேறிச் சென்றிடும் நிலைமையை மாற்றிப் பழனியம்பதியில் அமைந்துள்ள போன்று மலையடிவாரத்திலிருந்து மலையுச்சிவரை செல்ல மின் இழுவை ரயில் (விஞ்ச்) அமைக்க முடிவெடுக்கப்பட்டு அது குறித்த மதிப்பீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு ஆய்வில் இருந்து வருகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பழைமைச் சிறப்பைப் பெற்றுச் செங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள ''திருக்கழுக்குன்றம்'' அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலைப் புதுப்பிக்கவும், செப்பனிடவும், இவ்வாண்டு அரசு ரூ. 1,00,000 நிதி உதவியளித்து உள்ளது.

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் உபரி நிதி மிகுந்த திருக்கோயில்களின் சார்பில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகத் திருமணம் செய்து தரப்படும் திட்டம் சென்ற ஆண்டுமுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனடிப்படையில், திருக்கோயில்களின் வருவாய்க்குத் தக்கவகையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குக் குறையாமல் இலவசத் திருமணங்களைச் செய்விக்கவும், ஒரு திருமணத்திற்கு ரூ. 150க்கு மிகாமல் செலவழிக்கப் படவும் திட்டமிடப்பட்டது. மண மக்களுக்கு இத்தொகையிலிருந்து, வேட்டி, புடவை, தாலி முதலியவைகளை இலவசமாக அளிப்பதுடன் திருமணமும் திருக்கோயிலிலேயே நடத்தி வைக்கப்படுகிறது.

ஏழை எளியோருக்கு உதவும் இத்திட்டம் பொது மக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றுவருகிறது. இவ்வாறு செய்யப்படும் திருமணங்களின் எண்ணிக்கை கூடிவருவது மன நிறைவுக்குரியதாகும்.

அடுத்துத் தமிழகத்து அனைத்துத் திருக்கோயில்களைப் பற்றியும் அவைகளின் வரலாற்றுச் சிறப்பையும் சமயப் பெருமையையும் விளக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் அனைத்துத் திருக்கோயில்களையும் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய புத்தகங்கள் வெளியிடுவது சிறப்புடையது என்ற அடிப்படையில், ஏற்கனவே வெளிவந்த நெல்லை, சென்னை ஆகிய இரு மாவட்டங்களைத் தவிர்த்த மற்ற மாவட்டங்களுக்கான இப்பணியைத் தொடங்க ஆணையிடப்பட்டுள்ளது.

முடிவு :

இறுதியாகத் தமிழ்நாடெங்கணும் மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்டுத் தொல்பொருள் துறையின் கீழ் இருந்து வரும் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் சரிவரப் பாதுகாக்கப் படாமல் பழுதுற்று வருவதை வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இத்திருக்கோயில்கள் அனைத்தும் மத்திய அரசின் நிருவாகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட எந்தது நியாயத்தின் பாற்பட்டதும் அல்ல என்பது தெளிவு. இத்திருக்கோயில்களின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும், கலையழகுச் சிறப்பையும் உரிய முறையில் அமைந்த இம்மாநில அரசின் பாதுகாப்பில் இவையனைத்தும் அமையும் நாளே நன்னாள் என்பதில் ஐயமில்லை.

இவ்வரசு அமைந்த நாள்தொட்டு இன்றுவரை, சமய நெறி முறைகளில் அரசு தலையிடாமல் நடைபெற்று வந்துள்ளது. தொடர்ந்து இதே கொள்கையின் அடிப்படையில் செயல்பட இருக்கும் இத்துறையினருக்குத் தமிழ் மக்களின் ஒருமித்த ஆதரவு வேண்டுமென்று கோரி, ஒருசில பகுதிகளிலிருந்து எதிர்ப்புகள் நியாயமற்ற முறையில் எழும்பிடினும்,

''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''

என்ற பொன்மொழிக்கொப்ப இவ்வரசு, செயல்படும் என்று உறுதி கூறி அமைகிறேன்.

மு. கண்ணப்பன்,
அறநிலைய அமைச்சர்.

கடவுளின் கருணைத்திறன்

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.,

முன்னுரை :

ஓர் ஊரில் ஒரு பெரும் நிலக்கிழார் இருந்தார். அவருக்குத் தலையில் முடி சிறிதும் இல்லாமல் வழுக்கை விழுந்திருந்தது. 'வழுக்கைத்தலை' என்றால் அவருக்குக் கோபம் வரும். பிறர் தமக்கு மிகவும் 'அடர்ந்த தலை முடியுள்ளது' என்றால் அவர் மனம் மிக மகிழ்வார். அங்ஙனம் பொய்யாகப் புகழ்ந்து கூறுபவர்களையே, தம்மிடம் மிகவும் அன்பு கொண்டவர்களாகக் கருதி, அவர்களுக்கு எல்லா வகையான உதவிகளையும் புரிவார். அத்தகைய அவர் ஒரு நாள் தமது மாளிகையின் முற்றத்தில், நெல் பரிமாறிக் கொண்டு நின்றிருந்தார். அப்போது அங்கே ஒருவன் சென்று, "தலைமுடியைப் பேணாமல் இங்ஙனம் தனியே நின்று எற்றுக்கோ நீர் பரிமாறு நின்றீர் ?" என்று உசாவினான். அது கேட்ட அந்நிலக்கிழார், அவனது முகமனுரைக்கு மிகவும் மகிழ்ந்து அன்பு பாராட்டி "இவ்வளவு தூரம் எங்கு நடந்து வந்தீர்" என்று வினவினார். அதற்கு அவன், "ஒன்றுமில்லை ; நும்மைக் கண்டு போக வந்தேன்" என்றான். தம்மிடம் பெரிதும் அன்பு கொண்டு தம்மைப் பார்த்துச் செல்வதற்கென்றே, அவன் வந்திருப்பதாக எண்ணி உவகையுற்ற அந்நிலக்கிழார், "இவ்வளவு தூரம் வந்தீரே, இங்கிருந்து ஒரு கோட்டை நெல் கொண்டு போகலாகாதோ ?" என்றுபரிவுடன் கூறி, அவனுக்கு ஒருகோட்டை நெல் எடுத்து அனுப்பி வைத்தார். அவன் அதை எடுத்துக் கொண்டு போகும் வழியில், எதிரே வந்த ஒருவன், "இது எங்கே பெற்றது?" என வினவினான். அதற்கு அவன், அவ் வழிப் போக்கன்பால் சற்று வெறுப்புடன், "உன்னைப் போல ஒரு மொட்டைத் தலையன் தந்தான்" என்று சொல்லிவிட்டுத் தன்வழியே சென்றான்.

அதுகேட்ட வழிப்போக்கன், உடனே விரைந்து சென்று அப்பெரு நிலக்கிழாரிடம், "இன்னான் உன்னை வைதுபோகா நின்றான்' என்று புறங்கூறிச் சினம் உண்டாக்கினான். அவ்வளவில் அந்நிலக்கிழார் "என் நெல்லையும் கொண்டு என்னையும் வைது போவதோ ?" என்று, தன்னை இகழ்ந்து சென்றவனைப் பிடிக்கத் தொடர்ந்து வந்தார். அதைக்கண்ட அவன், நிலைமையைப்புரிந்து கொண்டு, தப்பும் வழி ஆராய்ந்து தனது சமயோசித புத்தியினால் 'ஏன்தான்! நுமது அடர்ந்து வளர்ந்து நீண்ட தலைமுடி அலைய அலைய இங்ஙனம் ஓடி வரா நின்றீரோ?" எனப் பரிவு தோன்ற வினவினான். அவனது போலிப் பரிவுரையைக் கேட்ட அளவிலேயே, அந்நிலக்கிழார் தம் சினம் தணிந்து, மனம் மகிழ்ந்தவராய், தாம் தொடர்ந்து வந்த காரணம் இன்னதென்னச் சொல்ல நாணமுற்று நின்று, "ஒன்றுமில்லை. உமக்கு இன்னும் ஒரு கோட்டை நெல்லை எடுத்துக் கொண்டு போகச் சொல்லலாம் என்று எண்ணி வந்தேன்" என்று குழறி உரைத்துத் திரும்பினார்.

திருவாய் மொழி :

இச்சிறிய புனைகதையைப் பட்டர் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர், திருவாய் மொழிப் பாசுரம் ஒன்றற்கு உரை விளக்கம் செய்யும்போது அழகுற எடுத்துச் சொல்லிக், கடவுளின் கருணைத் திறத்தை நமக்கு நயமுற விளக்குகின்றார்.

"திருமலையிலே நித்தியவாசம் செய்தருளுகின்ற பெருமானுக்கு, நம என்று சொல்லுவதாகிற அந்தக் கடமையை வகிக்கின்றவர்களுக்கு, அனுபவித்தே தீர்க்க வேண்டிய பாவங்களும், இனிமேல் விளையக்கூடிய பாவங்களும் ஆகியன அனைத்தும், வெந்து தொலைந்தொழியும். இங்ஙனம் பாவங்கள் தொலையவே, அடியவர்களான தாங்கள் தங்கள் இயல்பிற்குத் தகுதியான கைங்கர்யங்களைச் செய்யப் பெறுவார்கள்" என்னும் கருத்தை,

> "வேம் கடன்கள் மெய்ம்மேல்வினைமுற்றவும்
> தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார் ;
> வேங்கடத்துறை வார்க்குநமவென்னல்
> ஆங்கடமை அதுசுமந்தார்கட்கே"

என்னும் திருவாய் மொழிப் பாசுரத்தில், ஆழ்வார்களில் தலைசிறந்தவரான நம்மாழ்வார் நன்கினிது எடுத்துப்பாடி, உபதேசித்தருளுகின்றார்.

1. ஆளவந்தார் :

இப்பாசுரத்தில், ''வேம்கடன்கள் மெய்ம் மேல் வினைமுற்றவும்'' என்னும் வரியானது, மிகவும் முதன்மையும் பொருட் சிறப்பும் வாய்ந்தது. ''அந்தணன் ஒருவன் பிறக்கும் போதே, முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் கடன்பட்டவனாகப் பிறக்கின்றான். இம் மூன்று கடன்களையும் தீர்க்காமல், அவன் வீடு பேற்றை அடைதல் இயலாது. ''வேங்கடத்து உறைவார்க்கு நம'' என்று சொல்லி விட்டால், அம் மூன்று கடன்களும் முழுவதும் தீர்ந்து போய்விடும்'' என்று, இவ்வரிக்கு ஆளவந்தார் பொருள் அருளிச் செய்வர்.

2. இராமாநுசர் :

இதற்கு எம்பெருமானார் என்னும் இராமாநுசர், வேறொரு வகையில் பொருள் பணித்தருள்வர். பாவங்களானவை பூர்வாகங்கள் என்றும், உத்தராகங்கள் என்றும் இருவகைப்படும். எம்பெருமானைப் பற்றுதற்கு முன்பு, புத்திபூர்வமாகச் செய்த பாவங்கள் பூர்வாகங்கள் ஆகும். பிறகு, உலகியல் வாழ்வின் தொடக்கினால் நேரும் மயக்கம் காரணமாக நேரும் பாவங்கள் உத்தராகங்கள் எனப்படும். இவற்றையே 'போய பிழையும் புகுதருவான் நின்றனவும்'' என்று ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்தார். ''வேங்கடத்துறைவார்க்கு நம'' என்று கூறுவோமாயின், பூர்வாகங்கள் ஆகிய கடன்களும், உத்தராகங்களாகிய மேல்வினைகளும், முற்றவும்வேம் (முழுதும் அழிந்தொழியும்); இது மெய் (சத்தியம்) என்பதாக, இவ்வரிக்கு எம்பெருமானார் பொருள் அருளிச் செய்வர்.

பட்டர் :

எத்தனையோ பல பிறவிகளில் தொடர்ந்து செய்து, மலை மலையாகக் குவிந்துகிடக்கும் நம்பாவங்கள், 'வேங்கடத்து உறைவார்க்கு நம' என்ற அவ்வளவில் தொலைந்தொழியுமா? என்று ஒரு சிலர் இங்கு ஐயுறுவர். அங்ஙனம் ஒரு சிலர் ஐயுற்றபொழுதே, பட்டர் என்னும் வைணவப் பெரியார், மேலே குறிப்பிடப் பெற்ற சிறிய புனைகதையை எடுத்துக் கூறியருளியிருக்கின்றார். கடவுள் எல்லையற்ற பெருங் கருணையுடையவர் ஆதலால் நாம் அவரைச் சிறிது புகழ்ந்த அளவிலேயே மிகவும் திருப்தியடைந்து நம் குற்றங்களை யெல்லாம் பொறுத்து அருள்புரிகின்றார். அவரது 'அருளின் நீர்மை இருந்தபடி இது' என்று விளக்கியருளுகின்றார் பட்டர். அப்பெருந்தகையாரின் அரிய நுண்ணிய கருத்தை விளக்கும் உரைப்பகுதி வருமாறு

''இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிகாசம் அருளிச் செய்வர். ''பண்டு, தலையில் மயிரின்றிக்கே யிருப்பானொருவன் நெல் பரிமாறா நின்றானாய், அங்கே ஒருவன் சென்று 'மயிரைப்பேணாதே நீர் தனியே நின்று பரிமாறா நின்றீர்!' என்ன, 'ஏன் தான் நடந்ததீ' என்ன, 'ஒன்றுமில்லை; கண்டுபோக வந்தேன்' என்ன, ஆகில்ஒரு கோட்டையைக் கொண்டு போகலாகாதோ? என்று எடுத்துவிட, அவன் அத்தைக் கொண்டு வாரா நிற்கச் செய்தே எதிரே ஒருவன் வந்து, 'இது எங்கே பெற்றது? என்ன, 'உன் தலை மொட்டைத் தலையன் தந்தான்' என்ன, அவன் அதைச் சென்று அங்கே 'இன்னான் உம்மை வைது போகா நின்றானீ' என்ன, 'அடா! என் நெல்லையுங் கொண்டு என்னையும் வைது போவதே?' என்று தொடர்ந்து வந்தானாய், அவன் புரிந்து பார்த்து, 'ஏன்தான்! குழல்கள் அலைய அலைய ஓடிவரா நின்றதீ!' என்ன. 'ஒன்று மில்லை, இன்னம் ஒருகோட்டை கொண்டு போகச் சொல்லவந்தேன்' என்றானாம். அப்படியே இராமன் கடலை முகங்காட்டுவித்துக் கொள்கைக்காகக் காலைப்பிடிப்பது கோலைத் தொடுப்பதாக நிற்க, அவன் வந்து முகங் காட்டியவாறே, 'உனக்கு அம்பு தொடுத்தோம்' என்ன நாணமுற்று 'உன் விரோதிகளைச் சொல்லு நாம் இதை விட' என்றாரிறே'' என்பது.

முடிவுரை :

இவ்வரிய இனிய உரைப்பகுதியால், கடவுளின் எல்லையற்ற கருணையின் இயல்பும்; எதனையேனும் ஒரு காரணமாக மேலிட்டுக் கொண்டு, உயிர்த்தொகுதிகளையெல்லாம் எங்ஙனமேனும் காப்பாற்றிக் கரையேற்றி உய்வித்தருளுதலையே விரும்புகின்ற கடவுளுடைய திருவுள்ளத்தின் சிறப்பும்; உயிர்கள் தமது தீவினைகளெல்லாம் எளிதில் ஒழிந்து, உய்வதற்கு உரிய இனிய பற்றுக்கோடாகத் திகழ்கின்ற கடவுளது திருநாமத்தின் பெருமையும்; பொய்யே புகழ்வார் புகழ்ந்தால், கடவுள் தனது பெருங்கருணைத் திறத்தினால் அதனையும் பொருளாகக் கொண்டு அருள்புரிகின்ற சிறப்பும் பிறவும், பசுமரத்தில் ஆணிபோல் நம் உள்ளத்திற் பதியுமாறு விளக்கப்பெற்றிருத்தல் உணரலாம். இத்தகைய கடவுளின்பெருங் கருணைத் திறனை உணர்ந்து, அவனது திருநாமங்களை இடையறாது பல்காலும் அன்புடன் வழுத்தி வழிபட்டு, நாம் அனைவரும் நலமெய்தி உய்ய முயலுவோமாக. ★

திருக்கழுக்குன்றத் தலபுராணம்

அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றியது

(மூலமும் உரையும்)

(முற்றொடர்ச்சி)

நீண்ட வெள்ளிவெற்பு ஒளிபடக் கடவுள் நேரிழையார்
பூண்ட மாணிக்கப் பூணும், நித்திலக் குலப் பூணும்;
காண்ட கும்பல சுண்ணமும் கருப்புரத் துகளாம்;
மாண்ட பன்னிறத் துகிலும், வெண் நிறத்துகில் வனப்பாம்

பொழிப்புரை: உயர்வாகிய வெள்ளிமலையென்னும் அந்தக் கயிலாயத்தின் ஒளிபடுமாகில், தேவ மாதர்கள் அணிந்திருக்கும் மாணிக்க ரத்தினாபரணங்களும், தொகுதியான முத்துகளாற் செய்யப்பட்ட ஆபரணங்கள் போல வெண்மை நிறமுள்ளவைகளாய்ப் பிரகாசிக்கும். யாவரும் பார்க்கும் படியான தகுதியுள்ள பலநிறச் சுண்ணப் பொடிகள் எல்லாம், பச்சைக் கருப்பூரத்தூள் போலாகும். மாட்சிமை பொருந்திய பல நிற ஆடைகளும், வெண்மை நிறமுள்ள ஆடைகளைப் போல் வெண்மை நிறமுள்ளவைகளாகும். (91)

உரைசெய் எல்லைமற்று அளப்பில உலப்பில் பேரண்டம்
விரசு தண்சுடர் படப்பொதிந் திட்ட மேதகவால்,
இரசிதக் கிரி இது என்றும். இவன் சிவன் என்றும்,
வரிசையிற் பிறிதில் என வயங்கு கின்றதுவே

பொழிப்புரை: சொல்லுகின்ற எல்லை அளவில்லாமலும், அழிவில்லாமலும் இருக்கும் பெரிய அண்டங்கள் முழுவதும், கலந்த குளிர்ச்சியுள்ள ஒளிபடும்படி நிறைத்திட்ட மேன்மையால், வெள்ளிமலை இதுவோ என்றும். அதில் வீற்றிருக்கும் பரமசிவம் இதுவோ என்றும், வரிசையில் பேதமில்லாததாகப் பிரகாசிக்கின்றது.

(கயிலைமுதல் பேரண்டம் வரையில் ஒரே சோதியாயிருப்பதினால், கயிலையென்றும் அண்டங்கள் என்றும் பிரித்துச் சொல்லக்கூடாமல் இருக்கின்றது என்பது கருத்து). (92)

வெள்ளிக் குன்றொளி பொதுளிய சாரல்மெய்த் தவத்தோர்
தெள்ளிப் பல்பொழிற் பன்மலர் பறித்தலும் சிதறும்
துள்ளித் தேன்களிற் கருப்பினம் நிரைநிரை துளவன்
பள்ளிப் பாற்கடல் கருமணி கொழித்தெனப் படியும்

பொழிப்புரை: வெள்ளிமலையின் பேரொளி நிறைந்திருக்கிற சாரலில், உண்மைத் தவமுள்ள முனிவர்கள், இம் மலர்கள் அருச்சனைக்கு ஆகும் என்று தெரிந்து பல பொழிலில் பல மலர்கள் கொய்தவளவில் சிந்துகின்ற தேன் துளிகளில் வண்டினங்கள், துளசி மாலையணிந்த திருமால் பள்ளி கொண்டிருக்கும் பாற்கடலானது நீல மணிகளைக் கொழிப்பது போலப் படிந்திருக்கும்.

(வண்டினம் படியுமெனக் கூட்டுக. வெள்ளிமலை-பாற்கடல், வண்டினம்-நீல ரத்தினம்). (93)

மாயன் என்கின்ற வான்முகட்டு அண்டமாப் புருடன்,
பாய பாற்கடல் அடங்கலும் பாணியின் முகந்து,
நாய கன்தனைக் கயிலையோ டாட்டலும் நடந்து
போய பால்எனப் பால்அரு வித்திரள் புரளும்,

பொழிப்புரை: திருமால் என்று சொல்லப்படுகின்ற சிறந்த முகட்டினை உடைய அண்டமாகிய மகாபுருடனானவன், பரந்த பாற்கடல் முழுவதையுந் தன்கையில் முகந்து கொண்டு, பரமசிவத்துடன் கயிலையங்கிரியைத் திருமஞ்சனஞ் செய்த அளவில், நாற் புறத்திலும் வழிந்தொழுகிய பாலைப் போல், அந்தக் கயிலையின் சாரலில் வெண்மை நிறமுள்ள அருவிகள் புரளும். (94)

அருவி தோறும்மால் உலகத்தின் அலங்கலும், அயன் நாட்டு
உருவின் மாலையும், சுரபதத்து ஒலியலும், உலவாத்
திருவின் மேதக்க அளகையந் தெரியலும், தினமும்
மருவி ஆடுநர் கழிதரக் கழிதர வயங்கும்

பொழிப்புரை: திருமால் உலகத்து மாலைகளும், பிரமலோகத்தின் அழகிய மாலைகளும், தேவலோகத்து மாலைகளும், கெடாத செல்வத்தினால் மேன்மை பொருந்திய குபேரனின் அளகாபுரி மாலைகளும், நாள்தோறும் விரும்பி நீராடல் செய்கின்றவர்கள் தள்ளிவிடத் தள்ளிவிட ஒழியாமல் அந்த வெள்ளிமலையின் அருவியில் விளங்கிக் கொண்டிருக்கும்.

(மேற்கூறிய திருமால் முதலானவர்கள் சாத்திய மாலைகளுடன், அருவிகள் மாறுமல் வந்து கொண்டிருக்கும் என்பது கருத்து.) (95)

தடமலர்ச் சுனை வயின்தொறும் வயின்தொறும் ததும்பப்,
படர் சிறைத்துறை அன்னங்கள் பரந்து இடைவிடாது,
கடவுளைத் தவர் ஆட்டும்நீர், வெள்ளியங் கடாரத்து
இட நிறைத்தவை தூசின் மூசிய திறத்து இலகும்.

பொழிப்புரை: பெரியவையாகிய மலர்களையுடைய சுனைகளின் இடந்தோறும் இடந்தோறும் நீர்த்துறைகளில் வசிக்கும்படியாகிய பரந்த சிறகினையுடைய அன்னங்கள் நீங்காமல் நிறைந்திருத்தல், சிவபெருமானை முனிவர்கள இடைவிடாமல் திருமஞ்சனஞ் செய்யும் நீரை, வெள்ளிக் கடாரங்களில் நிறைத்து, அந்தக் கடாரங்களை வெள்ளை ஆடையினால் மூடிய தன்மைக்கு ஒப்பாகும்.

(சுனை—வெள்ளிக்கடாரம். அச்சுனையிலிருக்கும் நீர்—திருமஞ்சன நீர். அன்னங்கள்—வெள்ளை ஆடை என வகுத்துணர்ந்து கொள்க.) (96)

மழகளிற் றிளங் குழவி, வாள்அரிப் பசுங்குருளை,
தழைமயிற் குழாம், தறுகண் மாநாகங்கள், சூழும்
உழுவையிற் கணம், மருணம் உள்ளுறுத் துளபிறவும்,
குழுவுறச் செறிந்துஇடை விடாது, என்றும் அக்குன்றம்.

(பொழிப்புரை): இளமைப் பருவமுள்ள யானைக்கன்றுகளும், கொல்லுஞ் செய்கையுள்ள சிங்கங்களின் இளங்குட்டிகளும், ஒலிக்கும் மயிற் கூட்டமும், கொடிய பார்வையுள்ள நாகங்களும், சூழ்ந்த புலிக்கூட்டமும், மான்கூட்டமும், இவையுள்ளிட்ட ஒன்றுக்கொன்று பகைமையுடைய விலங்குகளும் அந்த வெள்ளிமலையினிடத்தில் பகையின்றி எப்போதும் நண்புற்றிருக்கும். (97)

நாகம் பஞ்சரம் சந்தனம் குங்குமம் நறவம்
காக துண்டம் முண்டகம் கன்னிகாரம் காகோளி
பூகம் சண்பகம் தெங்குமாப் பலவு பூங் கதலி
மாகம் கண்ணுற மருங்கெலாம் நெருங்குவ பெருங்கா,

(பொழிப்புரை) : புன்னை செருந்தி சந்தனம் குங்மம் நறவம் அகில் தாழை கோங்கு அசோகு கமுகு சண்பகம் தெங்கு மா பலா வாழை என்னும் இம்மரங்கள் எல்லாம் சோலைகளாய் ஆகாயத்தினி, டத்திற் பொருந்தும்படி சாரலில் நெருங்கியிருக்கும். (நாகம் — புன்னை. பஞ்சரம் — செருந்தி. நறவம் என்பது ஒருமரம். தேன்மரம் என்றுஞ் சொல்லப்படும். அகில் சதுரக்கள்ளியின் வயிர மேயன்றி மரமாக உண்டாவது ஒன்றுண்டு. காகதுண்டம் — அகில். முண்டகம் — தாழை கன்னிகாரம் — கோங்கு, காகோளி — அசோகு.) (98)

பொன் தழைப்பன ; நித்திலம் முகைப்பன ; புனைபூண்
சென்றுஅழைப்பன ; பைந்துகில் காய்ப்பன ; செழும்பொற்
கொன்றை மத்தமும் மிலைந்தவன் ஆணையிற் குழுமி
மன்றலிற் பல கோடி கற்பாடவி வயங்கும்.

(பொழிப்புரை) : செழுமையாகிய பொற்கொன்றை மாலையையும், பொன்னூமத்தை மாலையையும் அணிந்த சிவபெருமானின் ஆணையினால், அந்தக் கயிலாய மலையில் பொன்தழை தழைப்பவை களும், முத்துகளே அரும்புகளாக அரும்புகின்றவைகளும். அணியும் அணிகலன்கள் பேரொளி வீசி யாவரையும் அழைப்பவைகளும், பொன் வண்ண ஆடைகள் காய்ப்பவைகளுமாக வாசனை யுடன் எண்ணற்ற கோடி கற்பகமாய்ச் சோலைகள் விளங்கிக் கொண்டிருக்கும். (99)

வெளிஎலாம் பொதுளிய பொதும்பணைத்தும் வீற்றிருந்து,
கிளியும் பூவையும் வேதங்கள் யாவையும் கிளத்தித்
தெளியும் ஆகமத்து அஞ்செழுத் துண்மையும் தெரிந்து
களிகொளாத் தவர்களி கொளப் பயில்வது அக்கயிலை.

(பொழிப்புரை) : வெளியெங்கும் நெருங்கிய சோலைகளிடத்தில் வாசமாயிருந்து கிள்ளைகளும், நாகணவாய்ப் பறவைகளும், நான்கு வேதங்களையும் ஓதித் தெளிவுள்ள ஆகமத்திற் கூறும் திருவைந்தெழுத்தின் உண்மையினையுந் தெரிந்து, களிப்படையாத முனிவர்களும் களிப்படை யும்படி, அந்தக் கயிலையினிடத்தில் உலவிக் கொண்டிருக்கும்
(முனிவர்கள், விருப்பு வெறுப்பு நீங்கினவர்களாதலால் 'களிகொளாத்தவர்' என்றார்.) (100)

சூழித் தந்திகள் பூண்பன ; இவுளி தூண்டுவன ;
பாழிக் கோளரி ஈர்ப்பன; பறவை ஓட்டுவன ;
ஊழிப் பூதங்கள் ஊர்வன ; உருத்திர கணத்தோர்
ஆழித் தேர்களும் விமானமும் துவன்றிய அனந்தம்

(பொழிப்புரை) : முகபடாம் அணிந்துள்ள யானைகள் பூட்டப்பட்டவைகளும், குதிரைகளைச் செலுத்தப்பட்டவைகளும், வலிமை பொருந்திய சிங்கங்களால் இழுக்கப்படுகின்றவைகளும், பறவைகளால் ஓட்டப்படுகின்றவைகளுமாய், ஊழிகாலங் கண்ட பூதங்கள் ஏறிக்கொண்டு செல்லும்படியாகிய சக்கரத் தேர்களும், உருத்திரர்கூட்டங்களின் விமானங்களும் அங்கே எண்ணற்றனவாய் நெருங்கியிருக்கும்.
(வட்டவடிவமாகச் செய்யப்பட்ட தேர்களுக்கு 'ஆழித்தேர்' என்றுபேர்.) (101)

பவள மேனியர் மரகத ஆகத்தர் பனிவெண்
தவள ஆரத்தின் உருவத்தர் ; தமனிய நிறத்தர் ;
திவளும் நீலத்தின் மெய்யராம் சிவகணம் திளைப்பத்
துவளும் பேரொளி இணைய பேரொளி எனத் தொலையா.

பொழிப்புரை: பவளநிறமான மேனியுள்ளவர்களும், மரகதநிறமான உடலுள்ளவர்களும், முத்து கள்போல் வெண்மைநிறமான தேகமுள்ளவர்களும், பொன்னிறமுள்ள யாக்கையுடையவர்களும், விளங்குகின்ற நீலமணி நிறமான உடம்புள்ளவர்களுமாகிய சிவகணங்கள் இருப்பதனுல்

மேற்கூறிய மேனிகளில் இருந்து வீசுகின்ற ஒளிகளெல்லாம் ஒன்றுபடக் கலந்து, இன்ன ஒளி யென்று ஓர் ஒளியை நிதானித்துச் சொல்லும்படி பிரிந்து காட்டமாட்டா. (1 2)

பாசம் நான்கெனக் கிளக்குநர்; பசுக்களைப் பலவாய்ப்
பேசல் ஆற்றுநர்; பதியது ஒன்றென்குநர்; பெரிதும்
காசில் மாதவர் குழீஇக்குழீஇ அவரவர் கழற்றும்
பூசல் ஆர்ப்பலது இல்லை, அக் கயிலையம் பொருப்பே.

பொழிப்புரை: பாசம் நான்குவகையென்று சொல்லுகிறவர்களும், உயிர்கள் எண்ணற்றவை என்று சொல்லுகின்றவர்களும், சிவம் ஒன்றே என்று சொல்லுகின்றவர்களுமாய்க் குற்றமில்லாத மாதவர்கள் கூட்டங் கூட்டமாகக் கூடியிருந்து, அவரவர்கள் செல்லுகின்ற ஓசையாகிய ஆரவாரமே அல்லது, வேறு எந்த ஓசையும் அந்தக கயிலை மலையினிடத்தில் இல்லை. (103)

பொன்னிற் பன்மணிக் கணங்களிற் குயின்றன புயல்வாய்
மின்னிற்செல்வன, மதியம் ஒத்திமைப்பன, வெயிலோன்
தன்னிற் காய்வன, மாடபந்தியும் சதகோடி;
முன்னிற் சாலையும் மண்டபக் குழாங்களும் முழுதே.

பொழிப்புரை: பொன்னினாலும், பலவகையான இரத்தினத் தொகுதிகளாலும் செய்யப்பட்ட வைகளாய் மேகத்தினிடத்தில் விளங்கும் மின்னலைப்போலப் பிரகாசிக்கின்றவைகளும், சந்திரனை ஒத்துப்பிரகாசிக்கின்றவைகளும், சூரியனைப்போற் பிரகாசிக்கின்றவைகளும் ஆகிய மாடவரிசை களும், அநந்தங்கோடிகளாம்; இன்னமும் கருதுமிடத்தில் இவ்வண்ணமான சாலைகளும், மண்டபக் கூட்டங்களும் அந்தக் கயிலாயமலை முழுவதும் நிறைந்து விளங்கும்.

('பொன்னினும் மணிகளினும் குயின்றன' எனப் பொதுப்படக் கூறி, மின்னல் சந்திரன் சூரியன் இவைகளைப்போலப் பிரகாசிக்குமென்று பகுத்தமையால், சில மாடம் முத்துகளாலும், சிலமாடம் வயிரங்களிலும், சிலமாடம் மாணிக்கங்களிலும் செய்யப்பட்டிருக்கின்றன எனக் கண்டுகொள்க.) (104)

இனைய தன்மைஅக் கயிலைவான் சிகரம் என்பவற்றுள்,
புனையும் நாப்பண்ஓர் குவட்டொரு பொதியில்உண்டு; அதன்கண்
வனையும் சித்திரக் கற்பக மாணிக்க விளக்கின்
வினையின் மண்டபம் ஒன்று; அது மேருவிற் பெரிதே.

பொழிப்புரை: இத்தன்மையினையுடைய அந்தக் கயிலாய மலையின் பெரிய சிகரங்கள் என்று சொல்லப்பட்டவைகளுக்குள், நடுவில் அழகும் சிறப்பும் மிக்க ஒரு சிகரமுண்டு. அந்தச் சிகரத்தி னிடத்தில் ஒரு அம்பலமும் உண்டு. அதனிடத்திற் சித்திரங்கள் தீட்டப்பட்டதாய்க் கற்பக மாணிக்கத் தீபம்போற் கைத்தொழில் செய்ததல்லாத ஒரு மண்டபமும் உண்டு. அம்மண்டபம் மாமேருமலையையும்விட, மிகவும் பெரிதானது.

(கற்பகமாணிக்கமாவது, கற்பகமரம் தந்த மாணிக்கம். 'பொதுவில்' என்று சொல்லத் தக்கது 'பொதியில்' எனத் திரிந்தது. பொது+இல் என்பது யாவருக்கும் பொதுவான இடம் எனப் பொருள்படும்.) (105)

தூயவெண் மதிக் கடவுள்மேற் சொரிகதிர்க் கடவுள்
மேய தன்மையிற் படுத்த வெண்பளிக்கு வேதிகைவாய்
ஆயிரப்பல யோசனை அனைத்திருள் அகலச்
சேய பொற்சுடர் விடுத்த சிங்காதனத் திடையே.

பொழிப்புரை: தூய்மையும் வெண்மைநிறமுமுள்ள சந்திரன்மேற் கதிர்களை வீசுகின்ற சூரியனுனவன் பொருந்திய தன்மைபோல், வெண்பளிங்கினுற் செய்யப்பட்டிருக்கிற வேதிகையினிடத்துப், பல்லாயிர யோசனைதூரம் இருளெல்லாம் நீங்கும்படி, செம்பொற்சுடரை வீசுகின்ற ஓர் அழகிய சிறந்த சிங்காதனமுண்டு அதனிடத்தில். (106)

துப்பு மால்வரைக் குடுமியிற் சுரநதி பரந்தாங்கு
ஒப்பி லாமதிக் குறைதவழ்ந்து உறைந்தமை ஒப்ப,
அப்பில் ஆயிர முகக்கங்கை அலைக்குலத் தோடும்,
வெப்பில் வான்பிறை வார்சடைக்கு இடைநின்று விளங்க

பொழிப்புரை: பெரியபவளமலையின் உச்சியில், கங்காநதி பரந்து, அவ்விடத்தில் தனக்கு உவமையில்லாத இளந் திங்களுந் தவழ்ந்து கொண்டிருப்பது போல. அலைக் கூட்டத்துடன் நீருருவமான ஆயிரம் முகங்கள் கொண்ட கங்கையும், வெப்பமில்லாத சிறப்புள்ள பிறையும், நீண்ட சடைமுடியிலிருந்து விளங்கவும். (107)

நுதற்கண் நீற்றிள நிலவெழ, முகத்திரு நோக்கம்
முதற்கண் ஓரிரு சுடர்விடச், சுடரை மூது உரகம்
புதைப்ப ஆயிர வாய்விண்டு, புனிதன் ஆணையினுல்
பதைக்கு மாறுஅஞ்சிப் பழம்படி குழைகளாய்ப் படிய,

பொழிப்புரை: சிவபெருமானின் நெற்றியினிடத்து அணிந்திருக்கும் திருநீற்றின் இளநிலாப் பிரகாசிக்க, உடனே அந்தப் பெருமானுடைய திருமுக மண்டலத்தில் விளங்கிக் கொண்டிருக்கும் சூரிய சந்திரர்களாகிய இரண்டு கண்களும் அந்தத் திருநீற்றின் ஒளியானது தங்குதற்கு முன்னுக இருவகைச் சுடரைவிடவே, பழமையான நாகங் கண்டு தன்னுயிரம் படங்களையும் விரித்து மறைத்து, அந்தச் சுடர்கள் வருந்துகின்ற முறைமையைக் கண்டு அஞ்சிச், சிவபெருமானின் ஆணையினுல் பழையபடி காதணிகளாய்ப் பொருந்தவும்,

(சிவபெருமானின் திருச்செவிகளில் குழைகளாயிருக்கும் நாகங்கள், இரு சுடரையும் மறைத்துச் சுவாமியினுடைய ஆணைக்குப் பயந்து பழையபடி குழைகளாயிருக்கும் என்பது தாற்பரியம். உரகம் - பாம்பு). (108)

தோல் உடைகண்டு புலிஎனத் துள்ளும்மான் மறியும்,
மால் அடுத்த தத்துவவனம் துமிக்கும் மாமழுவும்,
சால முத்தியின் வரதமும் அபயமும் தரித்த
நாலு கைத்தல நாககங் கணத்தொகை நகைப்ப

பொழிப்புரை: சிவபெருமான் அணிந்திருக்கிற தோலாடையைக் கண்டு புலியென்று கருதிப் பயந்து துள்ளுகின்ற மான்கன்றும், அடியார்களுடைய மயக்கத்தைப் பொருந்திய தத்துவமாகிய காட்டினைச் சேதிக்கும் படியாகிய பெரிய மழுப்படையும், மிகவும் முத்தியைத் தருகின்ற வரதமும் அபயமும், தரித்துள்ள நாலு திருக்கரங்களிலும் அரவுகளாகிய கங்கணத் தொகுதிவிளங்கவும்,

(ஒரு இடக்கரத்தில் மான், ஒரு வலக்கரத்தில் மழு, மற்றொரு வலக்கரம் அபயம், மற்றொரு இடக்கரம் வரதம் எனச் சிவபெருமானின் நான்கு திருக்கைகளும் விளங்கும்). (109)

வேத உச்சியிற் பொலிந்தனம், விண்டுவிற் பெரியம்,
ஏதம் அற்றனம் என்று,தாட் சிலம்பெழுந்து இயம்பச்,
சீத ளக்குளிர் அந்தியைப் பொதுநிலாச் சிறப்பென்று
ஓத, விந்துரு மத்திரு மேனிநின் றெளிர

பொழிப்புரை : சாமவேத உச்சியில்விளங்கிக் கொண்டிருக்கின்றனம், ஆதலால் மகாவிட்டு ணுவைப் பார்க்கிலும் பெரியோம், அன்றியும் குற்றங்களை நீங்கியிருக்கின்றோம் என்று சொல்லுவது போல், திருவடிச் சிலம்புகள் எழுந்து பெரிதும் ஒலிக்கவும், மிகுந்த குளிர்ச்சி பொருந்திய அந்திப் பொழுதில் செக்கர் வானத்தை மூடிய நிலவின் சிறப்பென்று சொல்லும்படி, திருநீறு அணிந்த பவளத திருமேனி பிரகாசிக்கவும். (வித்துருமம் — பவளம்). (110)

கமை அலா இடைப் பட்டுடை, காஞ்சிவெங் கதிர்ப்பூண்,
சிமைய வார்முலைத் திலகவாண் முகச்செறி அளகச்,
சமையம் யாவையும் வளர்த்துஅறம் வளர்த்தபைந் தளிர்க்கை,
இமைய மாமகள் உமை, அகம் மகிழ்ந்துஅரு கிருப்ப

பொழிப்புரை : பொறை தாங்குந் தன்மையினையுடையதல்லாத இடையினிடத்துப் பட்டுடையும்' மேகலாபரணமும், வெய்யிலொளி விடுகின்ற இரத்திநாபரணமும் அணிந்து, மலைச் சிகரம் போன்று கச்சணிந்த திருத்தனபாரமும், திலதப் பொட்டணிந்த திருமுக மண்டலமும், நெருங்கிய அளகபாரமும், அறுசமயங்களையும் வளர்த்து, முப்பத்திரண்டு தருமங்களையும் தழைத்தோங்கச் செய்த, பசிய தளிர்போன்ற திருக்கரங்களையும் உடைய மலையரசனின் மகளாகிய பார்வதி தேவியார் திருவுள்ளம் மகிழ்ந்து இடப்பாகத்தில் வீற்றிருக்கவும்.
(காஞ்சி என்றது, ஈண்டு எண்கோவை மணியாகிய மேகலையினை) (111)

சித்தர் விஞ்சையர் கருடர்காந் தருவர்நற் றேவர்
பத்தர் மாதவர் புரந்தரர் ஏனையோர் பணிந்தாங்கு
அத்த சங்கர அரகர போற்றி என்று, அவைக்கண்
உய்த்த பன்மலர் மாரி, கண் மாரியொடு ஒழுக்க

(பொழிப்புரை) : சித்தர்களும் வித்தியாதரர்களும் கருடர்களும் கந்தருவர்களும் தேவர்களும் பக்தர்களும் முனிவர்களும் தேவேந்திரர்களும் பிரமவிட்டுணுக்களாகிய தொகுதிகளும், உருத்திரர் களும் பணிந்து, அத்தாபோற்றி சங்கரா போற்றி அரகர போற்றி என்று துதித்துத் திருமுன்னிலையிற் பொழிகின்ற பலவாகிய பூமழையானது, அவர்களுடைய கண்ணீர் மழையோடு பெருகவும். (112)

வாணி நாரதன் தும்புரு முதல்,வரர் சித்தர்
பாணி யாழ்வழி வழிந்ததேன் திருச்செவி பருகச்
சேணின் மேனகை அரம்பையர் திலோத்தமை முதலாம்
பூணின் மாமுலை அரமடந் தையர்நடம் புரிய

பொழிப்புரை : சரசுவதி தும்புரு நாரதர் முதலான பெரியோர்களுடைய கைகளில் உள்ள வீணை களின் வழியாகப் பெருகுகின்ற இசைத்தேனைத் திருச்செவிகள் பருகவும், சுவர்க்கத்தில் இருக்கும் மேனகை அரம்பை திலோத்தமை ஊர்வசி முதலாகிய, அணிகலன்கள் பூண்ட பெரிய கொங்கை களுள்ள தேவமகளிர் நடனஞ் செய்யவும்.

("திலோத்தமைமுதலாம் அரமடந்தையர்" என்றதனால் ஊர்வசியையும் கூட்டியுரைத்துக் கொள்க. மேனகை, அரம்பை, திலோத்தமை, ஊர்வசி என்னும் இந்த நான்கு பிரிவில், ஒவ்வொரு பிரிவுக்கும் அளவிலர் மகளிர் உளர் என்பது தோன்ற "அரம்பையர்" எனப் பலர் பாலாற் கூறினர். (113)

முழாவும் தக்கையும் மொந்தையும் படகமும் முருடும்
எழாலும் பாண்டிலும் சங்கமும் வங்கியம் யாவும்
விழாவும் மன்றலும் அணையஅத் தாணிமீது இயவர்
குழாமும் கூட்டமும் கடல்உடைந் தனஎனக் குமுற

பொழிப்புரை: மத்தளம் பம்பை குடமுழா தம்பட்டம் முருடு வீணை தாளம் சங்கம் வேய்ங்குழல் என்னும் இவ் வாத்தியங்கள், திருவிழாவையும் திருமணக் கோலத்தையும் போல ஒலிக்கும்படியாகிய திருவோலக்க மண்டபத்தினிடத்தில், தோற்கருவியர் கூட்டமும், மற்றைய வாச்சியக்காரர் கூட்டமும், கடல் மடையுடைந்தன போல் முழங்கவும். (114)

கடையின் நோக்கமும் திருமுடித் துளக்கமும் கருத்தும்
மடையும் மாற்றமும் செயற்கைஇவ் வகையினும் அமைத்து,
நடைய காரண காரிய நாதர் யாவருக்கும்
உடைய நாயகன் தான்என இருந்தனன் உடையான்

பொழிப்புரை: திருக்கடைக்கண்ணோக்கமும், திருமுடியசைவும், திருவுள்ளமும், பொருந்துகின்ற திருவாக்குமாகிய செய்கையை, இவ்வகையிலும் அமைத்து ஒழுக்கமுள்ள காரண காரியத் தலைவர்கள் யாவர்க்கும் தலைமைப்பாடு உடைய நாயகன் தானேயாகச் சிவபெருமான் வீற்றிருந்தருளினன்.

(21-வது செய்யுள் "சிங்காதனத்திடை" என நின்று, அடுத்த செய்யுட்கள் விளங்க-யடிய-நகைப்ப-ஒளிர-அருகிருப்ப-ஒழுக்க-நடம்புரிய-குமுற-என எச்சங்களாய் நின்று, "வீற்றிருந்தன" என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்தமையால், இச் செய்யுட்கள் குளகச் செய்யுட்கள் என்பர். இதனைக் "குளகம் பலபாட்டுஒருவினை கொள்ளும்" என்னும் தண்டியலங்காரத்தினலும் உணர்க.

சரசுவதி தும்புரு நாரதர் என்னும் இவர்கள் இசைக்குக் காரணர்கள் என்றும், மற்றையோர் காரியர்கள் என்றும் உணர்ந்து கொள்க. இறைவனின் திருமுன்னிலையில் நாரதர் முதலானவர்கள் ஒரே சமயத்தில் இசை வாசிக்கும் போது சிவபெருமான் தனித்தனியே திருநோக்கம் முதலானவை அருளிச் செய்யும் முறைமையினல், "யாவருக்கும் உடைய நாயகன் தான் என இருந்தனன்" என்றார். (115)

(கயிலாயச் சருக்கம் முற்றியது.)

காரூடச் சருக்கம்

அறம் கிளத்திய பிரான் அவையைக் கைதொழ,
உறங்கும் அக்கடல் விடுத்து, ஊர்ந்த புள்ளினும்
இறங்கி, அப்புள்ளினத்து இறையை மாயவன்
புறங்கடை நிறீஇனன், விரைந்து உட்போயினன்

பொழிப்புரை: தரும நெறியை வேதாகமங்களால் உரைத்தருளிய சிவபெருமான், திருவோலக்கங் கொண்டிருக்கும் திரு முன்னிலையைக் கை தொழும்படி, திருமால் தான் பள்ளி கொண்டிருந்த திருப்பாற்கடலை விட்டு நீங்கிச் சென்று, தான் ஏறிக் கொண்டு வந்த கருடனை விட்டுக் கயிலாயச் சாரலில் இறங்கி மேலேபோய்ப், பறவைகளுக்கு அரசாகிய அந்தக் கருடனை முதற்கோபுர வாயிலின் புறத்தில் நிறுத்திவிட்டு, விரைவுடன் உள்ளே சென்றனர். (116)

தொழுதகை உச்சியன், துதித்த நாவினன்,
அழுத கண்ணீரினன், அவச யாக்கையன்,
விழுதொறும் கதைஎன வீழ்ந்து, மெய்குழைந்து
எழுதொறும் அரகர எனும்ஓர் ஆர்ப்பினன்

பொழிப்புரை: தொழுத கைகளை உச்சியிலே உடையவனும், தோத்திரஞ் செய்யும் நாவினை உடையவனும், ஆனந்தத்தினல் அழுகின்ற கண்ணீரை உடையவனும், பரவசமான சரீரத்தை உடையவனும், வீழ்ந்து பணியுந்தோறும் தண்டாயுதம்போல விழுந்து, சரீரமானது மெலிந்து, எழுந்தோறும் அரகர என்கிற ஓர் ஆரவாரத்தை உடையவனுமாய், (117)

ஏத்தினன்; ஏத்திநின்ற, "இறைவ! யாவையும்
பூத்தலும், புரத்தலும், புரந்து போக்கலும்,
வாய்த்தநின் திருவருள் வலிகொண்டு அன்றியே,
தீத்தொழில் ஏழையேம் செய்யற் பாலமோ?"

பொழிப்புரை; இவ்வாறு துதிசெய்து நின்று, "இறைவனே! எல்லா உலகங்களையும் ஆக்குவித்தலும் பாதுகாத்தலும் அவ்வாறு பாதுகாத்துக் காலமுடிவில் அழித்தலுமாகிய முத்தொழிலையும் பொருந்திய தேவரீருடைய திருவருளின் வல்லபத்தினுல் அன்றித் தீவினையையுடைய எளியேங்கள் செய்யும் பகுதியை உடையோமோ" என்று (118)

என்றுஅகம் உருகிய இணர்த் துழாயனைக்
குன்றவில் வீரனும், குழைந்த சிந்தையால்
தன்திருக் கடைக்கணுல் தழுவி, ஆங்கவன்
வன்தொழிற் குறைநிறை வினுவி வைகலும்

பொழிப்புரை: இவ்வாறு சொல்லி மனமுருகிய, கொத்தாகிய துளசிமாலையை அணிந்த திருமாலை நோக்கி, மகாமேருவாகிய வில்லை உடைய சிவபெருமான், அருள் கூர்ந்த திருவுள்ளத்துடனே அருள்நோக்கத்தினுல் அளவளாவி, அந்தத் திருமாலினுடைய பாதுகாக்குந் தொழிலின் குறை நிறைவை வினுவிக் கொண்டிருக்கவும். (119)

மால்விடை நிற்கின்ற வாயில்வாய் நின்ற
சால்புடைக் கலுழனும், விடையைத் தாழ்கிலன்,
மேலுடைத் தலைமையும் விறலும் ஏற்பவர்
போல்உடைத் தாயினன் அகந்தைப் புந்தியே

பொழிப்புரை: பெரிய விடைத்தேவர் இருக்கின்ற வாயிலினிடத்தில் நின்ற மேன்மை பொருந்திய கருடனும், அந்த விடைத் தேவரை வணங்காதவனுய், மேலாகவுடைய முதன்மைத் தன்மையும் வெற்றியும் தங்களுக்குள் தாங்களே ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள் போல், தன்புத்தியில் அகந்தைப் புந்தியை உடையவனுயினுன். (120)

நின்றஅக் கலுழனை. நிமலன் வாகனன்
வென்றியின் நந்தி தீவிழித்து நோக்கலும்,
சென்றிரந்து உண்பவன் ஊர்தீ! தீவிழித்து
இன்றுஎவன் செய்தி? என்று இவன் சொற்ருன் அரோ!

பொழிப்புரை: இவ்வாறு நிற்கின்ற கருடனைச் சிவபிரானுடைய வாகனக் கடவுளாகிய வென்றியுள்ள நந்திதேவர், கண்களில் தீப்பொறி உண்டாகும்படி விழித்து நோக்கின அளவில், அந்தக் கருடனுனவன் விடைத்தேவரை நோக்கி 'எங்குஞ் சென்றிரந்து உண்பவனுடைய வாகனமாகிய நீ கோபித்து, என்னை என்ன செய்குவை?' என்று சொன்னுன். (121)

இவன் நமைத் தாழ்கிலன் என்னும் புன்மையும்,
கவனவெங் கலுழன்மேற் கருது கிற்றிலன்;
தவநெறி நந்திக்குத், தகுதி ஒன்றிலான்
சிவனை நிந்தத்ததீச், செவியிற் புக்கதே!

பொழிப்புரை: 'இவன் நம்மை வணங்கிலன்' என்னும் குற்றத்தை, வேகமாய்ச் செல்லுகின்ற கருடனிடத்தில் நினைக்கின்றிலர், தகுதி என்பது சிறிதுமில்லாத அந்தக் கருடன் சிவபெருமானை நிந்தித்த சொல்லாகிய தீயானது, தவநெறியுள்ள நந்தி தேவருடைய திருச்செவிகளிற் சென்றது. (122)

செவிவழிச் சிந்தை என்னும் தீக்கொழுந்து
அவிதராது, அகத்திழிந்து அழன்று மீதெழக்,
குவிநுதற் கோடுஅசைத்து, இமிலும் கொட்புற,
நவி எடுத்தான் அடும்நாள் ஒத்தான் அரோ!

பொழிப்புரை: தம்முடைய காதுகளின் வழியாகச், சிவநிந்தை என்னும் தீக்கொழுந்தானது அவியாமல், உள்ளத்தில் இழிந்து கொதித்து எழவே, குவிந்த நெற்றிக் கொம்புகளை அசைத்து, முசுப்பு துடிக்கும்படி, நந்திதேவர் மானை ஏந்திய சிவபெருமான் சர்வசங்கார காலத்தில் மேற்கொள்ளும் உருத்திர மூர்த்தியின் வடிவத்தை ஒத்தவரானார். (123)

(நவ்வி எனற் பாலது—நவி என இடைக் குறைந்துநின்றது. நவ்வி—மான்)

அதிர்ந்தன புவனங்கள், அகில கோடிகள்;
பிதிர்ந்தன கதிர்களும் பின்னிட்டு ஓடின;
எதிர்ந்தன இருட்பிழம்பு; இறுதி இன்றுஎன
முதிர்ந்தன திசைதொறும் மூண்ட தீக்களே!

(பொழிப்புரை): புவனங்களெல்லாம் அழிந்தன, அண்டகோடிகள் எல்லாம் வெடித்துத் துகளாயின. சந்திரசூரியர்களும் பின்னிட்டு ஓடினார்கள். எங்கும் இருட்கூட்டஞ் சூழ்ந்தன. திக்குகள் எங்கும் மூண்ட தீக்கூட்டம், ஊழிக்காலம் இன்றே என்னும்படி அதிகரித்தன. (124)

மயர்த்துஅறம் மறுகினர் முனிவர் வானவர்;
வெயர்த்தனர், என் இனி விளையுங் கொல்? எனு
அயிர்த்தனர்; உவணனை அறுப்பன் இன்றுஎன
உயிர்ப்பு எறிந்தனன் எம்மை யுடைய நந்தியே

(பொழிப்புரை): முனிவர்கள் தவநெறியை மயங்கிக் கலங்கினார்கள். தேவர்கள் இனி என்ன விளையுமோ என்று சந்தேகித்தவர்களாய், அச்சத்தினால் வியர்த்தார்கள். நம்மை அடிமையாக வுடைய நந்திதேவரானவர், இந்தக் கருடனைக் கொல்லுகிறேன் என்று சிறிது மூச்சு விட்டனர். (125)

வீங்கிய உயிர்ப்புஎனும் வெய்ய, காற்றுடன்.
நீங்கி நூறுயோசனை நெடிது போய்ப்புகும்;
வாங்கிய உயிர்ப்புடன் மறித்தும் நாசியின்
ஓங்கிய புழைப்புகும், உவணன் என்பவே

(பொழிப்புரை): இவ்வாறு உண்டாகிய மூச்சு என்னும் வெப்பம் மிக்க காற்றுடன், கருடனானவன் நின்ற நிலையை விட்டு நீங்கி, நூறு யோசனை தூரம் பூமியில் உருண்டு போவன். மறுபடி உள்ளுக்கு ஈர்த்த மூச்சுடன் நந்திதேவருடைய பெரிய மூக்கின் துளையிற் புகுவன் என்பார்கள் பெரியோர்கள். (126)

முன்னரும் நிந்தையின் மூட்டும் அலால்,
பின்னரும் போம்தொறும், பெயர்ந்து சேர்தொறும்,
அன்னதோர் நந்திதன் அழலை மூட்டிடும்;
மின்நவிர் விசனம் புள்வேந்தன் ஆயினான்

பொழிப்புரை: முன்னமும் கருடன் சிவநிந்தையினால் கோபாக்கினியை மூட்டியது மட்டுமேயன்றிப் பின்பும் அவருடைய சுவாசத்தில் அகப்பட்டுக்கொண்டு நூறு யோசனை தூரம் போகுந்தோறும், மறுபடி வருந்தோறும் அந்த நந்தி தேவருடைய கோபாக்கினியை மூட்டுவன். இதனால் அந்தக் கருடன், விளங்கும் வாள் போன்ற விசனம்உடையவனாயினன்,

(இவ்வாறு கருடன் உருண்டும் அகந்தை நீங்காமையால், நந்திதேவருடைய கோபாக் கினியை மூட்டினன் எனக் கொள்க. விசனமானது மனத்தை அறுப்பதனுல் "நவிர் விசனம்" என்ருர். நவிர்—வாள்.) (127)

வாழிய நந்திதன் உயிர்ப்பு மாருதம்
ஊழி மாருதம் பட்டது; உலகம் உண்டதோர்
ஆழியன் ஊர்தியும், அதன் இடைப் பட்ட
பூழியும் சருகுமாய்ப் புன்மைப் பட்டதே!

பொழிப்புரை: வாழ்வுள்ள நந்திதேவருடைய சுவாசமாகிய மூச்சுக்காற்ருனது, ஊழிக் காலத்துப் பிரசண்டமாருதத்தை ஒத்தது. உலகம் உண்டவனும், சக்கரப்படையை யுடையவனும் ஆகிய திருமாலினுடைய வாகனமோ எனில், அந்தப் பிரசண்ட மாருதத்தில் அகப்பட்டுக் கொண்ட புழுதியும் சருகும் போலாய்ப் புன்மையடைந்தது. (128)

மண்டலம் அனைத்தும்தன் வயிற்றுற் ருனை,மேற்
கொண்டவன் இத்தனை வருத்தம் கொண்டனன்;
அண்டர் நாயகன் நிந்தை அண்டர்க்கு ஆயினும்
விண்ட தீங் குடைமையை விளைத்தல் பொய்ம்மையோ?

பொழிப்புரை: இவ்வுலகத்தை எல்லாம் தன் வயிற்றுக்குள் வைத்திருக்கும் திருமாலைத் தன்மேல் தாங்குங் கருடனே, இவ்வளவு வருத்தங்கொள்ளுவானுனல், சிவநிந்தையானது தேவர்களுக் கேயானுலும், சொல்லப்பட்ட தீமையினை உண்டாக்குதல் பொய்யாகுமா? (129)

நன்மையர் தீங்கரை நலிவர்; நன்றிலா
வன்மையர் தீங்கிலார் தமையும் வருத்துவார்;
தொன்மையின் நந்தியால் தொலைக்கும் புட்பிரான்
பொன்மயச் சிறகின் கால்,புவி அலைத்ததே

(பொழிப்புரை): நன்மையினை உடையவர்கள் கொடியோர்களை வருத்துவார்கள்; நற்குண மில்லாத வன்நெஞ்சர் யாதொரு குற்றமுஞ் செய்யாதவர்களையும் வருத்துவார்கள்; அம்முறைமை போல் பழமையான நந்திதேவரால் வலி தொலைக்கப்பட்ட, கருடனுடைய பொன்மயமான சிறகின் காற்ருனது, இவ்வுலகத்தை வருத்திற்று. (கால்—காற்று.) (130)

அயனுடை ஊர்தியாம் அன்னம் ஆதிய
பயனுடை உம்பரைப் பரிக்கும் புள்எலாம்,
நயனுடை முகம்முகம் நோக்கி, நாவெரீஇ
வியனுடை ஒன்றெடொன் றெடுங்கி வேர்த்தவே

(பொழிப்புரை): பிரமதேவனுடைய வாகனமாகிய அன்னப் பறவை முதலாகிய, சுவர்க்கபதம் பெற்றிருக்கும் தேவர்களைத் தாங்கும் பறவைகளெல்லாம், நன்மை பொருந்திய தங்கள் தங்கள் முகங்களை ஒன்றுக்கொன்று நோக்கிப், பேசப் பயந்தன; பெருமையுள்ள அப்பறவைகள் ஒன்ருேடான்று ஒடுங்கி வேர்த்தன. (131)

நூறு யோசனை எல்லை நூக்க நூக்குண்டு
பாறலாற் சினக்கனல் படாமை உய்ந்தது;
மாறு போந்து அணுகிய வண்ணமே நின்ருல்,
ஏறு காய்தலும், அரி இழக்கும் ஊர்தியே

(பொழிப்புரை) : கருடன், நந்திதேவரின் சுவாசம் நூறு யோசனை தூரம் தள்ளிக் கொண்டு போக உருண்டோடுதலால், அந்த நந்திதேவர் கோபாக்கினி தன்மேற்படாமல் பிழைத்தனன். அவ்வாருக மறுபடி மீளும் சுவாசத்துடன் வந்து நாசிக்குட்புகுந்தபடியே இருந்தால், நந்திதேவரானவர் கோபஞ் செய்த அளவில், திருமால் ஆனவர் தம் வாகனத்தை இழந்திருப்பர். (132)

வள்ளிய நந்தியால் வயின தேயனும்
ஒள்ளிய அமரர்முன் உறுகண் எய்தலால்,
தெள்ளிய பொற்குன்றம் அனைய செந்நிறம்
வெள்ளியங் குன்றென வெளுப்ப வெள்கினன்

பொழிப்புரை : அடியார்க்கு அருள் கொடுக்கும் வள்ளற் றன்மையுடையவராகிய நந்திதேவரால், கருடன் ஒளியுள்ள தேவர்களுக்குமுன் துன்பம் அடைந்ததனுல், பிரகாசமுள்ள பொன்மலையை யொத்ததாகிய தன்னுடைய செம்மை நிறமானது, வெள்ளிமலைபோல் வெளுக்கும்படி வெட்கமடைந்தான். (133)

ஆன்விடும் உயிர்ப்பினேடு அங்கும் இங்குமாய்
வான்விடு சிறையற மலைப்புண்டு ஆற்றலன்;
ஊன்விடும் இனிக்கணத்து என்பது உட்கொளாக்
கான்விடு துழாயனைக் கருதி ஓலிட்டான்

பொழிப்புரை : நந்திதேவர் விடுகின்ற சுவாசத்துடன், கருடனுனவன் அங்கும் இங்குமாய் ஆகாயத்திற் பறக்கத்தக்கதாகிய சிறையானது ஒடியும்படி, அலைச்சல் பட்டுச் சகிக்காதவனுய், இனி கணப் பொழுதுக்குள் தனக்குத் தேகம் விட்டுப்போம் என்பதை உட்கொண்டு, வாசனை வீசுந் துளசிமாலை அணிந்த திருமாலைத் தியானித்து முறையிட்டான். (134)

(வேறு)

மெய்யா! இதழ்கால் கைவிழித் துணையிற்
செய்யா! திருவின் திரு நாயகமே!
உய்யா என்ஒலிக் குரல் கேட்டிலையோ?
ஐயா! என் அலக்கண் அறிந்திலையோ?

பொழிப்புரை : உண்மையானவனே, அதரமும் இரண்டு திருவடிகளும் இரண்டு திருக்கரங்களும் இரண்டு திருக்கண்களுஞ் செம்மை நிறமானவனே, மகா லட்சுமியினுடைய சிறப்புள்ள நாயகனே, இறந்துபோகத் தக்கவனுய் முறையிடுகின்ற என்குரலோசை உனக்குக் கேட்கவில்லையோ? இதுவுமன்றி ஐயனே, என்னுடைய துன்பத்தை அறிந்திலையோ? (135)

நாவால், அறியாமை யினல், நனி இக்
கோ வாதை செயக் குலையா அலைகோ?
ஆவா! உன் அடைக்கலமால்! அடியேற்
காவாய்! புவி காத்த கருங்கடலே!

பொழிப்புரை : அறியாமை ஏதுவாக, என் நாவினுல் இந்த நந்தி மிகுந்த கோபஞ் செய்ய, நிலை குலைந்து அலைவேனே? ஐயையோ, அடியேன் உன்னடைக்கலம்; இவ்வுலகத்தைக் காக்கும் கருங்கடல் வண்ணனே, இப்போது வந்து என்னைக் காத்தருள்வாயாக. (136)

பெரியோய் முறையோ! பெருமான் முறையோ!
அரியே முறையோ! அரசே முறையோ!
விரி ஓடையின் முன்பு விளித்த மத
கரியோடும் ஓவாது கழிந்து அழிகோ?

பொழிப்புரை: பெரியோனே முறையோ, பெருமானே முறையோ, ஓ அரியே முறையோ, இறைவனே முறையோ, பரந்த ஓடையிலிருந்து கொண்டு முற்காலத்திற் கூவிய மதயானைக்கு ஒவ்வாதவனுய்க் கழிந்து வருந்துவேனே? (137)

மழைக்குன்று அனையாய்! வருவாய் இனிஎன்று
அழைக்கின்ற தோர்புட்குரல் ஆங்கு எழலும்,
முழைக்குன்ற விலான்முன் முகுந்தன் அறிந்து
இழைக்கின் றவன் அச்சோடு எழுந்து சொல்வான்

பொழிப்புரை: மேகங்களாற் சூழப்பட்ட நீலமலை போன்ற கடவுளே, இப்போது வந்து அருள் செய்க என்று முறையிடுகிற கருடனுடைய குரலோசையானது, அங்குக் கேட்டவளவில், குகைகள் பொருந்திய மகாமேருவாகிய வில்லையுடைய சிவபெருமான் சந்நிதியிலிருந்த திருமாலானவர், கருடனுடைய வருத்தத்தை அறிந்து துணை செய்கின்றவர், பயத்துடன் எழுந்து சொல்லுகின்றுர். (138)

வெள்ளேறு வெகுண்ட வெகுட்சியின் என்
புள்ளேறு புலம்பு கின்றது எனுத்
தள்ளாது விடும் தொழில், சங்கரனிற்
கொள்ளா, அரிவந்து இது கூறினனுல்

பொழிப்புரை: வெண்மை நிறமுள்ள நந்திதேவர் கொண்ட கோபத்தினுல், பறவைகளுக்கு அரசனுகிய கருடன் துன்பப்படுகின்ருன் என்று சொல்லித் தள்ளாமல், அந்தக் கருடனை விட்டு விடும் படியான கட்டளையைச் சிவபெருமானிடத்தில் பெற்றுக்கொண்டு, திருமாலானவர் வந்து இந்தவார்த்தை சொல்லுகிருர். (139)

(வேறு)

நந்தி நாயக! கேட்டி! நவைதரும்
புந்தியாற் கலுழன் செய்த புன்மையைச்
சிந்தி யாது விடுதி; சிவன்சொல்ல
வந்தியான் சொன்னவாறு, இந்தவாறு என்ருன்.

பெழிப்புரை: நந்தி தேவரே, கேட்பீராக. குற்றம் பொருந்திய தன் புத்தியால் கருடன் செய்த பிழையை மனத்தில் எண்ணுமல் விட்டு விடுவீராக. சிவபெருமான் கட்டளையிட்ட படி நான் சொன்ன முறைமை இந்த முறைமை என்ருர். (140)

தேவிக்கு ஓர் பங்கினனைத், தெறுபுலி
நீவித் தேவனை, என்எதிர் நிந்தித்த
பாவிக்கு என்கொல் பரிதி? இப் பாவியை
வீவித்து அன்றி விடேன்எனும் நந்தியே

பொழிப்புரை: பார்வதி தேவியாருக்கு இடப்பாகம் அருளிச் செய்தவரும், கொல்லும் புலித்தோலை ஆடையாக அணிந்த தேவருமாகிய சிவபெருமானை, என் எதிரில் நிந்தை கூறிய இந்தப் பாவியை இறக்கும்படி செய்வித்தல்லது, உயிருடன் விடமாட்டேன் என்று, நந்திதேவர் சொல்லினர். (நீவி என்பது ஆடை.) (141)

மீண்டும் மாயன், கலுழனை விட்டிலன்
பாண்டில் வேந்தன் எனப்பரனைத்தொழ,
ஆண்ட நாயகன் நந்தியை ஆங்கழைத்து
ஈண்டு நீ புள்இறையை விடுக என்ருன்.

பொழிப்புரை : நந்தி தேவர் இவ்வாறு சொல்லவே, திருமாலானவர் அவ்விடம் விட்டுத் திரும்பிச் சென்று, சிவபிரானைப் பணிந்து, நந்தி தேவர் கருடனை விட்டிலர் என்று தொழுது விண்ணப்பஞ் செய்யச், சிவபெருமான் அந்த நந்தியை அழைப்பித்து, இப்போது கருடனை விட்டு விடு என்று கட்டளையிட்டருளினர். (பாண்டில்—எருது.) (142)

சிவந்த பார்வையும் வாயும் செழும்புகை
நிவந்ததீச் சிந்த நிற்கின்ற நந்தியும்,
கவந்த வேணியைக் கால்தொழுது, எம்பிரான்
உவந்துகேள், ஓர்உறுதி சொல்வேன் என்றான்

பொழிப்புரை ; சிவந்த கண்களிலும் வாயினிடத்துஞ் செழுமையுள்ள புகைபரந்த தீயானது சிந்தும்படி நிற்கின்ற நந்திதேவரும், கங்கையை அணிந்த சடையுள்ள சிவபெருமானுடைய திருவடியை வணங்கி, எம்பிரானே அடியேன் சொல்லும் விண்ணப்பத்தை மகிழ்ச்சியுடன் கேட்டருள வேண்டும் என்று சொல்லுகின்றார். (143)

முன்னைத் தேவர் முனிவர் முகுந்தனோடு
என்னைப் போர்செய்து, இடைதடுத்து ஆர்ப்பினும்,
நின்னைச் சங்கர! நிந்தித்த பாதகன்
தன்னைக் கொன்றலது ஒன்றும் தரிக்கிலேன்

பொழிப்புரை : முதன்மையாகிய தேவர்களுடனும், முனிவர்களுடனும், இந்தத் திருமால் வந்து என்னுடன் போர் செய்து இப்போது தடுத்து ஆரவாரித்தாலும், சங்கரனே நின்னை நிந்தித்த இந்தப் பாதகனைக் கொன்றல்லது, சிறிதும் மனஞ் சகிக்கிலேன் என்று விண்ணப்பஞ் செய்தார். (144)

அடுவன் என்கின்ற நந்தியை, ஐயனும்
சுடுநெருப் பன்ன சொல்லிற் சுட்டாரையும்,
கொடு பொறுத்தல் குணம்என்று உணர்கிலை;
விடுக புள்ளை; விடுகஎன்று அருள்செய்தான்

பொழிப்புரை : இந்தக் கருடனைக் கொல்லுகிறேன் என்று சொன்ன, நந்தி தேவரைச் சிவபெருமான் நோக்கிச், சுடுகின்ற நெருப்பை ஒத்த சொல்லினால் சுட்டவர்களையும், ஏற்றுக்கொண்டு பொறுப்பதே நன்மையென்று அறிந்திலையோ? இந்த மட்டில் கருடனை விட்டுவிடு விட்டுவிடு என்று கட்டளையிட்டருளினர். (145

விடுத்தனன் பறவையின் வேந்தை ; உட்பயம்
அடுத்தனன் நந்தியும் ; அமலன் ஏவலைத்
தடுத்த வெவ்விய வினைதனக்கு, என்செய்தும்?என்று
எடுத்த வெந்துயரொடும் இரங்கி எய்தினான்

பொழிப்புரை : சிவபெருமான் இவ்வாறு கட்டளையிட்டருளின வுடன், நந்திதேவர் அந்தக் கருடனை விட்டுவிட்டுப், பயங்கொண்டவராய்ப் பரமசிவம் கட்டளையிட்டு அருளியதை மறுத்துரைத்த கொடிய பாவத்துக்கு என்ன செய்வோம்? என்று மனத்திலுண்டாகிய துயரத்துடன் இரங்கிச் சென்றார். (146)

கட்புலன் மூன்றுளான் கழறும் ஆணையும்,
திட்பமதுடன் நந்தி தடுத்துத் தேம்பினான்;
நட்பறத் தெறுவதும், நவையிற் சேர்ப்பதும்
உட்பெறு சினம்என உரைத்தல் வேண்டுமோ?

பொழிப்புரை : முக்கண்களை உடைய சிவபெருமான் கூறிய கட்டளையினையும், நெஞ்சுறுதியுடன் நந்திதேவர் தடுத்து மனவாட்டமுற்றார். ஆதலால் நட்பை அறக் கெடுப்பதும், குற்றத்திற் சேர்ப்பதும், உள்ளத்திலுண்டாகிய கோபமே என்று எடுத்துச்சொல்ல வேண்டுமோ? (எடுத்துச் சொல்லவேண்டுவதில்லை என்பது குறிப்பு). (147)

நடுங்கினன் அஞ்சினன்; நந்தி நெஞ்சகம்
ஒடுங்கினன்; வினை நினைத்து உயிர்த்து விம்மினன்;
தடங்கம லப்பதம் தாழ்ந்து, போற்றுகை
தொடங்கினன்; அருவியிற் சொரிகண் ணீரினன்

பொழிப்புரை : இவ்வண்ணம் துயரங்கொண்ட நந்திதேவர், நடுங்கிப் பயந்து மனம் ஒடுங்கிப் பாவம் ஏற்பட்டதனை நினைத்துப், பெருமூச்சு விட்டு, விம்மி இரண்டு கண்களிலும் அருவிபோல் நீர்பெருகும்படி நின்று, சிவபெருமானுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளைப் போற்றி செய்யத் தொடங்கினார். (148)

ஆரண பேதமும், மிருதி ஆயவும்
காரண காரியக் கரும கோடியும்,
நாரணன் நான்முகன் ஆதி நாதரும்,
பூரண ! நீ அலாது இயலும் பொற்பதோ?

பொழிப்புரை : வேதபேதங்களும், சுமிருதிகளும், காரணகாரியங்களாகிய கன்மகோடிகளும், திருமால் பிரமன் முதலாகிய தேவர்களும், பூரணனே நீயல்லாமல் நிகழும் பொலிவையுடையனவோ? (149)

அறைந்தனை நான்மறை; அவற்றின் உச்சியில்
உறைந்தனை ; பேரண்டத் துட்புறம்பு எலாம்
நிறைந்தனை ; ஐந்தொழில் நிகழத் தோன்றினை;
மறைந்தனை ; ஐயநின் மாயம்ஆர் சொல்வார்?

பொழிப்புரை : இவ்வாறு சொல்லிய நந்திதேவர், பின்னும் தோத்திரஞ் செய்கின்றார். நான்கு வேதங்களின் உச்சியில் வீற்றிருக்கின்றனை, பெரிய அண்டங்களின் உள்ளும் புறம்புமாக நிறைந் திருக்கின்றனை. ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்றும் ஐந்தொழில்களும் நடப்பதற்குக் காரணமாக விளங்குகின்றனை, யாவருக்கும் தோன்றாமல் மறைந்து இருக்கின்றனை, ஐயனே, நின் மாயத்தை அறிந்து எவர்கள் சொல்லத்தக்கவர்கள் ! (150)

தோற்றமும் நாசமும் தொடங்கி, யாவையும்
மாற்றுவை ; பல்லுயிர்க்கு ஆயும் ஆகுவை ;
போற்றுவை ; அவரவர் புன்மைத் தன்மையை
மாற்றுவை ; எமக்குஒரு செயற்கை மற்றுண்டோ?

பொழிப்புரை: படைத்தலையும் அழித்தலையும் தொடங்கிச் செயல்களை எல்லாஞ் செய்குவை, உயிர்களுக்கெல்லாந் தாயும் ஆகுவை, அவ்வுயிர்களுக்குத் தோன்றாத் துணையாயிருந்து வினைக் கீடாக ஊட்டியுறக்கி உதவி செய்குவை, அவரவர்களுடைய அஞ்ஞானத்தையும் அதனால் வரும் பாவத்தையும் மாற்றுவை, எங்களுக்கென்று ஒரு சுதந்தரமான செய்கை வேறுண்டோ? (151)

ஆதலால் நின்பணி அறிவிலேன் மறுத்து,
ஏதிலார் படும்பவம் ஈண்டு பட்டனன் ;
கோதிலாய்! அவ்வினை அனைத்தும் கூட்டறப்
போதுமாறு அருள்கென இரந்து போற்றினான்.

பொழிப்புரை : ஆகையால் அறிவில்லாத நான், தேவரீருடைய கட்டளையை மறுத்து, அடியரல்லாதார் படுகின்றதுபோல் பாவத்துக்கு இப்போது உட்பட்டேன்; நிருமலனே, அந்தப் பாவமெல்லாம் அடியோடு ஒழிந்து போகும்படி, கிருபை செய்ய வேண்டும் என்று இரந்து நந்திதேவர் போற்றினர். (152)

(காருடச் சருக்கம் முற்றியது)

வேதகிரிச் சருக்கம்

ஒருதன் ஆணை மறுத்த உறுபவம்
கருதி ஏங்கும் நந்தி கலங்கலைப்
பெரிதும் நம்பன் மகிழ்ந்து, தன் பேரருள்
திருவிழிக் கடைவைத்து இவை செப்பினன்.

பொழிப்புரை : இவ்வாறு நந்திதேவர் தோத்திரஞ் செய்த அளவில், பரமசிவம் அந்த நந்திதேவரானவர் ஒப்பற்ற தம்முடைய கட்டளையை மறுத்ததனால் நேரிட்ட, பாவத்தைக் கருதி இரக்கங் கொண்டு, மனங்கலங்குவதை நோக்கி, மகிழ்ந்து, அவரிடத்தில் பேரருட் கடைக்கண் நோக்கம் வழங்கி இவ்வார்த்தை அருளிச் செய்கின்றனர். (153)

தெய்வவான் பதமேற் செய்த தீவினைக்கு
உய்வ தாக்கி, ஒழுக்கத்தின் உய்ப்பது
வையமே எனும் தன்மை மனம்கொளா
ஐயன் ஏயினன் நந்தியை ஆண்டுஅரோ

பொழிப்புரை : சிறப்புள்ள தேவபதவிகளினிடத்தில் செய்த பாவங்களில் இருந்து உய்யும்படி செய்து, நல்லொழுக்கத்திற் செலுத்தத்தக்கது பூலோகமே, என்பதைக் கயிலாயபதி திருவுளத்தமைத்து, நந்திதேவரை அவ்விடத்துக்கு ஏவினர். (154)

எல்லை மேதினி என்றனை ; மாதவம்
வல்லை யான்செய்து அதன்பயன் வாய்ப்பது,
தொல்லை போல்நின் துணையடி மீண்டுவந்து
ஒல்லை சேர்வ தொருதலம் யாவதோ?

பொழிப்புரை: பாவம் நீங்குவதற்கு ஏதுவாகிய இடம் பூலோகம் என்றருள் செய்தீர். நான் தவஞ் செய்து அதனால் வரும்பயனை விரைவில் அடைவதற்கும், துன்பம் நீங்கி மறுபடி முன்போல் தேவரீருடைய திருவடிகளை விரைவில் அடைவதற்கும், ஏதுவாகிய ஒப்பற்ற தலம் அந்தப் பூமியில் எதுவோ? (155)

நின் அடித் துணை நீங்கலும் ஆற்றலன்;
இன்ன குற்றச் சுமைக்கும் இசைகிலன்;
நன்னர்த் தானத்து நான் விரைந்தே வரம்
பின் எனது பெற, அருள்செய்க என்றான்

பொழிப்புரை: தேவரீருடைய திருவடிகளை விட்டுப் பிரியவும் ஆற்றுகின்றிலேன். இப்போது ஏற்பட்டிருக்கின்ற பாவமாகிய சுமையைச் சுமக்கவும் இசைகிலேன். ஆதலால் அந்தத் தலத்தில் நான் சென்று தவஞ் செய்யும்போது காலம் தாமதப்படாமல், விரைவில் வரம் பெற்றுக் கொள்ளும்படி அருள்செய்ய வேண்டும் என்று, நந்திதேவர் இரந்து விண்ணப்பஞ் செய்தனர். (156)

தன்னில் நேயமும் நந்தி தளர்ச்சியும்
கன்னி பாகன் உணர்ந்து உட் கரு ணையால்
இன்ன பாவம் இவன்எல்லை நீங்கலுக்கு
உன்னி னன்தன் உருத்திர கோடியே

பொழிப்புரை: நந்திதேவர் தம்மிடத்தில் வைத்திருக்கின்ற அன்பினையும், அவர் கொண்டிருக்கி தளர்ச்சியையும், பார்வதி பாகனாகிய பரமசிவம் திருவுளத்திற்கொண்டு, கிருபைகூர்ந்து இந்தப் பாவம் இவரினின்றும் நீங்குதற்குத் தாம் வீற்றிருந்தருளும் உருத்திரகோடி என்னும் தலத்தைக் கருத்துட் கொண்டருளினர். (157)

(வேறு)

அருத்தியின் நந்தி கேட்டி அளப்பில தானம் ஏனும்,
திருத்திகழ் அறுபத் தெட்டுண்டு: அவற்றினிற் சிறந்த தானம்,
வருத்தம தொழிக்கு மேனும் அவையுளும் வயங்குகின்றது
உருத்திர கோடித் தானம் என்பதொன் றுளது கண்டாய்

8708

பொழிப்புரை: நந்தியே விருப்பத்துடன் கேள். நாம் திருக்கோயில் கொண்டு வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள் செய்கின்ற தலங்கள் அளவில்லாதனவாக இருக்கின்றன. அவ்வாறு இருந்தாலும் அவைகளுக்குள் சிறப்புடன் விளங்கும் மேலான தலங்கள் அறுபத்தெட்டு உண்டு. அவைகளோ, தம்மிடத்தில் வந்தவர்களுடைய வருத்தங்களை எல்லாம் ஒழித்து விடும் அவைகள் அத்தன்மையுடையவைகளாய் இருந்தாலும், அவைகளுக்குள்ளும் மேலானதாய் விளங்குகின்ற உருத்திர கோடித் தலம் என்பது ஒன்றுண்டு. (158)

தீவிய இமய வெற்பின் தென்புலக் கங்கைத் தென்பால்
தாவிய இருநூ றும்;அத் தடங்கடற் குடபால் ஒன்றும்
ஓவிலாக் குக நதிக்கே யுத்தரத்து அரையாம் என்ப;
மேவி யோசனை இவைக்கு நடுஅது விளங்கும் அன்றே

பொழிப்புரை: திவ்வியமாகிய இமயமலைக்குத் தென்புறத்திருக்கும் கங்காநதிக்குத் தென் திசையில், பரவிய இருநூறு யோசனையாம்; பெரிய சமுத்திரத்துக்கும் மேற்கில் ஒரு யோசனை தூரமாம்; நீங்குதலில்லாத சேயாற்றுக்கு வடக்கு அரையோசனை தூரமாம் என்று பெரியோர்கள் கூறுவர். இந்த நான்கு யோசனையுள்ள எல்லைக்குள் விளங்குவது அந்த உருத்திரகோடித் தலம். (159)

ஒல்லையே கதியிற் சேர்க்கும் உருத்திர கோடி வட்டத்து
எல்லை யோசனை ஓர் ஐந்தாம்; இதற்குநாற் றிசைதோறு எல்லை
மல்லல் யோசனை ஒன்றோடு வரும்இரு குரோசம் என்ப;
செல்லல்மாப் பிறவி நோய்க்கு மருந்ததாய்த் திருந்தும் அன்றே

பொழிப்புரை: தன்னிடத்தில் அடைந்தவர்களை விரைவாக நற்கதியிற் சேர்க்கத் தக்க உருத்திர கோடி வட்டத்து எல்லை, ஐந்துயோசனை தூரமாம். இதற்கு நான்கு திசைதோறும் எல்லை, வண்மையுள்ள ஒரு யோசனையுடன் இரண்டு குரோசமுமாம் என்பர் மேலோர்கள். அந்த உருத்திரகோடித் தலமானது, வருத்தமுள்ள பெரிய பிறவிப்பிணிக்கு மருந்தாகி விளங்கும். (யோசனை — பத்தரை நாழிகை தூரம்; குரோசம் — கூப்பிடு தூரம்). (160)

(தொடரும்).

— ஆசிரியர்

JL Q2m211) NS9TK N73.157



திருநெல்லிக்கா (வல்) திருநெல்லிவனநாதர் திருக்கோயில் திருப்பணிக் கால்கோள் விழாவில், தலைமை தாங்கிய உணவு அமைச்சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்களுக்கும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களுக்கும் பரிவட்டம் கட்டிச் சிறப்பிக்கும் காட்சி. (18-1-73)

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற முதியோர் இல்லம் திறப்புவிழாவில் அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் பி. ஏ. பி. எல். ஐ. ஏ. எஸ்., அவர்கள் உரைநிகழ்த்துதல். மற்றும் அறங்காவலர் குழுத்தலைவர் திரு. எல் லாராயணன் செட்டியார், துணை ஆணையர் திரு. எம். முருகேசன், நிர்வாக அதிகாரி திரு. சி. எஸ். தீனதயாளு முதலியோர்கள். (15-2-73)



Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34. Printed at Sivarts Printers, 119, Strahans Road, Madras-12. Editor : N. R. Murugavel, M.A., M.O.L.